81

181

OFFICE OF ... 23 MAR 1942 MADRAS

கிராம சபை கீர்த்தனைகள்.

337

337

"சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், அருட்
பாடல்களினாலும், உங்கள் இருதயங்களில்
நன்றியறிதலோடு கடவுளைப்
பாடுவீர்கள்."
கொலோ: 3:16.

ஜி. ஸ்டீபன்,
சுவீடன் மிஷன்,
கருணாகரபுரி.

கிணத்துக்கடவு
1—3—42

விலை அணா ஏழு.

விக்டோரியா பிரஸ், கோவை.

1942.

Q6:4146

339

முன்னுரை.

"கர்த்தரைப் பாடி அவருடைய நாமத்தைத் தோத்தரித்து நாளுக்கு நாள் அவருடைய ரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்." சங். 96, 2.

இந்தியக் கிறிஸ்தவ சபைகள் சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், அருட்பாடல்களினாலும், நன்றியறிதலோடு கடவுளை மகிமைப் படுத்துவதற்கு இக்கிராமச் சபைக் கீர்த்தனைகள் மிக உதவியாயிருக்குமென நம்பி இம்முன்னுரையை மனமுவந்து எழுதச் சம்மதித்துள்ளேன்.

கோயமுத்தூர் ஜில்லா கருணாகரபுரி யென்னும் சுவீடன் மிஷன் சுவிசேஷ ஸ்தலத்திலிருக்கும் சங்கை ஜி. ஸ்டீபன் போதகர் சென்ற பத்து வருஷங்களாக கிராமக் கிறிஸ்தவர்களுக்கு எளிதில் விளங்கக்கூடிய வண்ணம் கடவுளை பக்தியோடு ஆராதிக்கவும், இந்திய முறையில் அவரைத் துதித்துப் பாடவும் பல முறைகளைக் கையாடி உழைத்து வருகிறார். அவ்வனுபவத்தின் பயனாக கிராம சபை தின ஜெப ஆராதனை ஒழுங்கு என்னும் நூலையும், அதற்கிசைய இக்கிராம சபைக் கீர்த்தனைப் புத்தகத்தையும் அரும்பெரும் பிரயாசையுடன் தயாரித்துக் கொடுத்திருப்பதற்காக நாம் அவருக்கு மனமார்ந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்

தேவ ஆராதனை பரவசமுறச்செய்யும் பாடல்களின்றி மனோ ஆத்ம எழுப்புதலைச் சம்பூரணமாய் அளிக்காது என்பது எம் கை கண்ட அனுபவம். இக்கீத புத்தகம் பற்பல கிராம சபைகளில் அமலனுக்கு மகிமையாக உபயோகிக்கப்படத் தக்கதாய் இரு நூறு கீர்த்தனங்கள் அடங்கியுள்ளது. இக்கீதங்களின் பொருள் முறை C. L. S. கிறிஸ்தவ கீதத்தின் அட்டவணைக்கேற்ப, அந்தந்தச் சந்தர்ப்பத்திற் குரிய கீதங்களை எளிதில் தெரிந்தெடுக்கக் கூடிய வண்ணம் பாகு பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும் இதிலுள்ள கீர்த்தனைகள் அனைத்தும் ஐந்தைந்து கீதங்களாகப் பகுக்கப்பட்டு யாவரும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய பொருத்தமான தலையங்கங்களின் கீழ் அமைத்திருத்தல் சபைகளுக்கு அதி பிரயோஜனமான ஓர் சிறந்த முறையாகும்.

கிராமச் சபைகளின் உபயோகத்திற்கு இவ்வளவு கீர்த்தனைகள் அவசியமா எனச் சிலர் எண்ணலாம். ஒவ்வொரு பொருளின் பேரில் ஐந்தைந்து பாடல்கள் தொகுத்திருப்பது, அந்தந்தச் சபையின் அறிவு, வளர்ச்சியின் தன்மைக்குத் தக்கதாய் இரண்டொன்றைத் தெரிந்தெடுத்து சபைகள் அப்பியாசிப்பதற்கு அனுகூலமாயிருக்கிறது. கிராம சபைகளையின்றி பட்டணச் சபையாரும் இக்கீர்த்தனைப் புத்தகத்தை உபயோகித்துப் பயன் பெறுமாறு பொருளுக்கேற்ற பல கீதங்கள் சேர்க்கப்கப்பட்டிருப்பது பிறிதோர் சிலாக்கியமே. இப்புத்தகத்தில் C. L. S. கிறிஸ்தவ கீதங்கள் 103ம், ஆசிரமபாமாலை கீதங்கள் 82ம், தேவாராதனைக் கீர்த்தனைகள் 80ம் அடங்கியுள்ளன.

இஸ்ரவேலின் துதிகளுக்குள் மகிழ்ந்து வீற்றிருக்கும் திரியேகக் கடவுள் தாமே, இக்கீர்த்தனங்களினால் குடும்பங்களிலும், கிறிஸ்தவ சபைகளிலும், பாடசாலைகளிலும், பஜனை சங்கங்களிலும், சுவிசேஷப் பிரபல்லியத்திலும் மகிமைப்படுவாராக.

“ கர்த்தருக்கு மகிழ்ச்சியோடே ஆராதனை செய்து அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவர் நாமத்தைத் தோத்திரிப்போம். அவரை மேளத்தாலும், கீதவாத்தியத்தாலும் துதிப்போம். அவரை வீணையாலும் கின்னரத்தாலும் கைத்தாளங்களாலும் கீர்த்தனம் பண்ணுவோம். சுவாசமுள்ளதெல்லாம் கர்த்தரைத் துதிப்பதாக. ”

லுத்தரன் சபை
பல்லடம்,
1—3—'42.

V. G. ஆசீர்வாதம்,
போதகர்.

கீர்த்தனைகளின் பொருள் முறை.

1. துதி தோத்திரக் கீதங்கள்.

16—20, 44, 52, 132, 138, 146—150, 151—155, 156, 157, 159, 160, 169, 171, 187, 189, 192.

2. திரியேகக் கடவுள். 52, 153.

(1) பிதா : 41—45, 150, 168, 169, 196.

(2) குமாரன்:—

முதலாம் வருகை:— 101, 102, 105.
பிறப்பு:— 106—110, 192.
திருநாமம்:— 83, 156—160.
நேசர்-மீட்பர்:— 19, 41, 46—50, 120, 146, 147, 148, 167, 170, 171, 175, 189, 194, 195.
பவனி:— 116—118, 186.
பாடுகள்:— 63, 111—113.
கெத்சேமனே:— 119.
கொல்கதா—சிலுவை:— 61, 62, 64, 65, 114, 115, 120, 122, 123, 172, 195.
மரணம்:— 121, 124.
அடக்கம்:— 125.
உயிர்த்தெழுதல்:— 25, 71, 72, 126—128.
பரமேறல்:—129.
இரண்டாம் வருகை-நியாயத் தீர்ப்பு:— 67—69, 103, 104, 185, 191, 193.

(3) பரிசுத்த ஆவி:— 30, 51, 53—55, 76, 130, 190.

3. திருச்சபை.

(1) ஆராதனை ஆரம்பம்:— 11—15, 16—20, 41—45, 46—50, 52, 86—88, 90—95, 151—160, 171, 175.
(2) தேவவசனம்:— 81, 82, 84.
(3) ஓய்வு நாள்:— 5.
(4) ஞானஸ்நானம்:— 26—29.
(5) திடப்படுத்தல்:— 57—60, 76—80.
(6) திருவிருந்து:— 36—40.
(7) ஆத்தும பிரதிஷ்டை:— 58—60, 78—80, 84, 85, 133, 142, 144, 188.
(8) ஆலயப் பிரதிஷ்டை:— 86—88, 90.

(9) பண்டிகை நாட்கள்:—
சேர்ப்பின் பண்டிகை:— 89, 199.
மிசியோன் தோத்திரப் பண்டிகை:- 84, 85, 131-133, 141—145, 181.
சீர்திருத்தலின் பண்டிகை:— 56, 134, 135.
சகல பரிசுத்தவான்களின் திருநாள்:— 136, 137.
(10) விசேஷித்த கீதங்கள்:—
மரியம்மாள் கீதம்:— 192.
பாக்கியர் யார்:— 192.
அர்ச்சனை கீதம்:— 200.
பத்துக் கற்பனைகள்:— 196.
விசுவாசப் பிரமாணம்:— 200.
கர்த்தருடைய ஜெபம்:— 200.

4. கிறிஸ்தவ ஜீவியம்.
(1) பாவிக்கு அழைப்பு:— 57, 65, 66, 120.
(2) பாவ அறிக்கை:— 47, 49, 50, 51, 173, 176—180, 188.
(3) பாவ மன்னிப்பு:— 120, 165, 195.
(4) மன்னிப்பின் ஆனந்தம்:— 23, 74, 96, 98—100, 134, 189, 192, 193.
(5) நம்பிக்கை:— 49, 166—170, 173, 175.
(6) ஜெபம்:— 11—15, 91—95, 200.
(7) சுவிசேஷ ஊழியம்:— 83—85, 141—145.
(8) அன்பு—சகோதர ஐக்கியம்:—198.
(9) ஈகை:— 199.
(10) மோக்ஷம்:— 73—75, 96-100, 136, 137, 181-183, 191, 193.

5. விசேஷித்த சமயங்கள்.
(1) காலை:— 1—4.
(2) மாலை:— 6—10.
(3) பிறந்த நாள், வருஷோற்சவம்:—97, 138, 139, 140, 166, 168.
(4) விவாகம்:— 31—35.
(5) மங்களம்:— 21—25.
(6) பிரிவுபசாரம்:— 166, 168, 200.
(7) கவலை, வியாதி, துன்பம்:— 161—165, 194.
(8) கஷ்டத்தில் துணை, நம்பிக்கை:— 160, 166—170, 171—175.
(9) மரணம்:— 70, 174, 184.

OFFICE OF THE ... 23 MAR 1942 MADRAS

கீதங்களின் அகராதி.

கிறிஸ்தவ கீதம்.		கிராம சபை கீதம்.
334	அதிகாலையிலுமைத் தேடுவேன் முழுமனதாலே	3
	அதே ஆனந்தம் பக்தி அதே ஆனந்தம்	98
	அருமை ரட்சகா யேசு நாதா	28
	அருமை ஏசு தாயை விட்டு அகன்றவுடன்	116
	அருணோதயம் ஜெபிக்கிறேன்	95
251	அன்பே பிரதானம் சகோதர	198 (1)
309	அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும்	38
67	அல்லேலு அல்லேலூயா மகத்துவ	126
	அல்லேலூயா ஜெயமே அமலனெழுந்தார்	71
	அறுப்போ மிகுதி ஆட்கள் தேவை	143
242	ஆ இன்பக் காலமல்லோ ஜெபவேளை	11
3	ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ	151
	ஆண்டவனே கிருபை கூராய்	179
	ஆதம் புரிந்த பாவத்தாலே மனுடனுதி	111
	ஆதாரம் நீதான் ஐயா என் துரையே	42
	ஆதியந்த மில்லாதா துணை புரி	171
	ஆதியாம் பரஞ்சோதியின் சுடரே	149
78	ஆத்துமமே என் முழு உள்ளமே	138
	ஆயத்த ஜெபம் செய்ய பெலன தாரும்	91
165	ஆரும் துணை இல்லையே எனக்	174
	ஆவியின் ஞானஸ்நானம் தாரும்	30
116	ஆவியை மழைபோல யூற்றும்	54
	ஆவியை அருளும் தேவரீர்	55
359	ஆனந்தமே ஜேயா ஜேயா	97
	ஆனந்தமே பரமானந்தமே	99
300	இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும்	26
	இத்தரையில் என்னை மீட்க ஏழையாக	192
268	இதோ அடியேன் இருக்கிறேன்	133
	இன்ப துன்ப நேரத்திலும் உன் அன்புள்ள	194 (2)
69	இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார் கெம்பீரமாய்	127
350	இம்மனுக் குன்னருள் ஈபரவாசா	34
363	இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த	139
181	இயேசுவே கிருபாசனபதியே	47
131	இயேசு நாமம் ஒன்றை நம்புவீர் பூலோகத்தாரே	158
	இயேசு நாமமே தெய்வீக	159
94	இயேசுவின் நாமமே திருநாமம்	157
	இயேசுவின் திருநாமம்	160
	இயேசெனும் மகத்துவ நாமம்	156
167	இரங்கும் இரங்கும் கருணைவாரி	177
	இல்லார்க்கும் எளியார்க்கும்	175
	இனி நமக்கென்ன பயமேது	165
	இன்னமும் நாம் இயேசு பாதத்தில்	200

	இன்பக்கானானுக்குள் ஏழை செல்ல	74
	இன்னேரம் வந்தென்னை	188
284	உச்சித மோட்ச பட்டணம் போக	73
	உருகாயோ நெஞ்சமே நீ குருசினில்	65
	உனக்கு நிகரானவர் யார்?	146
227	உனக்கொத்தாசை வரும் நல்	166
325	உன்னதத்தின் தூதர்களே ஒன்றாக	132
271	உன்றன் திருப்பணியை உறுதியுடன்	142
	உன் தேவனாகிய கர்த்தர் நாமமே	196
	உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?	104
	ஊழியம் வளர்ந்தோங்கச் செய்யும்	141
	எங்கே யாயினும் சுவாமி எங்கேயாயினும்	60
	எங்கே சுமந்து போகிறீர் சிலுவை நீர்	123
	எந்தன் ஜீவன் சொந்தமாக ஈகிறேனையா	78
186	என்னையும் உமதாட்டின் மந்தையோ	27
220	என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்	58
208	என் மீட்பர் உயிரோடிருக்கையிலே	167
318	என்ன பாக்கியம் அம்மா	197 (1)
	என்ன என் ஆனந்தம் என்ன என் ஆனந்தம்	96
68	எழுந்தார் இறைவன் ஜெயமே	128
	எஜமான் இருவரைச் சேராதே அப்போ	164
80	ஏசுவையே துதி செய் நீ மனமே	16
	ஏசுகிறிஸ்துவே தெய்வம்	19
345	ஏசுநாயகா வந்தாலும்	33
109	ஏசு கிறிஸ்துநாதர் எல்லாருக்கும் ரட்சகர்	46
95	ஏசு நசரையின் அதிபதியே	50
	ஏசு ராஜா வருவார்	69
	ஏசு தேவா இவ்வாலயம் வா	86
	ஏசு நேசர் அறிவாரென்னை	189
44	ஏன் இந்தப் பாடையா நான்	119
330	ஐயனே உமது திருவடிகளுக்கே	1
337	ஐயரே நீர் தங்கும் என்னிடம்	6
	ஐயா கொல்கதாமலைநாதா	172
166	ஐயையா நான் பாவி	176
	ஒருபோதும் மறவாத உண்மை	168
126	ஒரு மருந்தரும் குருமருந்தே	170
	ஓசன்னா பாடுவோம் ஏசுவின் தாசரே	118
340	ஓய்வு நாளிது மனமே தேவனின்	5
	கண்ணுக்குக் காணும் பூவுமல்ல	190
	கர்த்தரின் திருவுடல் கல்லறைக்குப்போகுது	125
304	கர்த்தரின் பந்தியில் வா சகோதரா	36
	கர்த்தாவே ஆவியோடும் உண்மையோடும்	15
	கர்த்தருக்குக் காணிக்கை பக்தியாய்	199 (1)

	கல்வாரி மலையோரம் வாரும் பாவம் தீரும்	115
	கவலை வைக்காதே மகனே	161
	காண்பேன் நான் யேசுராஜனை	191
	காருண்ய ராஜனே அனுதாபக்கடலே	148
329	காலமே தேவனைத்தேடு	2
	கிருபை புரிந்தெனையாள் நீ பரனே	12
148	குணப்படுபாவி தேவ கோபம் வரும்	66
105	கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்	17
64	குருசினில் தொங்கியே	61
	கெம்பீரமாகவே சங்கீதம் பாடுவோம்	131
	கொல்கதா போகிறாரே குருசெடுத்து	122
250	சகோதரர்களொருமித்து சஞ்சரிப்பது	198 (2)
49 + 50	சரணம் சரணம் அனந்தா சட்சிதானந்தா	63
5	சர்வ லோகாதிபா நமஸ்காரம்	20
72	சாலேமின் ராஜா சங்கையின் ராஜா	103
	சிலுவை சிலுவை சிலுவையே சிலுவை	64
	சிலுவைக் கொடிபிடித்து சிறுவரே நாம்	186
	சிறந்த சிலுவை வீரர்	137
	சிந்தை செய்யும் என்னில் ரம்புவீர்	76
83	சீரேசுநாதனுக்கு ஜெய மங்களம்	21
4	சீர்திரியேக வஸ்தே நமோ நமோ	52
6	சீர்மிகு வான்புவிதேவா தோத்திரம்	44
	சுத்தபரன் சுத்த ஆவியே	130
98	சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசு	154
107	சுபஜெய மங்களமே—நித்திய	25
	சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது	7
	சென்ற பகலில் எமைக்காத்து	8
93	சொல்லரும் மெஞ்ஞானரே மேன்மைப்பிரபுவே	147
301	ஞானஸ்நானமா ஞான திரவியமே	29
219	தந்தேன் என்னையேசுவே இந்த நேரமே	59
286	தந்தானை துதிப்போமே திருச்சபையோரே	155
	தந்தையும் நீர் தாய் தமர் நீர்	169
295	தருணம் இதுவே கிருபை கூரும்	13
	தருமம் செய்ய நிருபந்தனில்	199 (2)
	தலையே சாய்ந்தனையோ	124
267	தாசரே இத்தாரணியை அன்பாய்	144
	திருமகனார் உவந்தளித்த	37
285	திருமா மறையே—அருள்பதியே	88
	திருப்பதம் சேராமல் இருப்பேனோ	90
	திரு தேவனின் மகனே	112
	திருத்துவப் பொருளே திரியேக	153
209	தினமே நானுனை தேடிப்பணிய	152
121	தீயமனதை மாற்ற வாரும் தூய ஆவியே	51

	துதிக்கிறோம் உம்மை வல்ல பிதாவே	18
81	துதிதங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்	109
	தேவதூத நாயகா தெய்வீக தாயகா	24
216	தேவப்பிதா எந்தன் மேய்ப்பனல்லோ	41
316	தேவனே எசுநாதனே இத்தேவ ஆலயம்	87
	தேவசுதன் பூவுலகோர் பாவமெல்லாம் தீர	121
	தேவனே உன் வல்லமையை	150
125	தேன் இனிமையிலும் எசுவின் நாமம்	83
85	தோத்திரம் செய்வேனே	108
196	நம்பி வந்தேன் மேசையா நான்	49
200	நம்பினேன் உனதடிமை நான் ஐயா	77
157	நரனும் எளியேன் நற்கதிசேர	180
	நல்ல மரணம் தாரும் தேவனே	70
140	நித்யானந்தத்தை நாடு	100
362	நித்தம் அருள் செய்தயாளனே	140
190	நின்பாதம் துணை அல்லால்	173
	நின்னடிக்கன்பு செய்யா நீசனே	178
152	நீயுனக்குச் சொந்தமல்லவே	79
	நீர்தானே வருபவர் நீர்தானே	105
232	நெஞ்சே நீ கலங்காதே	162
218	பக்தியாய் ஜெபம் பண்ணவே	93
43	பரனே பரப் பொருளே	113
	பவனி செல்கின்றார் ராஜா	117
	பஜித்திடும் சுவிசேட திருச்சபையோரே	134
	பாக்கிய ரிவ ராவாரே பரமன் முன்னே	197 (2)
	பாருமுந்தன் கிருபைக்கண்ணாலே	35
58	பாருங்கள் தொடர்ந்து வாருங்கள் கொல்கதா	114
103	பாவிக்கு நேசராரே	48
57	பாவி நான் என்ன செய்வேன்	62
135	பாவம் போக்கும் ஜீவநதியைப்பாராய்	120
	பாலியராய் துதி ஏற்றினோமே	187
	பாவதோஷம் நீக்கிட மீட்பரின் ரத்தம்	195
	பூமியின் குடிகளே நீர் தாமதமிலா	145
33	பெத்தலையில் பிறந்தவரை போற்றித்துதி	106
	பெத்தலேகேம் ஊரோரம் சத்திரத்தை	107
305	போசனந் தானுமுண்டோ	40
356	பொன்னகர் பயணம் போகும்	184
150	மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ	57
70	மகிழ் மகிழ் மந்தையே நீ அல்லேலூயா	129
	மங்களம் பிதா ஜெய மங்களம்	22

	மண்டலாதிபா உனை அண்டிக்கொண்டோமே	45
277	மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்	185
	மலரெடுத்துப் பூ முடித்து	31
	மன்னன் முன்னே நிற்போம் நாம்	193
19	மன்னுயிர்க்காக தன்னுயிர் விடுக்க	101
	மாட்சி மிகும் மோக்ஷநகர் மகிமை	183
	மாம்பூ மகிழம்பூ மணக்கும் ஞான	32
385	யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்	72
	யேசு சுவாமி ஏழை என்னை ஈகிறேனையா	80
	ராவில் என்னை ரட்சியும் கருணையொடு	10
106	ராஜ ராஜப் பிதா மைந்ததேசு	110
	வரந்தர வா வா வாமனுவேலா	14
71	வரவேணும் எனதரசே	102
76	வருவார் விழித்திருங்கள் யேசுநாதர்	68
	வாருமையா போதகரே வந்தெம்மிடம்	9
	வானோர் வந்திக்கும் இந்தப்பந்திக்கு	39
	வாரும் வாரும் தேவ ஆவி ,,	53
281	வான நகரத்தின் மேன்மை என்ன சொல்லுவோம்	75
	வா வா நேசா வளர் சுவிசேஷத்தின்	84
358	வானமும் பூமியும் வகித்திடும் தேவே	89
235	வாரா வினை வந்தாலும் சோராதே	163
	வானம் பூமி யா வற்றிலும் யேசு மேலானவர்	194 (1)
	வாழ்த்திப் பாடுவோம் நாம்	135
328	விடியும் நேரத்தில் வெள்ளி உதிக்குது	4
226	விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்	56
	வெளிச்ச மாக்கி ராப்பகலை	43
327	வெள்ளை யங்கி தரித்த விமலமுக்தர்	136
245	வேத புத்தகமே வேத புத்தகமே	81
249	வேதமே என்ன சொல்லுவேன்	82
77	வையகந்தனை நடுத்தீர்க்க யேசு	67
	ஜீவ நதியின் ஓரமாய் சீயோன் பட்டணம்	182
270	ஜீவ வசனம் கூறுவோம் சகோதரரே	85
	ஜெய ராஜக்கொடி ஏற்றிக்காட்டியே	181
	ஜெயம் ஜெயம் அல்லேலூயா ஜெயம்	23
	ஜெபம் செய்யப் போதித்த ஜெகநாதா	92
240	ஜெப மறவாதே நேசனே எக்காலமும் நீ	94

காலைக் கீர்த்தனைகள்.

இராகம் : காம்போதி] 1 [ஆதி தாளம்.

1. ஐயனே உமது திருவடி களுக்கே
ஆயிரந்தரம் தோத்ரம்—யேசு
மெய்யனே உமது தயைகளை அடியேன்
விவரிக்க எம்மாத்திரம்

2. கண்விழி போலே அடியேனைக் காத்த
கர்த்தனே நமஸ்காரம்—இந்த
மண்மிசையும்மா லன்றி இப்பூச்சி
வாழுமோ இந்நேரம்.

3. உடலுயிரும்மால் ஒரு குறைவின்றி
உய்கிற தம்பரனே
திடமுடனுமக்கே ஒப்புவிப்பே னென்னைச்
செப்பரும் அருள்கரனே.

4. சென்றதா மிரவில் தேவரீர் என்னைச்
சேர்த்தரவணைத்தீரே—இன்றும்
அந்தடைவா யிப்பகலிலும் கிருபை
யாகவா தரிப்பீரே.

5. இருதயந் தனைநீர் புதியதே யாக்கும்
ஏழையைக் குணமாக்கும்.
கருணையாயென்னை யுமதகமாக்கிக்
கன்மமெல்லாம் போக்கும்.

6. நாவிழி செவியை நாதனே இந்த
நாளெல்லாம் நீர் காரும்
தீவினை விலகிநான் திருமுகம் நோக்க
தெய்வமே அருள்கூரும்.

7. கைகாலால் நான் பவம்புரி யாமல்
கத்தனே துணை நில்லும்
துய்யனே உம்மால்தான் எனதிதயம்
தூய்வழியே செல்லும்.

8. ஊழியந்தனை நான் உண்மையாய்ச் செய்ய
உதவி நீர் செய்வீரே—இந்த
ஏழை நானுமக்கே இசைய நல்லாவி
இன்பமாய்ப் பெய்வீரே.

9. அத்தனே உமது மகிமையை நோக்க
அயலான் நலம் பார்க்க—வெகு
சித்தமா யருளும் மெய்விசுவாசம்
தேவனே உமக்கேற்க.

10. இன்றுமென் மீட்பைப் பயம் நடுக்கத்தோ
டேயடியேன் நடத்தப்
பொன்றிடா பலமே தாரும் என் நாளைப்
பூவுலகில் கடத்த.

11. இந்த நாளிலுமே திருச்சபை வளர
ஏகா தயை கூரும்
தந்தையே நானதற் குதவியாயிருக்கத்
தற்பரா வரந்தாரும்.

12. ஊனுடை சுகமே யருள்வதுன் பாரம்
உன்னதத் திருநாதா
மாண்புற அளித்தேன் என்னையென் னவரை
வல்லமை நிறைபாதா.

13. யேசுவின் முகமே நோக்கிநீர் ஐயா
ஏழையின் ஜெபம் கேளும்—உந்தன்
தாசனை உமது ராச்சியந் தனில்நீர்
தற்காத்தே யாளும்.

சாமுவேல் ஐயர்.

இராகம்-மோகனம்] **2** [ரூபக தாளம்.

பல்லவி.

காலமே தேவனைத்தேடு;—ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு

அனுபல்லவி.

சீலமுடன் பதம் பாடிக்கொண்டாடு
சீரான நித்திய ஜீவனை நாடு — காலமே

சரணங்கள்.

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே—மனு
மைந்தனெனப் பெயர் வைத்திருந்தாரே
உன் சிருஷ்டிகரை நீ உதயத்தில் எண்ணு
உள்ளங் கனிந்து தனிஜெபம் பண்ணு காலமே

2. பாவச் சோதனைகளை வெல்லு—கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு
ஜீவ கிரீடஞ் சிரத்தி லணியச்
சிந்தனை செய் மனுவேலனைப் பணிய காலமே

3. சிறுவர்கள் என்னிடஞ்சேர—தடை
செய்யாதிருங்கள் என்றார் மனதார;
பரலோக செல்வமவர்க்கு பலிக்கும்
பாக்கிய மெல்லாம் பரந்து ஜொலிக்கும் காலமே

4. வேலையுமக்குக் கைகூட—சத்ய
வேதன்கிருபை வார்த்தை மன்றாட
காலையில் தேடுவோர் எனைக் கண்டடைவரரே
கண்விழித்து ஜெபஞ் செய்யுமென்றாரே காலமே

ஞானமணி ஐயர்.

இராகம் நவரோஜ். 3. ஏகதாளம்.

பல்லவி.

அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு மனதாலே
தேவாசீர்வாதம் பெற நாடுவேன் ஜெபதபத்தாலே

அனுபல்லவி.

இதுகாறும் காத்த தந்தை நீரே!
இனிமேலும் காத்தருள் செய்வீரே,
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே
பத்திரமாய் எனை உத்தமனாக்கிடும் தேவே! — அதி

சரணங்கள்.

1. போன ராமுழுவதும் பாதுகாத்தருளின போதா! - எப்
போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்த நல்நாதா!
ஈனப்பாவிக்கேது துணை லோகிலுண்டு பொற்பாதா!
எனக்கான ஈசனே! வானராஜனே!
இந்த நாளிலும் ஒரு பந்தமில்லாமல் காரும் நீதா!- அதி

2. பல சோதனைகளால் சூழ்ந்து நான் கலங்கிடும்போது,- தப்
பாது நின்கிருபை தாங்கிடவேணுமப்போது,
விலகாது என் சமுகம் என்ற வாக்கில் தவறேது!
விசுவாசம் கொண்டு மெய்ப்பாசமுண்டிட,
விக்கினம் யாவிலும் வெற்றி காணுவேன் மலைவேது?- அதி

3. நரர் யாவர்க்குமுற்ற நண்பனாய் நடந்திடவையே! — நீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச்செய்யே!
பரலோக ஆவியை நல் மாரிபோலெனிலே பெய்யே!
புகழான நாதனே! வேதபோதனே!
பூரணமாயுனைப் போற்றுவேன் தினந்தினம் மெய்யே! — அதி

பரமானந்தம் ஐயர்.

இராகம் பூபாளம். **4.** தாளம் சாப்பு.

பல்லவி.

1. விடியும் நேரத்தில் வெள்ளி உதிக்கிது
வீட்டுச் சேவலும் விழித்துக் கூவுது
வடிவில் மிகுந்ததோர் பறவை பாடுது
வணங்க மனமே எழுந்திராய்.

2. காகங்கூவுது காலையாச்சுது,
காணும் கீழ்த்திசை வெளுத்துக் காணுது;
அகமனதினில் அடியார் துதிக்கிறார்
அதிக சீக்கிரம் எழுந்திராய்.

3. மயில்கள் தோகையை விரிக்க நெழிக்குது
மகத்வ மிருகங்கள் ஓடி ஒளிக்குது
குயில்கள் ஓசையைக் காட்டத் துவக்குது
குருவை வணங்க நீ எழுந்திராய்.

4. அந்த காரங்கள் அகன்று போகுது
அடுக்குத் தாமரை அரும்பு மலருது
இந்த நேரத்தில் இணங்கித் துதி செய்தால்
இரக்கம் கிடைக்குமே எழுந்திராய்

5. ஏசு நாமமே இன்ப ரசமென
ஏற்றுத்துதி செய்யும் அடியார்க்கருள் செய்ய
ஏசு நாமத்தை எண்ணி இக்காலை
ஏழை மனமே நீ எழுந்திராய்.

ஈசாக்கு ஐயர்.

இராகம்-கல்யாணி] 5 [ஆதி-தாளம்.

பல்லவி.

ஓய்வு நாளிது மனமே தேவனின்
உரையைத் தியானம் செய் கவனமே.

அனுபல்லவி.

நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேஷ வசனமே.

சரணங்கள்.

1. ஜீவ சுகபுத்திர செல்வம் தந்தவர்
சேவடி உமக் கபயமே
மேவி அவர் கிருபாசனத்தின் முன்
வேண்டிக் கொள் இது சமயமே.

2. ஆறு நாளுனக் களித்தவர்–இளைப்
பாறி எழினில் களித்தவர்
கூறும் பூரண ஆசீர்வாதத்தை
குறித்துனை இதற் கழைக்கிறார்.

3. கர்த்தர் ஆசனம் குறுகிக் கேள் இன்று
காலை நண் பகல் மாலையும்
சுத்தம் நாடுவோர் யாவரும் வந்து
துதி செய்யும் இத் தேவாலயம்.

4. ஆத்ம தேகம் நீ கடவுளுக்குப் படைப்
பாற்ற நற் சுப நாளிதே
அறையிலே சமுசார ஜெபம் செய்வோர்
அடைவர் பலனிதில் அதனமே.

பாளையங்கோட்டை.

மாலைக் கீர்த்தனைகள்.

இராகம்-சங்கராபரணம்] 6 [ஏக-தாளம்.

கண்ணிகள்.

1. ஐயரே நீர்தங்கும் என்னிடம்
ஐயரே நீர்தங்கும்—இப்போ
தந்தி நேரப்பொழு தஸ்தமித் தாச்சே
ஐயா நீர் இரங்கும்.

2. பகல் முழுதுங் காத்தீர், சென்ற
பகல் முழுதுங் காத்தீர்—தோத்ரம்
பரமனே இந்த இரவிலும் வாரும்
பாவியை நீர் காரும்.

3. தங்கா தொருபொருளும் என்னிடம்
தங்கா தொருபொருளும்—யேசு
தற்பரனே நீர் ஒருவரே யென்னில்
தங்கித் தயைபுரியும்.

4. உயிரே துணையன்றிப் பாவிக்
குயிரே துணையன்றி—எந்தன்
உடல் உயிர் உம்மால் உய்கிறதையா
உத்தமனே தங்கும்.

5. நீர் தங்கிடும் வீட்டில் யேசுவே
நீர் தங்கிடும் வீட்டில்—எல்லாம்
நிறைவே குறை வுண்டாமோ கர்த்தா
நின்னை விடமாட்டேன்.

6. என் பாவமன்னியும் இறையே
என் பாவமன்னியும்—அப்போ
தெளியேனும்மோ டயர்வேனிரவில்
எனக்கோர் திகிலேது.

7. எனக்கு நீர் காவல் என்றும்
எனக்கு நீர்காவல்—என்தன்
இனத்தார் ஜனத்தார் எளியோர் வலியோர்
எல்லவர்க்குங் காவல்.

8. உம்மோடே படுப்பேன் ஐயா
உம்மோடே படுப்பேன்—இரவில்
உம்மோ டயர்வேன் சேதமில்லாமல்
உம்மோ டெழுந்திருப்பேன்.

9. மரணம் ஜெயித்தோர்நீர் மெய்யாய்
மரணம் ஜெயித்தோர் நீர்—உம்மால்
மரணமே கூறெங்கே நரகே நின்
வலுஜெய மெங்கென்பேன்.

சாமுவேல் ஐயர்.

இராகம்-சங்கராபரணம்] 7 [ஏகதாளம்.

1. சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது
சோர்ந்த என்தேகம் அயர்ந்துமே இளைப்பாறப்போகுது
தேவா கிருபைகூர்ந்து காருமையா.

2. பகல் முழுவதும் பட்சமாய் என்னை பாதுகாத்தீரே
சகல தீமையுமகல வைத்தருள் நலமுந்தந்தீரே
சுவாமி உந்தன் பாதம் பணிகிறேன்.

3. பாதகம் மிக புரிந்தேன் பரம நாயகா
பாவி நானிந்த நாளிலும் பல தீவினைசெய்தேனையா
கோபமின்றி என்பாவம் பொறுத்திடுவாய்.

4. ராவில் வரும் மோசமொன்றும் என்னைச் சேராமல்
பேயின் சர்ப்பனை தீய சொர்ப்பனம் மனதில்நேராமல்
நேயா நின் நல்தூதர் காவல்தா.

5. உற்றார் உறவினரு மென்னிஷ்டர் நேசரும்
இந்த இரவினிலுந்த னடைக்கலந் தன்னிலே தங்கிடவும்
தாதா நீயே தயைசெய் திரங்குவாய்.

6. ஆத்துமம் சரீரம் எனக்கான யாவையும்
அப்பனுன் கையிலொப்புவித்து நான் அமர்ந்து [தூங்குவேன்
ஐயனே உன் பொன்னடி சரணம்.

ஜி. சாமுவேல்.

---

8 கண்ணிகள்.

1. சென்ற பகலில் எமைக்காத்து
தீமை சதி மோசமும் நீக்கி
அன்றுடக வமுதையுமருளி
ஆதரவாய் எம்மோடிருந்து

2. என் றெழிலாசீர் பெறச்செய்தாய்
ஈசா வாசா பவ நாசா
நன்றி அறிதல் தோத்திரங்கள்
நாதா உமக்கே ஒருகோடி

3. நடுச் சாமத்தில் உன் ஞாபகமே
நாயகா உம்மை தோத்திரிப் பேன்
அடுத்துக் கிட்டிய உன் சமுகம்
அடியேன் வந்தேன் தள்ளாதீர்

4. கடுத்த முகத்தைக் காட்டாதீர்
கருணாகரரே கலிதீர்த்து
கொடுத்தாலாசீர் கை கூப்பி.
குனிந்தேன் துதி உமக்கொரு கோடி]

ராஜாத்தினம் பாதேசி.

சங்கராபரணம்] **9** [சாப்புதாளம்.

1. வாருமையா போதகரே
வந்தெம்மிடம் தங்கியிரும்
சேருமையா பந்தியினில்
சிறியவராம் எங்களிடம்—வாரு

2. ஒளி மங்கி இருளாச்சே
உத்தமனே வாருமையா
களித்திரவு காத்திருப்போம்
காதலனே கருணைசெய்வாய்—வாரு

3. ஆதரையிலெம் ஆறுதலே
அன்பருக்கு சதா உறவே
பேதையர்க்குப் பேரறிவே
பாதை மெய் ஜீவசற்குருவே—வாரு

9

4. நாமிருப்போம் நடுவிலென்றீர்
நாயனுன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயைபுரிய
தற்பரனே நலம்தருவாய்—வாரு

5. உந்தன்மனை திருச்சபையை
உலகமெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமறப் பரிகரித்தே
பாக்கியமளித் தாண்டருள்வாய்—வாரு

வேதநாயகம் பாகவதர்.

10

பல்லவி.

ராவில் என்னை ரட்சியும்-கருணையொடு
ராவில் என்னை ரட்சியும்.

அனுபல்லவி.

ராவில் என்னை ஏசு தேவா காத்து வந்து
துர் ஆத்மாவின் வழியில் நான் விழாதபடி

1. சோதோமிலுள்ள ஜனம்-விரைந்து வந்து
லோத்தின் வீடழிக்கவே-வளைந்த வண்ணம்
பூதங்களொருமித் தேகமாய் வருது
நாதா இரக்கமாய் தூதரை அனுப்பி (ராவில்)

2. நூற்றிருபத்தி ஓராம்-சங்கீதமதை
பார்த்து தைரியங் கொண்டேன்-அதையறிந்து
சாத்தானுட தூதர் பாத்ரமில்லா என்மேல்
வராதபடி காப்பாய் தோத்ரம் செய்வேன் நானே. (ரா)

3. என்னுட தோழர்களும்-பந்துக்களுமாய்
உன்னடியில் வீழ்ந்தோம்-அத்தாலே உந்தன்
கண்மணியைப் போல பொன்மயமாய்க் காத்த
உம் மகன் ஏசுவால் நல் மகிமைப்பட. (ராவில்)

ஆராதனை ஆரம்பம்.

இராகம்-பைரவி] 11 [ஆதி-தாளம்.

பல்லவி.

ஆ! இன்பகாலமல்லோ – ஜெபவேளை
ஆனந்த காலமல்லோ?

அனுபல்லவி.

பூவின் கவலைகள் போக்கி என்னுசையைப்
பொன்னுலகாதிபன் முன்னே கொண்டேகிடும்.

சரணங்கள்.

1. துன்பம் துயர் நீக்கிப் – பொல்லாங்கனின்
சோதனைகள் போக்கி
அம்பர வாசிகளோ – டிதயத்தை
இன்ப உறவாக்கி
கெம்பீர மாகவே தம்பிரான் ஆசனம்
கிட்டிமகிழுட னுற்று வரச்செய்யும் —ஆ

2. ஜீவ ஆறுதல்பெற்று – பிஸ்காவின்
சிகரமதினிலுற்று
தேவநகர் கண்ணுற்று – சடத்தை
ஜெபத்தில் எறிந்துவிட்டு
ஆவிகளிப்பொடு ஆகாயம் செல்லவே
அன்பொடு பார்த்துநல் வந்தனம் சொல்லுவேன் —ஆ

வேதமாணிக்கம், நெய்யூர்.

இராகம்-எதுகுல காம்போதி.] 12 [ஆதி தாளம்.

பல்லவி.

கிருபை புரிந்தெனை ஆள்; – நீபரனே!
கிருபை புரிந்தெனை; ஆள் - நிதம்.

சரணங்கள்.

1. திரு அருள் நீடுமெஞ்ஞான தீர்த்து
வரில் நாணுகிய மாதுவின் வித்து! —கிரு

2. பண்ணின பாவமெலாம் அகல்வித்து,
நிண்ணயமாய் மிகவுந் தயைவைத்து, —கிரு

3. தந்திரவான் கடியின் சிறைமீட்டு
எந்தைமகிழ்ந் துன்றன் அன்புபாராட்டு —கிரு

4. தீமை உறும்பல ஆசையை நீக்கிச்
சாமி! என்னை உமக்காலயம் ஆக்கி, —கிரு

5. தொல்வினையால்வரு சாபம் ஒழித்து,
நல்வினையேசெய் திராணி அளித்து,

6. அம்பரமீதுறை வானவர் போற்ற
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏத்த, —கிரு

மதுரநாயகம் உபதேசியார்.

மோஹனம்.] 13 [சாப்புத்தாளம்.

தருணம் இது வேகிருபை கூரும்,
விழிபாரும், பதந்தாரும், தாரும்.

சரணங்கள்.

1. கருணைத்தெய்வ குமாரா — கன மனுடவதாரா
அருமை ரக்ஷகா ஏசுநாதா—உல
கனைத்தும் வணங்கும் சத்யவேதா—உன்றன்
அடியர்க்கருளும் திருப்பாதா—சத்ப்ரசாதா—நீதா.-தரு

2. வானத்திருந்து வந்த ஞானத்தொளி சிறந்த
மகிமைப் பிதாவின் திருப்பாலா—ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா—கன
விந்தைக் கருணைமனு வேலா—மெய்நூலா—சீலா —தரு

3. அற்ப உலகவாழ்வில் அலைந்து நிலைகுலைந்து
அலகைப்படு குழியில் வீழ்ந்து—தாழ்ந்து
அஞ்சி அஞ்சி நலிந்தேனே—அடிமைக்
கஞ்சல் என்று சொல்லுங்கோனே-சீமானே தானே-தரு

4. இந்த உலகத் தெமைச் சந்தித்தனுக்ரகித்த
சொந்தக் கிருபைகள் மகாத்ரம்—அவை
சிந்தித்து முடியாவிச்சேத்ரம்-நிர்ப்
பந்த அடியர்கள் எம்மாத்ரம்-பதஸ்தோத்ரம்-தோத்
ரம் —தரு

வேதநாயகம் சாஸ்திரியார்.

14

பல்லவி.

வரம் தரவாவா வா மனுவேலா
வா மனுவேலா வா மனுவேலா.

சரணங்கள்.

1. ஏசு எந்தன் பெருமானே வேறுரையும் கண்டறியேனே
ஆரையும் கண்டறியேனே வேர் ஆரையும் கண்டறியேனே.

2. அஞ்சவேண்டாம் நெஞ்சமே உனக்காதி பராபரன் தஞ்சமே
ஆதி பராபரன் தஞ்சமே உனக்காதி பராபரன் தஞ்சமே.

3. இத்தரையில் காத்த எங்கள் அத்தன் பரிசுத்தனே
அத்தன் பரிசுத்தனே—அத்தன் பரிசுத்தனே.

கருணைகரபுரி.

15.

'கல்லார்க்கும் கற்றவர்க்கும்' என்ற மெட்டு.

1. கர்த்தாவே ஆவியோடும் உண்மையோடும் உனையே
கருத்தாக யாம் வணங்க கருணைகூருந் துணையே
விரும்பத்தகாத எண்ணம் நானாவிதக் கவலை
நாடாதொரே மனதாய் நாட்டுவாய் எம்மனதை.

2. ஐயா உன்மக்களோடு ஐக்கியமாகத் தொழவே
ஆலயத்திற் கோடிவரும் ஆசை எமக்களியே
பொய்யாத வேதவாக்குப் பொருளறிவு மிகவே
போதிக்கும் தொண்டர் சொல்லை பொன்போல் மதித்திடவே.

3. போதனையிற் கேட்டபடி சாதனையா யொழுக
புனித எம் செய்கை கண்டு பூவோர் உன்னைப்புகழ.
சோதனையால் பாவவினை சுற்றுதென்னைக் காவாய்
தூயதாம் செந்நீரைக்கொண்டு தோஷமெல்லாந் தீராய்.

தேவ-ஸ்துதி.

இராகம்-எதுதல காம்போதி] **16** [ஆதி-தாளம்.

பல்லவி.

ஏசுவையே துதிசெய்—நீமனமே
ஏசுவையே துதிசெய்—கிறிஸ்தேசுவையே.

சரணங்கள்.

1. மாசணுகாத பராபர வஸ்து
நேசகுமாரன் மெய்பான கிறிஸ்து —ஏசு

2. அந்தரவான் தரையுந்தருதந்தன்
சுந்தரமிருந்த சவுந்தராநந்தன் —ஏசு

3. எண்ணின காரியம் யாவுமுகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க —ஏசு

வேதநாயகம் சாஸ்திரியார்.

இராகம் - நாதநாமக்கிரியை. **17.** ஏகதாளம்.

பல்லவி.

கும்பிடுகிறே னுன்கும்பிடுகிறே னெங்கள்
குருவேசு நாதர் பதம் கும்பிடுகிறேன்.

சரணங்கள்.

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்; - எனை
யாண்டவனை மீண்டவனைக் கும்பிடுகிறேன்
நம்புமடியார்க்கருளைக் கும்பிடுகிறேன் - பவ
நாசனைக் கிருபாசனைக் கும்பிடுகிறேன்
தம்பமெனக்கானவனைக் கும்பிடுகிறேன்; நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்;
உம்பர்தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன் - தொனித்
தோசன்னு வோசன்னுவென்று கும்பிடுகிறேன் — கும்.

2. ஒருசரு வேசுரனைக் கும்பிடுகிறேன்; - ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்
திருவுருவானவனைக் கும்பிடுகிறேன் - தவீது
சிம்மாச னதிபனைக் கும்பிடுகிறேன்
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன் - யூதர்
குலநல தேவனையே கும்பிடுகிறேன்
அருமை யிரட்சகனைக் கும்பிடுகிறேன்; - என
தாத்தும நேசர்தனைக் கும்பிடுகிறேன் — கும்.

3. பந்தமுறப் பட்டவனைக் கும்பிடுகிறேன்; - கன
பாடுபட்ட வாண்டவனைக் கும்பிடுகிறேன்
நிந்தையுற்ற கர்த்தர்பதங் கும்பிடுகிறேன்; - அன்று
நெடுங்குரு சேறினனைக் கும்பிடுகிறேன்
ஐந்திருக் காயனைக் கும்பிடுகிறேன் - எனக்
காகவுயிர் விட்டவனைக் கும்பிடுகிறேன்
சந்ததமுஞ் சந்ததமுங் கும்பிடுகிறேன்; - நின்று
சாஷ்டாங்க தெண்டம்பண்ணிக் கும்பிடுகிறேன் — கும்.

வேதநாயகம் சாஸ்திரியார்.

இராகம்-சங்கராபரணம்] **18** [ஆதி-தாளம்.

1. துதிக்கிறோம் உம்மை — வல்லபிதாவே
துத்தியம் செய்வோம் — உமை மா அாசே
தோத்ரம் உம்மாட்சிமைக்கே — பரனே
துந்துமி மாட்சிமைக்கே — பிதாவே.

2. சுதனே யிரங்கும் — புவியோர் கடனைச்
சுமந்ததைத் — தீர்த்த தூயசெம்மறியே
சுந்தா ஜெபங்கேளும் — பரன்வலத்
தோழா ஜெபங்கேளும் — கிறிஸ்தே.

3. நித்திய பிதாவின் — மகிமையில் நீரே
நிமலாவியினோ — டாளுகிறீரே
நிதமேகர்ச்சனையே — உன்னத
நேயருக்கர்ச்சனையே — ஆமேன்.

சாமுவேல் ஐயர்.

19. கண்ணிகள்.

1. ஏசுக்கிறிஸ்துவே தெய்வம் - நாம் எல்லாரும் துதி செய்வோம்
ஏசுக்கிறிஸ்துவே தெய்வம் - நாம் எல்லாரும் துதி செய்வோம்.

2. ஆனந்தபரனைத் துதிசெய்தால் - வரும் - ஆனந்தம் பரமானந்தம்
ஆனந்தப் பரனைத் துதிசெய்தால் - வரும் ஆனந்தம் பரமானந்தம்.

3. ஓம் சதா தயைபுரி பாலா ஒரு பர குருவே அனுகூலா
ஓம் சதா தயைபுரி பாலா ஒரு பர குருவே அனுகூலா.

4. தோத்திர கீர்த்தன சுவிசேஷா - சாஸ்திரி போற்றிய சருவேசா
தோத்திர கீர்த்தன சுவிசேஷா - சாஸ்திரி போற்றிய சருவேசா.

5. அருஉரு ஒருபர மகாதேவா - பாவிகள் கவனம் சதா ஜீவா
அருஉரு ஒருபர மகாதேவா - பாவிகள் கவனம் சதா ஜீவா.

வேதநாயகம் சாஸ்திரியார்.

இராகம்-சங்கராபரணம்] **20** [ஆதி-தாளம்.

கண்ணிகள்.

1. சருவ லோகாதிபா நமஸ்காரம்
சருவ சிருஷ்டிகனே நமஸ்காரம்
தரை கடல் உயிர்வான் சகலமும் படைத்த
தயாபர பிதாவே நமஸ்காரம்.

2. திரு அவதாரா நமஸ்காரம்
ஜெகத்திரட்சகனே நமஸ்காரம்
தரணியின் மனுடர் உயிரடைந்தோங்க
தருவினில் மாண்டோய் நமஸ்காரம்.

3. பரிசுத்த ஆவி நமஸ்காரம்
பரம சற்குருவே நமஸ்காரம்
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்.

4. முத்தொழிலோனே நமஸ்காரம்
மூன்றி லொன்றானே நமஸ்காரம்
கர்த்தாதி கர்த்தா கருணை சமுத்திரா
நித்ய திரியேகா நமஸ்காரம்.

வேதமாணிக்கம் நெய்யூர்.

மங்களம்.

இராகம்-சுருட்டி. **21** ஆதிதாளம்.

பல்லவி.

சீர்ஏசு நாதனுக்குச் செயமங்களம்; - ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்.

அனுபல்லவி.

பாரேறு நீதனுக்குப் பரமபொற்பாதனுக்கு,
நேரேறு போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு; —சீர்

சரணங்கள்.

1. ஆதி சருவேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்;
அகிலப் பிரகாசனுக்கு, நேசனுக்கு மங்களம்
நீதிபரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு,
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு; — சீர்

2. மானாபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வளர் கலைக்கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்
கானான் நல் தேயனுக்கு, கன்னிமரி சேயனுக்கு,
கோனார் சகாயனுக்கு, கூறுபெத்தலேயனுக்கு, — சீர்

3. பத்து லட்சணத்தனுக்கு சுத்தனுக்கு மங்களம்;
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்கு, சருவாதிகாரனுக்கு,
பத்தர் உபகாரனுக்கு, பரம குமாரனுக்கு, — சீர்.

வேதநாயகம் சாஸ்திரியார்.

22

பல்லவி.

மங்களம் பிதா — ஜெய — மங்களம் வேதா
எங்கள் துங்கமங்களர்க்கு — மங்களம் சதா.

சரணங்கள்.

1. அணைத்து காத்தவா உலகனைத்தும் படைத்தவா
இணையில்லா பிதாவுமக்கு மங்களம் சதா — மங்களம்
2. ஏசு நாயகா — எம் — நேசநாயகா
மாசில்லாத சுதனுமக்கு மங்களம் சதா — மங்களம்
3. ஞானவாரியே — திரு — வானமாரியே
ஆனந்த சுத்தாவியுமக்கு மங்களம் சதா — மங்களம்.

[redacted]

23.

சாமுவேல் புதுச்சேரி.

1. ஜெயம் ஜெயம் அல்லேலூயா - ஜெயம் ஜெயம் எப்போதும்
ஏசுநாதர் நாமத்தினால் ஜெயம் ஜெயம் எப்போதும்.

2. பாவத்தையும் சாபத்தையும் குருசின்மேல்தான் சுமந்தார்
சாத்தானையும், சைனியத்தையும் கல்வாரியில் தோல்வித்தார்—ஜெ

3. சத்துரு சேனை ஒன்றாகவே செங்கடலில் அழித்தார்
சாத்தானுட எதிர்ப்புகள் பலிக்கவில்லை இனிமேல் — ஜெ

4. வாத்தியகோஷ்டங்களோடு நாம் ஜெய வீர கீதங்கள்
உற்சாகமாய்ப்பாடிடுவோம் பரிசுத்தர் சபையில் — ஜெ

5. ரத்தங்கொண்டு முத்திரை யிடப்பட்ட ஜனம் ஒன்றாக
எக்காளம் ஊதிடும்போது பூதலம் அதிருமே — ஜெ

6. உம்மைப் பின் செல்வேன் என் சுவாமி எனக்காக மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நான் நிற்பேன் — ஜெ

[redacted]பை.

7. பாவி பாவி பாவி பாவி பரலோகம் சேரலாம்
பிராண நாதர் பாதத்தண்டை பாவியே நீ ஓடிவா -- ஜெ

8. நானே வழி, நானே சத்யம், நானே ஜீவன் என்றுரே
நாதன் கிறிஸ்துவண்டை பாவியே நீ ஓடிவா — ஜெ

9. அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஜெயமே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆமேன்.

மார்தோமா சபை.

24

தேவதூத நாயகா தெய்வீகா தாயகா
ஏசுக்கிறிஸ்து என் ஜீவரக்ஷகா மகா—
சீலமே-ஞாலமே தெரிந்த ஞானபோதமே
உம்திருவருளை நிதம்பெறவே பரமபிதா
பதம் உறவே - தேடி நாமே கூடினோம்
மங்களம் பாடினோம்—
ஜீவரட்சகா-ஜீவரட்சகா-ஜீவரட்சகா.

கருணாகரபுரி.

சங்கராபரணம்] **25** [சாப்த்-தாளம்.

பல்லவி.

சுப ஜெயமங்களமே - நித்ய - சுப ஜெயமங்களமே
சுகமே, தரவே, புவிமீ, துயிர்த்த - சுதனேசுநாதருக்கே.

சரணங்கள்.

1. தீர்க்கருரைத்தனரே-இன்று
ஏசு உயிர்த்தனரே.
ஜெகதீஸ்-பரனார், சுதனார்-கிறிஸ்து
ஜெயமா யெழுந்தவர்க்கே. —சுப

2. தூதர் சங்க முடிங்க-வானம்
ஜோதியினாலிலங்க
துரிதாய்ப் பரனார்-கனிகூர்ந்திடவே
தொனியாய் எழுந்தவர்க்கே —சுப

3. அங்கங்குளிர்ந்திடவே-உல
கெங்கும் மகிழ்ந்திடவே
அடியா ருடசா-வுடகூ-ரொடித்து
அகிலமெழுந்தவர்க்கே —சுப

4. காலையிலே எழுந்து - நிதம்
கர்த்தனையே நினைந்து
கரமே-குவித்து-துதிபாடிடவே
காலை எழுந்தவர்க்கே —சுப

5. ஆனந்தம்பாடிடவும்-பரன்
அன்பைக்கொண்டாடிடவும்
அசையா—நிலையோ—டெழுந்துதொழவே
அருள்கூர்ந்திடுபவர்க்கே —சுப

6. எக்காளமே தொனிக்க—பக்தர்
யாவருமே எழும்ப
இனிதா—யரசா—ளவுமேயுலகில்
எழுமிம்மானுவேலர்க்கே. —சுப

பிச்சைமுத்து, தஞ்சை.

ஞானஸ்நானம்.

(இராகம்-பிலகரி] 26 [சேம்படை-தாளம்.

பல்லவி.

இந்தக்குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும், கர்த்தாவே

அனுபல்லவி.

உந்தன் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய் வந்த (இந்த)

சரணங்கள்.

1. பிள்ளைகள் எனக்கதிகப்பிரியம், வரலாம் என்று
உள்ளமுருகிச்சொன்ன உத்தம சத்தியனே (இந்த)

2. பாலரைக்கையில்எந்திப் பண்பாய் ஆசீர்வதித்த
சீலமா யின்றும்வந் தாசீர்வாதம்செய்யும், ஐயா (இந்த)

3. உமக்கூழியம் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்
உமது ஆவியைத்தந்து உம்முடைய மந்தைசேர்த்து (இந்)

4. உலகமும் பேய்பிசாசும் ஒன்றும் தீதுசெய்யாமல்,
நலமாய் இதைக்காத்தாளும் நன்மைப்பராபரனே (இந்த)

5. விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கு உள்ளடங்கி
பசிய மரம்போல் தெய்வபத்தியிலே வளர. (இந்த)

பாக்கிய நாதன் சிவகாசி.

இராகம்-கல்யாணி] **27** [ஆதி-தாளம்.

பல்லவி.

என்னையும் உமதாட்டின் மந்தையோ
டேற்றுக் காத்திடும், ஏசுவே!

சரணங்கள்.

1. வன்னி யானதோர் அலகைப் பேய்தனை
வைத்திட ஞான பெலத்துடன் சிறந்
திந்நிலத்தினில் வந்துதித்த நல்
ஏசுவே, எனைச் சேர்த்திடும்; — என்னை

2. ஆயக்காரரோடு பாவிகளின் கும்பை
அழைத்து நல்விதை முளைத்திட, வெகு
நேயமாகவே ஜீவபுனல் ஈந்த
நிமலனே எனைச்சேர்த்திடும்; — என்னை

3. ஐயிருபதாட்டினில் ஒன்று
அகன்றிட்டால், மனம்உகந்து, கோன் அதை
மெய்யதாகவே தேடுவான் என்ற
மேய்ப்பரே எனைச் சேர்த்திடும்; — என்னை

4. வாசலாகவே இருக்கிறேன், எனில்
வந்தவன்மனம் நொந்திடான், வெகு
நேசமாகவே வாழ்வான் என்ற நல்
நிமலனே எனைச் சேர்த்திடும்; — என்னை

5. நல்லமேய்ப்பன் நான் என, மொழிந்தஎன்
நாதனே! ஞான போதனே! ஜீவ
புல்லுள்ள தலந்தன்னில் கொண்டெனைப்
போஷித்து, முசிப்பாற்றிடும்; — என்னை

6. மேய்ப்பராகவே இருக்கிறீர் எந்தன் ஞான
மேய்ச்சல் நீர்தாமல்லோ ?
வாய்ப்புள்ள சத்தியமறையில் மேய்ந்து நான்
வளர்ந்திட அருள் புரிந்திடும்; — என்னை

7. அன்புடைய மெய்மேய்ப்ப ராயிருந்
தாட்டுக்காய்ச் சொந்த ஜீவனை வெகு
இன்பமாகவே ஈந்து மீட்ட, நல்
ஏசுவே! எனைச் சேர்த்திடும்; — என்னை

மரியான் திருநெல்வேலி.

28

நொண்டிச்சிந்து – தாளம்-சாப்பு.

பல்லவி.

அருமை ரக்ஷகா யேசு நாதா – மோட்ச
பெருமைக் குரிய சிறு குழந்தைகள் நேசா.

சரணங்கள்.

1. சிறுபிள்ளை என்னிடம் வரவே – தடை
செய்யாதிருங்கள் என்றுரைத்தின குருவே.
கிருபை யாகிய கரத்தாலே – வாங்கிக்
கேட்கும் நித்திய ஜீவ வரம்அருள் கோவே —அரு

2. ஞானஸ் நானம் பெறவே வந்தார் – இந்த
நாளில் இவர்கள் உந்தன் நாமமே பூண்டார்.
வானபிதா ஆவி அருளும் – தந்து
வாழ்த்தி அனுப்பிடவே வாருமே சுதனே —அரு

3. ஜலத்தினாலும் ஆவியாலும் – ஒருவன்
ஜனனம் எடாவிட்டால் சாயுட்சியமில்லை.
குலத்தினாலும் நலத்தினாலும் – வேறு
கொள்கை புரிந்தாலும் கூடாதென்றீரே. —அரு

4. கண்ணுக்குப் புலப்படாக் காற்று — வீசும்
காரணம் போலவே தோன்றுமேமாற்று.
விண்ணுக்குள் ஒளிபோல உலகில் — நின்று
வேதனைப்போற்றிடு ஙிக்கோதே மென்றீர். —அரு

வால்ற்றர் கவிராயர்.

இராகம்-காம்போதி] 29 [ஆதி-தாளம்.

பல்லவி.

ஞானஸ்நானமா ஞான திரவியமே திரு
நாமம் ஜலமொடு சேர்.

சரணங்கள்.

1. வானபரன் யேசுலக மானிடர்க்காய்ப் பாடுபட்டு
வாய்த்த நல மிலவசமாய்க் கொடுத்திட
ஞானமுடனேசகல மானிடரைச் சீடராக்க
நல்லதேவ நாமமதைச் சொல்லி ஜலம் வாருமென்ற (ஞான)

2. யேசுமெய்யா யெந்தனுடநேச மீட்ப ரென்றுள்ளத்தில்
ஏற்றுமுழுக்கே பெறுவோர் கூற்று நீங்குவர்
வேஷமும்பொல்லா அவிசுவாசமுமுள்ளோர் நரகில்
வீழ்வர் நித்தியமானகாலம் தாழ்வரென் றுரைத்தவரின் (ஞான)

3. தண்ணீராவியால் பிறக்கார் விண்ணலம் பெறுரெனவே
சத்தியனுரைத்த மொழி சுத்தமுணர்ந்து
சின்னவர் பெரியவர்கள் சீரியர்கள் பூரியர்கள்
செம்மை பெற மூழ்குவர்கள் இம்முழுக்கில் வேதமுறை (ஞான)

4. கண்ணினலே காண்பதென்ன தண்ணீர்தானே யென்றுசொல்லிக்
கத்தனி னுரைமறப்ப தெத்தனைமோசம்
அண்ணலார் பரிசுத்தாவி தன்னையுமிணைக்கு நேர்மை
அறிந்தவரே யிருகண் தெரிந்தவர் திருவருள் (ஞான)

5. பாவங்கள் மன்னிக்கப்படும் சாவுபேயின் வன்மை நீங்கும்
பாக்கியத் தலங்கிடைக்கும் வாக்கியம் பொய்யோ
சீவிய முழுக்கிதுவே ஒவிய முழுக்குமறு
சென்ம முழுக்கு புதிய தன்மைதரும் தூய்முழுக்கு (ஞான)

6. எத்தனைபே ரிம்முழுக்கைப் பெற்றனரோ அத்தனைபேர்
யேசுவைத்தரித்தா ரென்று நேசமுடனே
கத்தனு ருரைபகரப் பித்தர்களின் துன்மொழியால்
கலங்கிடோம் நன்னெறியில் துலங்கிடுவோ மிச்சுத்த (ஞான)

சாமுவேல் ஐயர்.

இராகம், ஸாதநாமக்கிரியை] **30** [ஏகதாளம்.

பல்லவி

ஆவியின் ஞானஸ்நானம் தாரும் யேசுவே?
அக்கினியின் ஞானஸ்நானம் தாரும் யேசுவே?

1. பாவ ஆசை வேரோடற — ஊற்றும் ஆவியை,
பாவ சக்தி மாண்டகல — ஊற்றும் ஆவியை — ஆவி

2. என்னையாளும் சுயம் மாள — ஊற்றும் ஆவியை
தன்னைத் தேடும் நேசம்சாக ஊற்றும் ஆவியை — ஆவி

3. உள்ளம் முற்றும் சுத்தமாக — ஊற்றும் ஆவியை
வெள்ளமா யன்புபாய்ந்தோட — ஊற்றும் ஆவியை — ஆவி

4. அன்பும் மேல் நிரம்பிப் பாய — ஊற்றும் ஆவியை
இன்படனுமைச் சேவிக்க — ஊற்றும் ஆவியை — ஆவி

5. தேவ சித்தம் ஏற்றுக்கொள்ள — ஊற்றும் ஆவியை
தேவ வாக்கை நான் கைக் கொள்ள—ஊற்றும் ஆவியை —ஆவி

6. ஜெப ஆவி மென்மே லோங்க — ஊற்றும் ஆவியை
அகம் நின்றே ஊறித்தேங்க — ஊற்றும் ஆவியை — ஆவி

யாழ்ப்பாணப் பாட்டு.

திருவிவாகம்.

இராகம் பிலகரி] **31** [ரூபகதாளம்.

பல்லவி.

மலரெடுத்துப் பூ முடித்து
மணமக்கள்மேல் சொரிவோம் தங்காய்

அனுபல்லவி.

குணமகள் மாது மங்கை குலுங்க
கொன்னைப்பூ, தென்னைப்பூ, கன்னிப்பூ, கன்னிப்பூ.

சரணங்கள்.

1. காலாகாலமாயிவரை, கண்மணி போல் பாது காத்து
ஞாலமதில் வாழ்ந்திருக்க
ஆலம்பூ, வேலம்பூ, ஞாலம்பூ, ஏலம்பூ — மலரெ

2. நித்திய ஜீவ வழியில், பக்தியுடனே நடந்து
எத்தருண முங்களிக்க
அத்திப்பூ, அகத்திப்பூ, அத்திப்பூ, பிச்சிப்பூ — மலரே

3. இந்த மணப் பந்தலிலே சந்ததமும் வாழ்ந்திருக்க
விந்தையுடன் மனங் களிக்க
வேந்திப்பூ, கேந்திப்பூ, சேந்திப்பூ, சிவந்திப்பூ —மலரே

4. வேதம் விளம்பு மலரில் விண்பூ மலர் தான் பொருக்கி
ஆதரவில் வாழ்ந்திருக்க
தாழம்பூ, மல்லிப்பூ, ரோஜாப்பூ, மகிழம்பூ — மலரே

5. அம்பரத்தில் வாழ்ந்திருக்க அமலருட கிருபையுடன்
அனவரதம் சுகித்திருக்க
ஆளன்பு, மெய்யன்பு, வேதன்பு, ஏசன்பு — மலரே

6. மணவாளன்...........பெயர்...மணவாட்டி...........பெயர்
குணமுடனே வாழ்ந்திருக்க
கற்புப்பூ, தாழ்மைப்பூ, அன்புப்பூ, இன்பப்பூ — மலரே

இராகம் இங்கிலீஷ் நோட்டு] **32**

1. மாம்பூ மகிழம்பூ மணக்கும் ஞான மல்லிகைப்பூ
பூப்பூ புனிதம்பூ பூமான் தாவீது வங்கிஷப்பூ

2. ஜோதியாக வந்த பூ ஜொலித்து வழங்கும் ஞானப்பூ
நீதியாய் நிறைந்த பூ நித்தம் நம்மைக் காக்கும் பூ

3. ஆதி யாயிருந்த பூ ஆதிரையில் வந்த பூ
தேவ, தேவ, தேவன் பூ தேசிகர்கள் புகழும் பூ

4. சின்னப்பூ சிறிய பூ தேசத்தோர் புகழும் பூ
அன்னப்பூ ஆசைப்பூ அண்டினோரைக் காக்கும் பூ

5. வானுலகை விட்ட பூ மண்ணில் வந்துதித்த பூ
பாலனாக வந்த பூ பாசத்தால் நிறைந்த பூ

6. தேசிகர் அணியும் பூ தேசத்தோர்கள் மெய்க்கும் பூ
வாசமாய் நிறைந்த பூ வண்மையுடன் காக்கும் பூ

7. கானாவூருக்கு வந்த பூ கலியாணத்தில் புகழ்ந்த பூ
கனரசத்தைக் கொடுத்த பூ களங்கமில்லா ஞானப் பூ

8. நீடூழி வாழும் பூ நித்தியமும் பூக்கும் பூ
காலை மாலை துதிக்கும் பூ கர்த்தத்துவ முள்ள பூ

9. பிச்சிப்பூ பின்னைப்பூ பின்னால் வரும் சொர்ணப்பூ
எத்திசைக்கு மேற்ற பூ ஏகமாய் நிறைந்த பூ

10. இந்த மணமக்களை சொந்தமாய் கைக்கொண்ட பூ
என்றுமிவரை ஆளும் பூ ஏசுக்கிறிஸ்தென்ற பூ.

இராகம் சங்கராபரணம்] **33** [தாளம் ஆதி

பல்லவி.

ஏசுநாயகா வந்தாளும் — என்னாளும் திவ்ய
ஏசுநாயகா வந்தாளும்.

அனுபல்லவி.

ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக — ஏசு

சரணங்கள்.

1. தற்பரப்பரப்ரம மகத்துவப்ர தாபா!
அற்புதமிகக்கிருபை கூறும் கண்பாரும்.

2. சுந்தரம் மிகும்படி முன் — அந்த மணவீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போலே, அன்பாலே —ஏசு

3. உத்தம சன்மார்க்கநெறி பத்திவிசுவாசம்
நித்ய சமாதானம் உற்றுவாழ, மிகவாழ —ஏசு

4. துங்கமிகு நன்கனம் விளங்கிவளமாக
மங்களம தோங்க நலம் தாங்க, நலம் தாங்க —ஏசு

5. நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகி
புத்திர சந்தானமே செழிக்க; தழைக்க —ஏசு

வேதநாயக சாஸ்திரியார்.

இராகம்—ஆனந்தபைரவி. **34** ஆதி தாளம்.

பல்லவி.

இம்மணர்க் குன்னருள் ஈபரவாசா
ஏசுகிறிஸ்தையா ஓ! சருவேசா

சரணங்கள்.

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்
தேவரீர் இவ்விரு பேரையும் காரும் —இம்

2. ஆதாமோடேவையை அன்றமைத்தீரே
அவ்விதமாக நீர் இன்றும் செய்வீரே. —இம்

3. அன்பன் ஈசாக்கு ரெபேக்காட் கிரங்கி
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீர் —இம்

4. உன்தயை பெற்றிவர் ஓங்கிப்பெருகவும்
ஒருவர்க்கொருவர் நல்லன்பில் நிலைக்கவும் —இம்

5. தாழ்மை, பொறுமைகள், சற்குணமேன்மைகள்
தந்துமதாவியைக் கொண்டு காத்தாளுமேன் —இம்

6. இயேசுகிறிஸ்துவை நேசித்துவாழவும்
இன்பவிசுவாச வீட்டார் என்றாகவும். —இம்

தாவீது ஐயர்.

இராகம் போர்த்துக்கீஸ். 35 ஆதிதாளம்.

பல்லவி.

பாருமுந்தன் கிருபைக்கண்ணாலே,
பக்தர் இருவரைப் பாலியத் தோழரை

அனுபல்லவி.

சேரும் நின்னருள் பெற்றுப்பெருகிட
ஜெகந்தினில் உம்மையே போற்றித்துதித்திட —பாரும்

சரணங்கள்.

1. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபின் தேவனே
அன்று ஏதேனில் இணைத்த இறைவனே
சம்ரமமாக இந்நிலைமைக்குட்பட
சந்தோஷமாயும்மை ஏற்றித்துதித்திட —பாரும்

2. ஆரஞ்சி புஷ்பத்தின் அற்புத வாடையும்
அழகான மல்லிகை முல்லையின் வாசமும்
ஜோராக ஆரங்கள் சூடி யிருப்பதும்
ஜொக்குது ஜொக்குது ஜோதிப்பட்டாடைகள் —பாரும்

3. கோத்திரத்தில் இவர் எப்ராயீம் போலவும்
வாய்திறத்தில் ஆரோன் ஆரியர்போலவும்
நீதிநெறி தவறாமல் என்றுமிருக்கவும்
நித்திய பாக்கியம் நன்று கிடைக்கவும் —பாரும்

4. கானாக்கல்யாணப் பந்தலில் யேசுவோடு
கூடி விருந்து கொண்டாடினதே போலும்
தானாக மோடியுடன் இங்கெழுந்துமே
தயைவைத்து துணைசெய்ய துரிதமாக வந்து —பாரும்

5. சேர்ந்திவர் யோசிக்கும் காரியசித்தியும்
தேர்ந்த உமதருள் தேடும் நற்புத்தியும்
பெற்றோர் உற்றோர்களின் பேர் புகழ்ச்சியையும்
உற்றுணர்ந்திப் புவியில் வாழ்ந்திருக்கவும் —பாரும்

6. மணவாளன் (.........பெயர்) வாழ்கவே
மணவாட்டி (.........பெயர்) வாழ்கவே
இணைபிரியாதே இவர்களிருவரும்
எந்நாளும் கனிந்து மகிழ்ந்து சுகிக்கவும். —பாரும்

திருப்பந்தி, இராப்போஜனம்.

இராகம்-சங்கராபரணம்] 36 [திரிசுர-தாளம்.

பல்லவி.

கர்த்தரின் பந்தியில் வா – சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா ;

அநுபல்லவி.

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச்—சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி, —கர்த்த

சரணங்கள்.

1. ஆபேலின் ரத்தம் அல்ல, நீ செய்த
அநியாயத்தைச் சொல்ல,
சாபம் எல்லாம் வெல்ல, சிந்துண்ட
தயையை நான் என்ன சொல்ல ?
கோபம் இல்லாமல் உன் மாபாவம் தீர்த்திடக்
கூறிப்பிதாவின் முன் ஏறின ரத்தமே. —கர்த்த

2. ஜீவ அப்பம் அல்லோ? கிறிஸ்தின்
திருச்சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ? உனக்காய்ப்
பகிரப் பட்டதல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திடக் —கர்த்த

3. தேவ அன்பைப்பாரு, கிறிஸ்துவின்
சீஷர் முறை திரு;
பாவக்கேட்டைக்கூறு ; ராப்போஜன
பந்திதனில் சேரு
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம்வைத்து அன்னியன் ஆகாதே-கர்த்த

4. அன்பின் விருந்தாமே, கர்த்தருடன்
ஐக்யப் பந்தியாமே,
துன்பம் துயர்போமே, இருதயம்
சுத்த திடமாமே
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா. —கர்த்த

மரியான் உபதேசியார்.

'வாருமையா போதகரே' 37 'கள்ளமுறும் கடையேனும் மெட்டு'

பல்லவி.

திருமகனார் உவந்தளித்த திருவிருந்தையருந்திடுவோம்

அனுபல்லவி.

மரிபுதல்வன் சடலமிது, மானிடரே மனதிலெண்ணும்

சரணங்கள்.

1. அன்புடனே குருபூசை ஆசரிக்க வாருமையா
இன்றே பவநித்திரையை விட்டெழுந்தே சேருமையா
2. சற்குருவாய் சுவாமியுமாய் சிநேகனுமாய் சொந்தமுமாய்
விற்பன்னரும் சஞ்சரித்து வீணருக்காய் குருசில் நொந்து
3. அன்றொரு நாள் சீடருடன் அச்சயனும் வீற்றிருந்து
பண்டிகை போல் நள்ளிரவில் பாகம் செய்த திருவிருந்து
4. ஜென்ம கர்ம பவப்பிணியைத் தீர்த்துவைக்கும்
[குருமருந்து
நன்மைதரும் ஜீவநதி நாடிச்செல்வோமிதிலிருந்து
5. அருவருத்தே பழம் பகையை அடியோடே அகற்றிவிட்டு
கிறிஸ்துபெருமானை மனதிருத்தியவர் சிலுவைதொட்டு
6. சன்மார்க்க நெறியடுத்துச் சற்குணத்தைக் கைபிடித்து
என்னுளுமிதை ஸ்திரமாய் இருத்திவைக்க இடங்கொடுத்து.

ஆர்தர் பாகவதர்.

இராகம் - தேவகாந்தாரி. 38 ஆதிதாளம்.

பல்லவி

அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும்? — அதிசய
அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும் ?

அனுபல்லவி

துன்ப அகோரம் தொடர்ந்திடும் நேரம்—அதிசய

சரணங்கள்

1. இதுவென் சரீரம், இதுவென்றன் ரத்தம்
எனை நினைத்திடும்படி அருந்துமென்றாரே —அதிசய

2. பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே
வருந்தின சிஷர்க்காய் மருகி நின்றாரே —அதிசய

3. வியாழனிரவினில் வியாகுலத் தோடே
விளம்பின போதகம் மறந்திடலாமோ —அதிசய

4. செடியும் கொடியும்போல் சேர்ந்து தம்மோடே
முடிவு பரியந்தம் நிலைப்பீரென்றாரே —அதிசய

5. பக்தர்கட்காக பரமனை நோக்கி
மெத்தவும் ஊக்கமாய் வேண்டிக்கொண்டாரே —அதிசய

பரமானந்தம் ஐயர்.

இராகம்-வராளி] 39 [சாப்பு-தாளம்.

பல்லவி.

வானோர் வந்திக்கும் இந்தப் பந்திக்குப் பாவிநான்
வந்தேன் வந்தேன் வெகு சிந்தா குலத்தோடு.

அனுபல்லவி.

நான் நேரில் வராமல் உந்தன் கிருபையை நம்பி
நகர்ந்து நகர்ந்து வெகு நசல் கொண்ட பாவியாய் (வா)

சரணங்கள்.

1. தற்பரனே யுமது சரீரம் இரத்தமுமான
சாக்கிரமெந்தை நாங்கள் ஏக்கமாய்க் கொள்வதினால்
துர்ப்பவக் கறை நீங்கி நீர் அளிக்கும் பலத்தால்
துர்க்குணத்தை மேற்கொள்ளத் துணைபுரியும் சுவாமி (வா)

2. அனுதினமும் நாங்கள் உம்மில் நிலைத்திருக்க
அனுக்கிரகம் புரிந்தெம்மில் நீரும் நிலைத்திருந்து
தினம் உமதுதன்மை எம்மில் உருவாகித்
திருச் சிஷ்டியா யிருக்கக் கிருபைபுரியும் சுவாமி (வா)

3. யேசு கிறிஸ்துவே யுந்தன் சிந்தையுடையவராய்
எளியர்கள் உமது திவ்ய சாயலாய் மாறி
நேச உமது அடிச்சுவடுகளில் நடந்து
நித்யம் உம்மைக் கனப்படுத்த உதவிசெய்யும் (வா)

4. உம்மால் எங்களுக்கிந்த உலகம் சிலுவையினில்
ஒருங்க அறையப்பட்டு உலகத்துக்கு நாங்களும்
செம்பால் சிந்தைச் சிலுவைதன்னில் அறையுண்கச்
சீக்கிரம் தயை செய்யும் காக்கும் கருணைதேவா (வா)

5. இச்சையினால் இந்த உலகந்தனில் உண்டான
எக்கேட்டுக்கும் தப்பி முக்ய விசுவாசத்தில்
மிச்சமாய்ப் பங்கு பெற்று திவ்ய சுவாபத்தில்
வீதம் பெற்றருள விப்போதே யருள்புரியும் (வா)

6. அன்பின் ரூபியே நாங்கள் அன்பு விசுவாசத்தில்
ஆங்கமாக நிறைந்து தீங்கனி திரள் தந்து
பின்பு நம்பிக்கையினில் பிழைத்து திரியேக தேவா
வெகு மகிமையில் உம்மைத் துதிக்க உதவிசெய்யும். (வா)

சத்திய நாதன், தஞ்சை.

இராகம்-காம்போதி] 40 [ருபக-தாளம்.

பல்லவி.

போசனந்தானு முண்டோ—திருராப்
போசனம் போலுலகில்.

அனுபல்லவி.

ராசரும் வையக நீசரும் அப்பரன்
நேசரும் இயேசுவின் தாசரும் உண்டிடப் (போ)

சரணங்கள்.

1. கர்த்தன் மரணத்தின் சாசன போசனம்
கன்மிகட் கானமெய் நேசத்தின் போசனம்
பத்தரை யொன்று யிணைத்திடும் போசனம்
பஞ்ச காலத்தும் கிடைத்திடும் போசனம் (போ)

2. பூர்வ ஏற்பாட்டோர்கள் காணாத போசனம்
பொன் வான தூதரும் உண்ணாத போசனம்
ஓர்க் காலமும் குறைவாகாத போசனம்
ஒப்பில்லான் மாமிசம் ரத்தமாம் போசனம் (போ)

3. பஸ்காப் பலியின் பொருள் என்னும் போசனம்
பாவி புசிக்கும் சமாதான போசனம்
நிஷ்கார நிந்தைப் பாவம் போக்கும் போசனம்
நின்மலன் தந்திடும் அற்புத போசனம் (போ)

4. மாமலைப் பீடப் பலியான போசனம்
மானிட ஞானத்துக் கெட்டாத போசனம்
ஆமென்று நாங்கள் போதித்திடும் போசனம்
அத்தனார் மெய் மொழியாலான போசனம் (போ)

5. மாமிச மப்பத்தோடே வரும் போசனம்
வல்லன் ரத்தம் ரசத்தோடுறும் போசனம்
பூமியில் மோட்சங் கொணர்ந்திடும் போசனம்
பொய் கிறிஸ்தோர்களுக் காக்கினைப் போசனம் (போ)

6. ஒப்பனை யென்னக் கூடாத மெய்ப் போசனம்
ஒன்று மற்றொன்றாக மாறாத போசனம்
தப்பற நாங்கள் புசித்திடும் போசனம்
சந்தோஷப் பாவப் பொறுப்பியும் போசனம் (போ)

7. செத்தும் உயிரோடெழுப்பிடும் போசனம்
சீவனோடென் றென்றும் வாழ்விக்கும் போசனம்
நித்தமுண்டாலும் சலிக்காத போசனம்
நேச சஞ்சீவி யெனுந்திருப் போசனம் (போ)

சாமுவேல் ஐயர் தரங்கம்பாடி.

திங்கள் : பரம பிதா.

இராகம்-இங்கிலீஷ்] **41** [ஆதி-தாளம்.

பல்லவி.

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமைத்தாழ்ச்சி அடைகிலனே. (தேவ)

அனுபல்லவி.

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர்மேய்த்தமர் நீர் அருளுகின்றார். (தேவ)

சரணங்கள்.

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர்நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார். (தேவ)

2. சாநிழல் பள்ளத்திறங் கிடினும்
சற்றும் தீங்குகண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளைதடியும் கோலுமே தேற்றும் (தேவ)

3. பகைவர்க்கெதிரே ஒருபந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுகதயிலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார் (தேவ)

4. ஆயுள்முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன். (தேவ)

யோசேப்பு நெய்யூர்.

இராகம்-சகானா] **42** [ஆதி-தாளம்.

பல்லவி.

ஆதாரம் நீ தான் ஐயா, என்துரையே
ஆதாரம் நீ தான் ஐயா.

அனுபல்லவி.

சூதாம் உலகில்நான் தீதாக மயங்கையில் (ஆதா)

சரணங்கள்.

1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியன்மேல்
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியனுக்கு. (ஆதா)

2. நாம், நாம் துணையென நயந்துரை சொன்னவர்
நட்டாற்றில் விட்டாரையா; தனியனை
நாட்டாற்றில் விட்டாரையா; தனியனுக்கு (ஆதா)

3. கற்றோர் பெருமையே, மற்றோர் அருமையே
வற்றாக் கிருபை நதியே, என்பதியே,
வற்றாக் கிருபை நதியே, என்பதியே, (ஆதா)

4. சோதனை யடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே
துக்கம் மிகுவேளையில் உன் தாசனுக்கு. (ஆதா)

தேவதாசன் ஐயர்.

இராகம்-சங்கராபரணம்.] **43** [ஆதி-தாளம்.

"சென்ற பகலில் எமைக்காத்து" என்ற மெட்டு.

1. வெளிச்சமாக்கி இராப் பகலை
வெகுவாய் முதல் நாள் ஏற்படுத்தி,
ஆகாய விரிவை உண்டாக்கி
அமைத்தார் இரண்டாம் நாளிலே.

2. மூன்றும் நாளில் ஜலம் பிரிய
முளைத்தது தரையில் புல் பூண்டு
செடி கொடி விருக்ஷங்களுடன்
சிறப்பாய் இருக்கச் செய்தனரே.

3. நாலாம் நாளில் வானமதில்
நலமாய் உதிக்கும் சூரியனும்
சந்திர சகலகோடி நக்ஷத்திரம்
சர்வ வல்லவர் சொல்லா லமைத்தார்.

4. ஐந்தாம் நாளில் நீரில் வாழும்
அனந்த ஜாதி மச்சங்களும்
ஆகாய பறவைகள் உண்டாக்கி
அமைத்தார் ஐந்தாம் நாளிலே.

5. ஆறும் நாளில் ஊர்வனங்கள்
அனந்த ஜாதி மிருகங்களும்
அள்ளின மண்ணில் ஆதாமை
அமைத்தார் ஊதி உயிர் கொடுத்தார்.

6. ஏழாம் நாளில் பூமியிலே
எல்லாம் முடிந்து தீர்ந்ததென்று
ஓய்ந் திருந்து அந்நாளை
உயர்வாய் ஆசீர்வதித்தனரே.

குரோவர் அம்மாள்.

இராகம்-சங்கராபரணம்.] **44** [ஆதி-தாளம்.

திபதைகள்.

1. சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்!
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்!
ஏர்குணனே தோத்ரம்; அடியர்க்!
கிரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா!

2. நேர்மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்!
நித்தமு மும்மக் கடியார்களின் தோத்ரம்!
ஆர்மணனே, தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா!

3. ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்!
தினம், தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்!
ஆவலுடன் தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம் மா நேசா!

4. ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்!
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்!
சாற்றுகிறோம் தோத்ரம்! உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா!

5. மாறுப் பூரண நேசா, தோத்ரம்!
மகிழொடு ஜெப மொழி மாலையின் தோத்ரம்!
தாராய் துணை; தோத்ரம்! இந்தத்
தருணமே கொடு தோத்ரம், மாநேசா!

மாசிலாமணி ஐயர்.

45

"ஆண்டிப்பண்டாரம் உனை வேண்டிக்கொண்டேனே" மெட்டு.

பல்லவி.

மண்டலாதிபா-உனை அண்டிக்கொண்டோமே.

சரணங்கள்.

1. அண்ட சராசரங்கள் நன்றாய்ப் படைத்தவரே
விண்டலம் தன்னைவிட்டு மண்டலம் பிறந்தவரே (மண்)

2. பாவம்மிகச் செய்தோமே - பாவிகள் நாங்களாச்சே
பாவநாசர் ஏசுபாலன் மன்னித்து ரட்சியுமே (மண்)

3. அதிசயமான வரே ஆலோசனைக் கர்த்தாவே
நித்தியமானவரே நின்னடிக்கு என் சரணம் (மண்)

4. வல்லமை யுள்ளவரே-எல்லையில்லா எம் கடலே
சொல்லரும் வள்ளல் நீரே-சுவிசேஷ மேன்மையுண்டே (மண்)

5. பரிசுத்த மோங்கிவர-பரன் நாமம் புகழ்பெற
கரிசித்து உம்மை நாடி தினசரி யாம் வளர. (மண்)

சேவ்வாய்: இயேசுகிறிஸ்து.

இராகம்-இந்துஸ்தானி. 46.

பல்லவி.

ஏசு கிறிஸ்து நாதர்
எல்லாருக்கும் ரட்சகர்

சரணங்கள்.

1. மாசில்லாத மெய்த்தேவன்
மானிட ரூபுடையார்
யேசுகிறிஸ்துவென்ற
இனிய நாமமுடையார் —ஏசு

2. வம்பு நிறைந்த இந்த
மானிட ஜாதிகள்மேல்
அன்பு நிறைந்த கர்த்தர்
அதிக உருக்கமுள்ளோர் —ஏசு

3. பாவத்தில் கோபம் வைப்பார்
பாவிமேல் கோபம் வையார்
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கலம் ஆகநிற்பார் —ஏசு

4. தன்னுயிர் தன்னைவிட்டுச்
சருவலோகத்திலுள்ள
மன்னுயிர்களை மீட்க
மரித்து உயிர்த்த கர்த்தர் —ஏசு

5. அந்தர வானத்திலும்
அகிலாண்ட கோடியிலும்
எங்கெந்த லோகத்திலும்
இவரிவரே ரட்சகர் —ஏசு

தாவீது ஐயர்.

இராகம்-காம்போதி] 47 [ஆதி தாளம்.

பல்லவி

இயேசுவே! கிருபாசனப்பதியே! கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்;
இயேசுவே! கிருபாசனப்பதியே!

சரணங்கள்.

1. காசினியில் உன்னை அன்றி தாசன் எனக்காதரவு
கண்டிலேன்! சருவவல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து
நித்தனே! எனைத்திருத்தி, வைத்தருள் புத்திவருத்தி-இ

2. பேயுடை சிறையதிலும் காயவினைக் கேடதிலும்
பின்னமாக சிக்குண்டதூர்க் கன்மி ஆயினேன்;
தீயரை மீட்கும்பொருளாய் நேயம் உற்றுதிரம்விட்ட
தேவனே எனைக்கண்ணோக்கி தீவினை அனைத்தும் நீக்கி
—இ

3. சிறைப் படுத்தி னவற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே!
குறை ஏதுனை, அண்டினோர்க்கிறைவா! எனைச்சதைக்
[கும்
குற்றங்கள் அறவேதீர்த்து, முற்றுமுடியக் கண்பார்த்து
—இ

4. பொல்லா உலகம் இதில் நல்லார் எவருமில்லை
புண்ணியனே உன்சரணம் நண்ணி அண்டினேன்
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி
இந்நாள் அருள்புரிந்து உன் ஆவியைச் சொரிந்து —இ

ஜாண் பால்மர் நாகர்கோவில்.

இராகம்—மோகனம். **48** ஏகதாளம்.

பல்லவி.

பாவிக்கு நேசராரே? ஓ
யேசுமானுவேலரே - ஆ நரர்

சரணங்கள்.

1. மாசற்ற தேவனுர் மைந்தப்பிரதாபரே
யேசு கிறிஸ்துநாதரே, ஆசை மானுவேலரே —ஆ!

2. பிரயாசைப்பட்டவரே பாரஞ்சுமந்தவரே
கிருபைப் பிதாவாரே இயேசு மானுவேலரே —ஆ!

3. நெறிந்தநாணல் முறியார் பொரிந்ததிரி அவியார்
நிர்ப்பந்தரைத் தள்ளாரே, இயேசு மானுவேலரே —ஆ!

4. கெட்ட குமாரர்க்குக் கிருபைப் பிதாவந்தார்
இட்டப்பிரசாதத்தாரே, இயேசு மானுவேலரே —ஆ!

5. சத்துரு செய்வதென்ன சர்ப்பம் பொரிவதென்ன
ஸ்திரீவித்தார் வந்தாரே, இயேசுமானுவேலரே —ஆ!

6. சீயோன் குமாரியரே, சிங்காரக்கன்னிமாரே
நாயகன் வந்தாரே இயேசு மானுவேலரே —ஆ!

7. நித்திய விவாகமே நீடிய சிநேகமே
பத்தினி மாதாராரே, இயேசுமானுவேலரே —ஆ!

வேதநாயகம் சாஸ்திரியார்.

இராகம்—செஞ்சுருட்டி. **49** ஆதிதாளம்.

பல்லவி.

நம்பிவந்தேன், மேசையா, நான் நம்பிவந்தேனே - திவ்ய
சரணம், சரணம் சரணம் ஐயா நான் நம்பிவந்தேனே

சரணங்கள்.

1. தம்பிரான் ஒருவனே தம்பமே தருவனே — வரு
தவிது குமரகுருபர மனுவேலே! நம்பிவந்தேனே
—நான்

2. நின்பாத தரிசனம், அன்பான கரிசனம்; —நித
நிதசரி தொழுவதிதம் எனவும் உறுதியில் நம்பிவந்
தேனே—நான்

3. நாதனே! கிருபைகூர் வேதனே! சிறுமை தீர் — அதி
நலம்மிகும் உனதிரு திருஅடி அருளே நம்பிவந்தேனே
—நான்

4. அட்சயத் தைங்காயம் அற்புத திவ்யநேயம் — நினை
வறிவுடன் இருதயம் மகிழவும் முழுவதும் நம்பி
வந்தேனே—நான்

5. தேடினேன் பாதமே நாடினேன் வேதமே — ஓகோ
திருஉளமே கைவிடாதேயும் ஐயா! நம்பிவந்தேனே
—நான்

6. பாவியில் பாவியே கோவியில் கோவியே - கன
பரிவுடன் அருள்புரி அகலவிடாதே நம்பிவந்தேனே-நான்

7. ஆதி ஒலோலமே, பாதுகா காலமே - உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த நம்பிவந்தேனே
—நான்

வேதநாயகம் சாஸ்திரியார்.

இராகம்-தோடி] 50 [ஆதி-தாளம்.

பல்லவி.

ஏசு நசரையின் அதிபதியே-பவநரர் பிணை எனவரும்

அனுபல்லவி.

தேசுறு பரதல வாசப்பிரகாசனே - ஜீவனே
அமரர் பாவனே மகத்துவ. (ஏசு)

சரணங்கள்.

1. என்னை ரட்சிக்க வென்று பொன்னுல கிகந்தாயே
எழிய மனு வடிவம் ஏற்கவும் மகிழ்ந்தாயே
சென்னி அழுந்திநோக முண்முடி புனைந்தாயே
சிலுவை மரத்திலிரு கள்வரோ டிறந்தாயே.

2. இந்த உலகு சுவை தந்து போராடுதே
எமதுடல் உமதோடிசைந்து சீராடுதே
தந்த்ர அலகை சூழ நின்று வாதாடுதே
சுவாமி பாவியகம் நோயினில் வாடுதே.

3. நின்சுய பெலனல்லால் என் பெலனேது
நினைவு செயல் வசனம் முழுதும் பொல்லாது
தஞ்சம் உனை அடைந்தேன் தவறவிடாது
தாங்கி ஆள் கருணை ஓங்கி எப்போதும்.

4. கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும
கேடு பாடுகள் எல்லாத்தையும் தீரும்
பொறுமை நம்பிக்கை அன்பு போதவே தாரும்
பொன் னுலகமதில் என்னையும் சேரும்.

சவுரிமுத்து உபாத்தியாயர்.

புதன் : பரிசுத்தாவி.

இராகம்-பைரவி] 51 [திரிசுர-தாளம்.

பல்லவி.

நீயமனதை மாற்றவாரும், தூய ஆவியே! - கன
நேய மேவியே.

சரணங்கள்.

1. மாய பாசத்தழுந்தி வாடி மாளும் சாவிதால்-மிக
மாயும் பாவி நான். (நீய)

2. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே-மருள்
தீர்க்கும் தஞ்சமே! (தீய)

3. பரத்தை நோக்க மனமற்றேனே பதடிதான் ஐயா-ஒரு
பாவிநான் ஐயா! (தீய)

4. புதிய சிந்தை, புதிய ஆசை புதிப்பித்தாக்கவே-அதைப்
புகழ்ந்து காக்கவே. (தீய)

5. ஏக்கத்தோடென் மீட்பைத்தேடி இரந்து கெஞ்சவே-
தினம் இதயம் அஞ்சவே. (தீய)

6. கிறிஸ்து மீது நாட்டங்கொண்டு, கீதம் பாடவே-அவர்
கிருபை தேடவே. (தீய)

7. தேவவசனப் பாலின்மீது தேட்டம் உன்னவே-மிக
தெளிவு துன்னவே, (தீய)

8. ஜெபத்தின் தாகம் அகத்தில் ஊறிஜெபித்துப்போற்றவே-மிகச்
சிறப்பாய் ஏற்றவே. (தீய)

சற்குணம் உவின் பிரீட் போதகர்.

இராகம்-பூரிகல்யாணி] **52** [ஆதிதாளம்.

பல்லவி

சீர்திரியேக வஸ்தே நமோநமோ நின்
திருவடிக்கு நமஸ்தே நமோநமோ.

அநுபல்லவி

பார்படைத்தாளும் நாதா
பரம சற்பிரசாதா
நாருறுந் தூயவேதா நமோ, நமோ, நமோ —சீர்

சரணங்கள்

1. தந்தைப்பராபரனே நமோ, நமோ, எமைத்
தாங்கி யாதரிப்போனே - நமோ, நமோ;
சொந்தக் குமாரன் தந்தாய்
சொல்லரும் நலமீந்தாய்
எந்தவிர் போக்குமெந்தாய் நமோ, நமோ, நமோ —சீர்

2. எங்கள் பவத்திநாசா நமோ, நமோ, புது
எருசலேம் நகர் ராசா நமோ, நமோ,
எங்கும் நின் அரசேற
எவரும் நின் புகழ்கூற
துங்கமந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ —சீர்

3. பரிசுத்த ஆவிதேவா நமோ, நமோ, திட
பலமளித் தெமைக்காவா நமோ, நமோ
கரிசித்துத்தா நற்புத்தி
கபடற்ற மனசுத்தி
திருமொழி பற்றும்பத்தி நமோ, நமோ, நமோ —சீர்

சாமுவேல் ஐயர்.

---

53 கண்ணிகள்.

1. வாரும் வாரும் தேவ ஆவி வாசம் பண்ணும் தூய ஆவி
வரந் தந்தென்னை ஆதரி வரந்தந்தென்னை ஆதரி
வரந் தந்தென்னை ஆதரி —வாரும் வாரும்

2. சத்தியத்தின் தேவ ஆவி திக்கற்றோரை காக்கும் ஆவி
ஆறுதல் அளிக்க வாருமே ஆறுதல் அளிக்க வாருமே
ஆறுதல் அளிக்க வாருமே —வாரும் வாரும்

3. மோட்சத்தின் வழியை காட்டி நோக்கியெமைக் காப்பாற்றி
நல்லோர்களாக்கியருளும் நல்லோர்களாக்கியருளும்
நல்லோர்களாக்கியருளும் —வாரும் வாரும்

கருணாகரபுரி.

இராகம்-அமிர்தகல்யாணி] 54 [ஆதி-தாளம்.

பல்லவி.

ஆவியை மழைபோலே யூற்றும்—பல
சாதிகளை யேசு மந்தையிற்கூட்டும்

அனுபல்லவி.

பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே,
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும்—ஆவியை

சரணங்கள்

1. அன்பினால் ஜீவனை விட்டீர்; --ஆவி
அருள் மாரி பொழியவே பரலோகம் சென்றீர்;
இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும் —ஆவியை

2. சிதறுண்டலைகிற ஆட்டைப்—பின்னும்
தேடிப்பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,
பதறுதே நான்தான் உன் பர்த்தாவாம் யேசு
பாக்கியரென்னும் நல் வாக்கையருளும் —ஆவியை

3. காத்திருந்த பல பேரும்—மனங்
கடினங்கொள்ளா முன்னே உம் பாதஞ்சேரும்;
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்த லோகம் வரத்தூயாவி யூற்றும் —ஆவியை

4. ஸ்தோத்திரக் கீதங்கள் பாட—எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திரராக அநேகரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள்மாரி யூற்றும் —ஆவியை

அருளானந்தம் பிரசங்கியார்.

55

(தேன் இனிமையிலும்)

இராகம்-ஹரிகாம்போதி] [ஆதி-தாளம்.

1. ஆவியை அருளும் தேவரீர் உமது
அடியவர் இருதயத்தில்—நாங்கள்
பாவிகள் உமது பாதத்தில் சேர
பாக்கியம் பெற்றிறக்க.

2. பரிசுத்த ஆவி தரிசிக்க உம்மை
பரிசுத்தராக்கி யெம்மை—உமது
பரிசுத்த நிலையைப் பலருக்கும் சொல்ல
பரிசுத்த வரந்தாரும்.

3. ஜீவனின் ஆவி சிறிவர் எமக்கு
ஜீவனை மிகத்தந்து—நாங்கள்
ஜீவனோடிருக்கும் தேவனைத் தேடும்
ஜீவியம் செய்திடவும்.

4. நீதியின் ஆவி நிறுத்திட எம்மை
நீதியின் மார்க்கமதில்—உலகில்
நீதியும் நியாயம் ஜாதிகள் அறிய
நீதி விளங்கிடவும்.

குரோவர் அம்மாள்.

வியாழன் : கிறிஸ்தவ ஜீவியம்.

இராகம்-சுத்தபங்களா] 56 [ஆதி-தாளம்.

பல்லவி.

விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்-மெய்
விசுவாசமுள்ளவன் தான் தழைப்பான்.

சரணங்கள்.

1. நிசமாகநாம் பவத்தினிற் பிறந்தோர்—முழு
விஷமான பாவத்தினால் இறந்தோர் (விசு)

2. உய்யும் வகையறியோம் பெலனேயில்லை—நார்
செய்யும் கிரியைகளில் நலனேயில்லை. (விசு)

3. பாவக் கடனொழிக்கப் பலனேயற்றோம்—எச்
சாபம் அழிவினுக்கும் தகைமை யுற்றோம். (விசு)

4. தேவன் கிருபையொன்றே நமைப்பார்க்கும்—அவர்
மாவன்பே பாவிகளின் கடன் தீர்க்கும் (விசு)

5. ஏசன்பர் பாவிகட் காயிறந்தார்—பாவ
நாசராய்க்கல் லறைவிட்டே யெழுந்தார் (விசு)

6. மெய்விசுவாசம் யேசு புண்ணியம் பற்றும்—அது
ஐயமுறாமல் நம்பும் யேசுவைமுற்றும் (விசு)

7. நம்பும்பாவி நீதிமானென் றேபரன் தீர்ப்பார்—யே
சம்பரனின் நீதியங்கியாலவர் போர்ப்பார் (விசு)

8. நீதிமானைக் குற்றஞ்சாட்ட யாராலேயாகும்—அவன்
பாதகம் பழிமரணம் யாவுமே போகும் (விசு)

9. தேவனின்பிள்ளை நானென்றேயவன் துள்ளுவான்—தீய
பாவவழிதனைப் பகைத்தே தள்ளுவான் (விசு)

10. கர்த்தன் வீட்டுமுற்றங்களிலே செழிப்பான்-பொல்
லாப் பித்தனும் பேயை நகைத்தே பழிப்பான். (விசு)

சாமுவேல் ஐயர்.

இராகம் - கௌசிகை. **57** ஆதி தாளம்.

பல்லவி.

மகனே! உன் நெஞ்செனக்குத் தாராயோ? மோட்ச
வாழ்வைத் தருவேன் இது பாராயோ?

சரணங்கள்.

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே-பாவ
அழுக்கை நீக்கியருள் கொடுப்பேனே —மகனே!

2. உந்தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே - அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே —மகனே!

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ? நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ? —மகனே!

4. உந்தன் பாவம் முற்றும் பரிகரிப்பேனே - அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே —மகனே!

5. உலக வாழ்வினைவிட் டகல்வாயே - மகா
உவப்பாய் கதி ஈவேன் மகிழ்வாயே —மகனே!

யோசேப்பு நாகர்கோவில்.

இராகம் - சங்கராபரணம். **58** தாளம் சாப்பு.

பல்லவி.

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே.

அனுபல்லவி.

அன்னை தந்தை யுந்தன் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்தமல்லாது இப்போது - என்னை

சரணங்கள்.

1. அந்தகாரத்தினின்றும் பவப்பேய்
அடிமைத் தனத்தினின்றும்
சொந்த ரத்தக்கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன்-என்னை

2. ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீனமாக்கிவைத்தேன்
பாத்திரமாய் அதை பாவித்துக்கொள்ளக்
காத்திருக்கின்றேன் கருணைசெய் தேவா —என்னை

3. நீதியினுயுதமாய் அவயவம்
நேர்ந்துவிட்டேன் உமக்கு
ஜோதி பரிசுத்த ராலயமாகவே
சொந்தமாய் தந்தேன் என்தன் சரீரத்தை —என்னை

சிமியோன் ஐயர்.

முகாரி. **59** ரூபகதாளம்

பல்லவி.

தந்தேன் என்னை யேசுவே
இந்த நேரமே உமக்கே.

அநுபல்லவி.

உன்தனுக்கு ஊழியஞ் செய்ய
தந்தேன் என்னைத் தாங்கியருளும் —தந்தேன்

சரணங்கள்.

1. ஜீவ காலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து —தந்தேன்

2. உலகோர் என்னை நெருக்கி
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன் — தந்தேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
யேசுவே அங்கே இதோ போகிறேன் —தந்தேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்ட திக்கும் ஆளும் தேவனே
அடியேன் உள்ளில் அமரச் செய்திடும் —தந்தேன்

5. ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சிலுவையில் சீஷர்க்களித்த ஆவியால்
இன்று அடியேனை நிரப்பும் —தந்தேன்

சந்தியாகு ஐயர்.

இராகம் தோடி **60** ரூபகதாளம்.

மெட்டு "உந்தன் ஆவியே"

கண்ணிகள்.

1. எங்கேயாயினும் - சுவாமி - எங்கேயாயினும்
அங்கே யேசுவே - உம்மை - அடியேன் பின்செல்வேன்
2. பங்கம் பாடுகள் - உள்ள - பள்ளத்தாக்கிலும்
பயமில்லாமல் நான் - உந்தன் - பாதம் பின்செல்வேன்
3. எனக்கு நேசமாய் - உள்ள எல்லாவற்றையும்
எடுத்திட்டாலுமே - உம்மை - எங்கும் பின்செல்வேன்
4. தேவையானதை - எல்லாம் - திருப்தியாய்த்தந்து
சாவுநாள் வரை - என்னைத் - தாங்கி நேசிப்பீர்

சந்தியாகு ஐயர்.

வெள்ளி : கிறிஸ்துவின் பாடுகள்.

இராகம்-லாவணி] **61** [ஆதி-தாளம்.

பல்லவி.

குருசினில் தொங்கியே குருதியும் வடியக்
கொல்கதா மலைதனிலே—நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர், பாவி,
கொள்ளாய் கண்கொண்டு.

சரணங்கள்.

1. சிரசினில் முண்முடி உறுத்திட அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ; தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத்திரள் சூழ. —குருசினில்

2. பாதகர் நடுவினில் பாவியினேசர்
பாதகன் போல் தொங்க — யூத
பாதகர் பரிகாசங்களே பண்ணிப்
படுத்திய கொடுமைதனை —குருசினில்

3. சந்திர சூரிய சகல வான் சேனைகள்
சகியாமல் நாணுதையோ — தேவ
சுந்தர மைந்த ருயிர் விடுங்காட்சியால்
துடிக்கா நெஞ்சுமுண்டோ. —குருசினில்

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே — அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூற் றோடுது பார். —குருசினில்

5. எருசலே மாதே, மறுகிநீ யழுது
ஏங்கிப் புலம்பலையோ! நின்
எருசலையதிபன் இளமணவாளன்
ஏற்றமா கோலமிதோ. —குருசினில்

ஏசடியான் ஐயர்.

இராகம்-சங்கராபரணம்] **62** [திரிசுர-தாளம்.

பல்லவி.

பாவி நான் என்ன செய்வேன் — கோவே
ஜீவன் நீர் விட்டதற்காய்!

அனுபல்லவி.

தேவ கோபத்தினுல் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு, சீவித்ததென்கொலோ! (பாவி)

சரணங்கள்.

1. நாடி எனைத் தயவாய்—மணஞ் செய்யத் தேடிவந்தீர், அரசே
ஆடுகளுக்காக நீடி உயிர்தரப்
பாடுபட்டுக் குருசுடிறந்தீர் அன்றோ! (பாவி)

2. பொன்னுல காதிபனே, தேவரீர் என்ன செய்தீர் ஐயனே
சின்னப்படுத்தவும், கன்னத் தடிக்கவும்,
சென்னியில் முண்முடி தன்னை அழுத்தவும் (பாவி)

3. வாராலடிக்கப்பட்டுக்-குட்டுண்டு-வாதைப் பட்டெண்ணம் அற்றீர்
சீராமனுடவதாரா சருவாதி
காரா பரம குமாரா ஓலோலமே. (பாவி)

4. வாதை உமக்கெதிஞல்-உண்டாயிற்று-பாதகி பாவத்திஞல்
வேதம் நிறைவுற, ஆதிபவம் அற
நீதிதரும் இயேசுநாதா சுவாமியே! (பாவி)

5. ஆச்சரியம் சாகவருகிருர் - ஆதிபன் அன்பாக:
தாட்சியுடன் மேய்ப்பர் காட்சியாய் மந்தைக்குத்
தம்ஜீவனைத் தாருர்; அஞ்சல், அபயமே. (பாவி)

6. குற்றமற்ற மீட்பர், - பவக்கடன் - முற்றும் அறத்தீர்ப்பர்
கொற்றவர்க்கும், கல்வி கற்றவர்க்கும், சுரர்
மற்றவர்க்கும் அளவற்ற கிருபையே. (பாவி)

வேத நாயகம் சாஸ்திரியார்.

நீலாம்புரி. **63** திஸ்ர ஏகதாளம்.

பல்லவி.

சரணம், சரணம் அனந்தா சச்சிதானந்தா,
தாவீதின் மைந்தா, ஓசன்ன! சரணபதந்தா

சரணங்கள்.

1. ஆதி சருவேஸ்பரனே! ஞானபரனே கிரு
பாகரனே! பாவியெனை ஆளும் ஐயனே —சரணம்

2. தேவசுதன் பொந்தியுப் பிலாத்தினிடமே
சென்று பல பாடுபடவும் தயவானுர் —சரணம்

3. ஆசாரிமார் முறைப்பா டானதுசொல்ல
ஆண்டவனுர் மா பெறுமை யாகவே நின்ருர் —சரணம்

4. சத்துருக்கள் சொன்னகுற்றச் சாட்டுதற்கெல்லாம்
தற்பரனுர் பேசாமல் சாதுவாய் நின்ருர் —சரணம்

5. பித்தன் என்றுவெள்ளை அரைச்சட்டை அணிந்து
பேதக எரோதே பரிகாசம் பண்ணிஞன் —சரணம்

6. பரபாவோடதிபதியைப் பணிய நிறுத்தி,
பாதகனை யோ? இறையை யோ? விட, என்ருன் —சர

7. ஜீவனுட அதிபதியைச் சிலுவையில் கொன்று,
திருடனையே விட்டுவிடத், தீயவர் கேட்டார் —சரணம்

8. அடிமையைப்போல் ஆண்டகையை ஆக்கினைத்தீர்ப்பிட்
டாகாத கள்ளனையே விடுதலை செய்தான் —சரணம்

9. கற்றூணில் சேர்த்திறுகக் கட்டி வலுவாய்
காவலன் தன்சேர்வை எல்லாம்கூடி அடித்தார் —சரணம்

10. சேர்வைகள் எல்லாம் திரண்டு கூடிமுடிக்க
தேசிகர் கைக்கூலி கொடுத்தார்கள் அடிக்க —சரணம்

11. வஸ்திரம் எல்லாம் களைந்து, கஸ்தி உறவே
வாரதினாலும், சவுக்கினாலும் அடித்தார் —சரணம்

12. நிந்தை, பரிகாசம், மிக விந்தைகள்சொல்லி
நிஷ்டூரர் சகலாத்துச் சட்டைய திட்டார் —சரணம்

13. முள்ளின்முடி செய்தழுத்தி வள்ளல் எனவே
மூர்க்கமுடனே தடிகொண்டார்க்க அடித்தார் —சரணம்

14. கையினில் செங்கோலெதென்று மூங்கில் ஒன்றிட்டு
காவலன் நீயூதருக்கென் றேவியஞ் சொன்னார் —சரணம்

15. துப்பினர், முகத்தினில் அதிக்கிரமமாய்
துன்னிய கைக்கோலை வாங்கிச்சென்னியில் போட்டார்
—சரணம்

16. முழங்காலிலே இருந்து தெண்டன் பண்ணியே
முன்னவனைத் தான் இறைஞ்சிக் கன்னத்தறைந்தார் —சர

17. தந்துசெய்து பொந்தியுப் பிலாத்து துரைதான்
தற்பரனை விட்டுவிட தன்னுள் எண்ணினான் —சரணம்

18. எந்தவித எத்தனம் செய்தாலும் நடவா
தீற்றினில் தண்ணீர் எடுத்துக்கரம் விளக்கினான் —சரணம்

19. தண்ணீர் தனை எடுத்துக் கைகழுவியே,
தற்பரனைக் கொல்வதற்கங் கொப்புக்கொடுத்தான் —சர

20. கள்ளனையே விட்டு விட்டு யூதர்கட்காக,
காவலனைக் குருசறையப் பாவியும் தீர்த்தான் —சரணம்

வேதநாயகம் சாஸ்திரியார்.

64 கண்ணிகள்.

1. சிலுவை சிலுவை சிலுவையே சிலுவை — தேவ
சுதன் பாடுபட்ட சிலுவையே சிலுவை.

2. சங்கிலியால் சாத்தானைக்கட்டி சமர் புரிந்த சிலுவை
சர்வ லோகம் ஜெயம் கொள்ளும் சமர்த்துள்ள சிலுவை

3. மேலோகம் பூலோகம் மெச்சும் இந்த சிலுவை
கால கால காலமெல்லாம், காட்சியுள்ள சிலுவை.

4. பாவிகட்கும் தேவனுக்கும் பட்சம் வைத்த சிலுவை
பரலோகம் எங்கும் செல்லும் ஜெயமுள்ள சிலுவை.

இராகம் - சலநாட்டை. **65** திரிபுடைதாளம்.

1. உருகாயோ நெஞ்சமே நீ
குருசினில் அந்தோ பார்
கரங்கால்க ளாணி யேறி
திருமேனி நையுதே.

2. மன்னுயிர்காய்த் தன்னுயிரை
மாய்க்க வந்த மன்னவனும்
இந்நிலமெல்லாம் புரக்க
ஈன குரு சேறினர்.

3. தாகமிஞ்சி நாவறண்டு
தங்கமேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து
எத்தனையாய் ஏங்குறார்.

4. மூவுலகைத் தாங்கும் தேவன்
மூன்றாணி தாங்கிடவோ
சாகும் வேளை வந்திப்போது
சிலுவையில் தொங்குறார்.

5. வல்ல பேயை வெல்ல வானம்
விட்டு வந்த தெய்வம் பாராய்
புல்லர் இதோ நன்றி கெட்டு
புறம்பாக்கினா ரன்றோ.

6. திண்டுபோல எண்டிசையின்
தொண்டர் பாவம் ஆண்டான் மேலே
நின்றதே ஓர் பண்டு ஏவை
தின்ற சாபம் மண்டுதே.

7. நித்ய காலம் பாத்திரராய்
நீசர்வான் தலத்துய்ய
சத்ய தாசர் சித்த மேவும்
சங்கை ராஜன் பாடு பார்.

வேதநாயகம் பாகவதர்.

சனி : நியாயத்தீர்ப்பு, மாணம்.

இராகம்-கியால்] **66** **[ரூபக-தாளம்.**

பல்லவி.

குணப்படு பாவி — தேவ
கோபம் வரும் மேவி — இப்போ

அனுபல்லவி.

கணப் பொழுதினில் காயம் மறைந்துபோம்
காலமிருக்கையில் சீலமதாக நீ (குண)

சரணங்கள்.

1. கர்த்தனை நீ மறந்தாய் — அவர்
கற்பனையைத் துறந்தாய்
பத்தியின்மை தெரிந்தாய் — பொல்லாப்
பாவவழி திரிந்தாய்
புத்திகெட்ட ஆட்டுக்குட்டியே ஓடிவா
உத்தம மேய்ப்பனார் கத்தியழைக்கிறார் (குண)

2. வேதத்தில் உந்தனைப்பார் — அந்த
வேத விதிப்படி நேர்
நீதியைச் செய்தவனார் — தூய
நின்மலன் வாக்கதோகூர்
தீதுறும் பாவியுன் தீமை யறிந்துகொள்
நாதன் கிறிஸ்து இப்போதே உரைக்கிறார் (குண)

3. துக்க மடையாயோ — பாவி
துயர மாகாயோ
மிக்கப் புலம்பாயோ — மனம்
மெலிந் துருகாயோ
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ
தக்க அருமறைப் பக்கந்தொடாராயோ (குண)

4. தாவீதரசனைப்போல் — தன்னைத்
தாழ்த்தும் மனுசேயைப்போல்
பாவி மனுஷியைப் போல் — மனம்
பதைத்த பேதுருபோல்
தேவனுக்கேருத தீமை செய்தேனென்று
கூவிப்புலம்புநல் ஆவியின் சொற்படி (குண)

5. உன்னை நீ நம்பாதே — இவ்
வுலகையும் நம்பாதே
பொன்னை நீ நம்பாதே — எப்
பொருளையும் நம்பாதே
தன்னைப் பலியிட் டித்தாரணி மீட்டவர்
நின்னையும் ரட்சிப்பார் அன்னவரைப் பற்று. (குண)

சாமுவேல் ஐயர்.

இராகம்-இந்துஸ்தான் காப்பி. 67 ஆதி தாளம்.

பல்லவி.

வையகந்தனை நடுத்தீர்க்க இயேசு
வல்லவர் வருகிறார் திருமறைக்கேற்க

அனுபல்லவி

பொய்யுலகோர்களின் கண்களும் பார்க்கப்
பொற்பதிதனிற் பரன் சேயரைச் சேர்க்க

சரணங்கள்

1. வானங்கள் மடமடப்போ டொழிந்திடவே
மகிதலம் அதிர்ச்சியாய்த் தானடுங்கிடவே
பானுவும் மதியுட னைத்துமங்கிடவே
பஞ்சபூதியங்களும் தானழிந்திடவே —வைய

2. முக்கிய தூதனெக்காளமே தொனிக்க
முன் மரித்தோரெலாந் தாமெழுந்திருக்க
அக்கண முயிருளோர் மறு உருத்தரிக்க
ஆண்டவர் வருகிறார் பக்தர்கள் களிக்க —வைய

3. யாவரின் சிந்தை செய்கையும் வெளிப்படற்கு
இரண்டு புத்தகங் களுந்திறந்த வரவர்க்குப்
பூவுலகினிலவர் நடந்து வந்ததற்குப்
புண்ணியனளவுடன் பலனளிப்பதற்கு —வைய

4. ஆண்டவன் வார்த்தையை அணுவுமதியாமல்
அநித்திய வாழ்வினை நம்பி ஓயாமல்
பூண்டிருந்தோர்க்கையோ அவரைச் சாகாமல்
புழுக்களில் தொலைத்திட நேரஞ்சொல்லாமல் —வைய

5. அடைக்கலன் யேசுவை அறிந்தவர் நாமம்
அழிந்திடாதவர்களின் வாழ்வது க்ஷேமம்
படைத்திடு வாயிந்தக் கணமுனை க்ஷாமம்
பற்றிடக்கூடுமோ திடுக்கென வேகம் —வைய

சாமுவேல் ஐயர்.

சௌராஷ்டிரம் **68** திரிபுடைதாளம்.

பல்லவி.

வருவார், விழித்திருங்கள்; — இயேசுநாதர்
வருவார், விழித்திருங்கள்

அனுபல்லவி.

பெரியவர், சிறியவர், பேதையர், மேதையர்,
சருவர்க்கும் நடுத்தீர்த்துத் தகுபலன் அளித்திட —வரு

சரணங்கள்.

1. பேரிகையால் அண்ட பித்திகளும் குலுங்கப்,
பேர் எக்காளத் தொனியால் பேய்க்கணங்கள் கலங்கத்
தாரணியோர் மலங்கத் தமைப்பற்றினோர்களும்
சீர்நிறை தூதரும் சேர்ந்து சூழ்ந்திலங்க —வரு

2. வானம் மடமடென்க வையங்கிடு கிடென்க
ஈனப்பேயைச் சேர்ந்த எவரும் நடுநடுங்க
மானம் இன்றிவாழ்ந்த மாபாதகர் அடங்க
ஞான கானம்பாட நல்லோர் சபை தொடங்க —வரு

3. துன்பம் உற்றோர்க்கு ஜீவ இன்ப கனிகள் ஊட்டத்
தொண்டு செய்த அன்பருக்கு அண்டர் முடிகள் சூட்ட
அன்பற்றோரை நரக வன்புத்தீயில் வாட்ட
அத்தனைச் சேர்ந்தோரை நித்ய கதியில் கூட்ட —வரு

4. விசுவாசிகள்தமை மெச்சி புகழுதற்கும்
மேலா மோக்க தலத் தோர் சால மகிழுதற்கும்
விசுவாச ஈனரை வியவா திகழுதற்கும்
விண்ணோர் குழாங்கள் சூழ அண்ணல் கிறிஸ்தரசர் —வரு

தேவவரம்முன்ஷி.

69

பல்லவி.

ஏசு ராஜா வருவார்
இன்னும் கொஞ்சக் காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம்.

சரணங்கள்.

1. பாவத்தின் பலன் நரகம்
ஒ பாவி நடுங்கிடாயோ
காண்பது எல்லாம் அழியும்
காணாத தல்லோ நித்தியம் (ஏசு)

2. உலக இன்பம் நம்பாதே
அதின் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே
ஓர் காசுங்கூட வராதே (ஏசு)

3. உன் காலமெல்லாம் போகுதே
உலக மாய்கையிலே
ஒ தேவ கோபம் வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ (ஏசு)

4. தேவன் பின் வெள்ளம் ஓடுதே
கல்வாரி மலைதனிலே
உன் பாபம் யாவும் நீங்கிப்போம்
அதில் ஸ்நானம் செய்வ தாலே (ஏசு)

5. மா பாவியான என்னையும்
என் நேசர் ஏற்றுக்கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா
தேவாசீர் வாதம் பெறுவாய் (ஏசு)

மார்தோமா சபை.

இராகம்-ஆனந்த பைரவி] 70 [ஆதி-தாளம்.

" தில்லையம்பல ஸ்தலமொன்றிருக்குதாம் " என்ற மெட்டு.

பல்லவி

நல்ல மரணம் தாரும் தேவனே – நான் சாகையில் திரு
உள்ளமுருகிக் காரும் ஜீவனே.

அனுபல்லவி.

சொல்லரிய உன் கிருபை நம்பினேன்.
தோஷியென்பவம் யாவும் விளம்பினேன்
கள்ளனைச் சிலுவையில் ரட்சித்த
காட்சிதந்திடும் மாட்சிமை தேவா (நல்ல)

சரணங்கள்.

1. பாவ உலகம் மாமிசம் பேயே–செய்யும் போரிலிளைத்து
பங்கமான தென்னங்கம் ஆவியே,
ஜீவ வழியைக் கடந்த பாவியே–சிலுவையி லுதிரத்தை
சிந்தியே தீர்த்தீர் பாவக்கடனையே
ஆவலாக உன்பாதம் பணிந்தேன்
அனுதினமும் ஓயாமல் நினைந்தேன்
காவலாக உன்னடைக்கலம் வந்தேன்
கதறும்பிள்ளையை உதரித் தள்ளாமல் (நல்ல)

2. உலக நேசம் பே யொழியட்டும்–கெட்டமாமிசசிந்தை
ஊறி உயிர் கொள்ளாதே சாகட்டும்
அங்கவல்லமை அழிந்துபோகட்டும்–அவன் அக்கினி அம்பு
அடியன்மேல் படா தாவிக்காக்கட்டும்
பலகவலை பறந்து போகட்டும்
பாவியும் பரிசுத்த மாகட்டும்
இலகும் ஆவியின் வரங்க ளோங்கட்டும்
இறக்கும் போதொரு தூதனிறங் கட்டும் (நல்ல)

3. பெண்பிள்ளைகள் கலங்கிடாமலும்-நான் பெற்ற பாலர்கள்
பேதலித்துக் கண்ணீர் சிந்தாமலும்
இன்று நான்படும் மரண அவஸ்தையும் நீளாமலிரங்கி
ஆத்துமத்தையும் காத்துரட்சியும்
கண்டுன் கருணைமுகம் தரிசிக்க
விண்டுன் பாவ பலியை விஸ்வாசிக்க
காயமைந்தையும் நான் பரிசிக்க
விண்ணுலகம் கண்டு நான் பிரவேசிக்க. (நல்ல)

முத்துசாமி புதுக்கோட்டை.

ஞாயிறு: உயிர்த்தெழுதல், நித்திய ஜீவன்.

இராகம்-சகானா. **71** ஆதி தாளம்.

பல்லவி

அல்லேலூயா ஜெயமே அமலனெழுந்தார் அதிசயமே.

அனுபல்லவி.

பொல்லாப்பேய் நடுங்கிவிழப்
பொற்பரனின் சேய்கள் மகிழ —அல்

சரணங்கள்.

1. பாவம் பேயொடு மரணம்
பாழன் பேயினது அரணம்
சீவபரனால் திரணம்
திடமாயடைவோம் இவர் சரணம் —அல்

2. வலுசிங்கம் சிறையாச்சு
மாற்றானின் வல்லமை போச்சு
அலகையுளதோ பேச்சு
அதுவிடலாமோ இனி மூச்சு —அல்

3. திருநாதர் பேயிருபேர்
செய்தார் கொடியதா மொருபோர்
அருணாதர் தாம் ஜெயம் நேர்
அடைந்தார் ஓ! சபையே களிகூர் —அல்

சாமுவேல் ஐயர்.

இராகம் - இங்கிலீஷ். **72**

1. யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார் நரரை ஜெயித்தெழுந்தார்

2. வேதாளக் கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகி வாடிடவே

3. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே திரனை மதித்திடவே

4. மரணச் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன

5. எழுந்தாரென்ற தொனி எங்கும் கேட்குதே
எங்கும் கேட்குதே பயத்தை எங்கும் நீக்குதே

6. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார்

7. உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை என்றும் மரிப்பதில்லை.

இராகம்-லாவணி] **73** [ஆதி-தாளம்.

உச்சித மோட்ச பட்டணம் போக
ஓடிநடப்போமே - அங்கே
உன்னதயேசு மன்னவருண்டு, ஐயா இன்பமுண்டு

1. சித்திரச் சீயோன் சேர்ந்திடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய் - எங்கள்
சீவனிதிபர் யேசுநம்மதிபர்
சீயோன் துரைமனுவேல் —உச்சித

2. அன்பினால் அழைப்பார் ஆறுதல் சொல்வார்
அதிபதியேசையர் - அங்கே
இன்பங்களுண்டு யேசுவின் சமுகம்
என்றென்றும் ஆறுதலே —உச்சித

3. கீதங்களோடு யேசுவைப் போற்றிக்
கெம்பீரமாய் நடப்போம் - அங்கே
கிளர் ஒளியுள்ள பட்டண ராஜன்
கீதங்கள் நாம் அறைவோம் —உச்சித

கிறிஸ்மேஸ் சேலம்.

இராகம்-இங்கிலீஷ். **74**

1. இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்
2. பரம சுகங்களின் இனிய ரசம்
பரமேசனோடு யான் பானம் செய்வேன்
3. பரம பிதா வெந்தன் கண்ணி னின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்
4. சத்துரு சேனைகள் அங்கே யில்லை
இயேசுவின் புத்திரர் மாத்திரமே
5. தேவாட்டுக் குட்டியின் திருமனைவி
சிறப்புட னிலங்கிடும் தேசமது
6. கேருபீன் சேராபீன் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே
7. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாதே
சொர்லோக நாட்டுக்கோர் இணையில்லையே
8. பரிசுத்த ஆவியின் பளிங்கு நதி
பளபளென் றொளியிடும் தேசமது
9. ஜீவ விருட்சமாங் காற்றருகில்
மாதந்தோறும் புதுக் கனி தருமே
10. நவரத்ன நிர்மித பட்டணத்தில்
இராப் பகல் சூரியன் யேசுதானே.

சகாயம் பிரசங்கியார்.

இராகம்-காம்போதி] **75** [ஆதி-தாளம்.

பல்லவி.

வான நகரதின் மேன்மையென சொலுவோம் கன
வலன் நல வருக்கருள் —வான

சரணங்கள்.

1. பானொளி ரத்னங்க ளஸ்திபாரமாந் திருவாசல்கள்
பன்னிரு முத்துக்கள் தெருபொன்னின் மயமே
தேனினும் மதுரம் தெளிவிற்பளிங்கதான ஆறும்
ஜீவதருவும் இருக்கும் செப்பரும் அழகதான —வான

2. அங்கு நோய்துன்பம் விசாரம் அக்ரமம் கண்ணீர்
அற்பமு மிருப்பதில்லை சொற்பமாகிலும் [தரித்ரம்
பொங்கியே முச்சத்துருக்கள் போரினுக்கிழுப்பதில்லை
புண்ணியனுர் சொன்னதிரு உன்னத எருசலையாம்—வான

3. அந்நகர் குடிகள் வெண்மையான அலங்கார
அர்ச்சய உடுப்புசிரமானதிற் கிரீடம்
மன்னவர் போலேயணிந்து மகிமையி னாசனத்தில்
வாய்மையாக வீற்றிருப்பார் தூய்மையான அந்தநல
—வான

4. நேயமுற் பிதாக்கள் தீர்க்கர் நின்மலனப்போஸ்தலர்கள்
நீதிமான்கள் எல்லவரும் தூதர் நல்லோரும்
ஓய்வதின்றித் தோத்ரகீத உச்சிதத் தொனிமுழக்கி
உன்னதனைப் போற்றுவார்கள் பன்னரும் சிறப்பதுள்ள
—வான

சாமுவேல் ஐயர்.

திடப்படுத்தல்.

ஆனந்தபைரவி] 76 [ஏகதாளம்

பல்லவி.

சிந்தை செய்யும் என்னில் ரம்புவீர்—தேவாவி உமைச்
சிந்தை செய்யும் என்னை ரப்புவீர்

அனுபல்லவி.

தந்தைப் பரனுரினின்றும் மைந்தனுர் கிறிஸ்தினின்றும்
விந்தையாய்ப்புறப்பட்டேகும் வித்தகத்தின் ஆவியே நீர்
—சிந்தை

சரணங்கள்.

1. பாலனைப் பரப்பிதாவுக்கும் - அவரின்நேய
சீலனும் கிறிஸ்தியேசுக்கும்
சாலவே என்றென்னைச் சேர்த்திட்டீர் அத்தாலே தேவ
கோலம் எந்தன் பங்கதாயிற்று [டுக்க
தந்தை தாயர் தந்தவாக்கைச் சொந்த வாயால் நான் கொ
வந்திருக்கும் வேளைதனில் தந்தைசுதன் ஆவியே நீர் —சிந்

2. திரியேக தேவனே என்தே - அவரைவிட்டுப்
பிரியேன் என் பிராணன்போனாலும்
அரிய அவரின் தயையே - எனக்கு என்றும்
உரிய ஒன்றான பொருளே [போகேன்
பேய், லோகம், மாம்சம் என்னைப்பிடித்திழுத்தாலும்
ஓய் பரிசுத்த ஆவி உதவுவீர் எனக்கென்றும் —சிந்தை

3. பக்தியுள்ள ஜீவியம்செய்து, பகலின் சேயாய்
எத்திசையினும் விளங்கிட
சுத்தமனம் செய்கையைத்தாரும்-என்னை நான் என்றும்
தத்தம் செய்யக் கற்பித்தருளும்
உன்னதத்தில் வாழ் தந்தைக்கும் உயர்சுதன் ஆவியர்க்கும்
என்னகத்தினின்றும் துதி ஏறுவதாக ஆமேன் —சிந்தை

தேவசகாயம் ஐயர்.

இராகம்—ஆனந்தபைரவி. 77 ரூபக தாளம்.

பல்லவி.

நம்பினேன் உனதடிமை நான், ஐயா —
திடப்படுத்தி என்தனை —
நடத்திக் காப்பதுன் கடமைதான் ஐயா

அனுபல்லவி.

உம்பரும்புவி நண்பரும் மற்ற
உயிர்களும் பல பொருள்களும் தொழும்
தம்பிரானே மெய் அம்பராபரா
தாசன்மீது நன்னேச அருள்செய் —நம்பி

சரணங்கள்.

1. தீதாம் என்பவம் யாவையும் பொறுத்து - திருக்கருணையின்
செய்து பின்வரும் இடர்களை அறுத்து, [அருள்
வேதாந்தப்படி என்னைத்தான் வெறுத்து - நான் உன்னை
மெய்யருளை என் உள்ளத்தில் நிறுத்து [பின்செல்ல
ஆதாரம் எனக்கார் உனையன்றி?
அம்புவியில் யான் நம்பவேறுண்டோ? உன்
பாதா தாரத்தில் ஒதுங்கினேன்; எனைப்
பாரும் கிருபை தாரும், ஐயரே —நம்பி

2. என்னைப்படைத்த தேவனும் நீயே; - திரு உதிரத்தைச்
ஈடேற்றிக்கொண்ட மீட்பனும் நீயே; [சிந்தி
இன்னமும் பின்னும் காப்போனும் நீயே; - ஒருபோதும்
இன்பத்தில் வைக்கும் ஜீவனும் நீயே; [குன்றிடா
உன்னையன்றி யான் நம்பினவை வேறே
துண்டோ? உன்தன்வாய் விண்டுரை செய்யேன்,
என்னையா இதை யாவும் சொல்லுமே;
ஏழைக்குன் திருத்தாள் அருள் செய்யுமே —நம்பி

3 சுத்த இருதயத்தினைத் தருவாய்; – பரிபூரணானந்த
ஜோதி ஆவியின் நல்துணை அருள்வாய்;
நித்தமும் பயபக்தியைத் தருவாய்; நான் ஊழியம் செய்ய
நீதனே, எந்தன் முன் எழுந்தருள்வாய்,
அத்தனும் பரிசுத்தனும் என
தன்பனும் அனுகூலனுமான
பத்தனே, பரிசித்தனே, உனைப்
பாடினேன், கிருபை சூடி ஆள், ஐயா; —நம்பி

4. ஊக்கமும் மனத்தீர்க்கமும் வேணும்;-சுவிசேஷ உரையை
உற்றுப்பார்த்ததில் தேறவும் வேணும்;
ஆக்கமும் அன்பர் சேர்க்கையும் வேணும்; உனக்கூழியஞ்
ஆவியும் அதின் ஈவதும் வேணும் [செய்ய
ஏக்கமும் மனக்கவலையும் நீங்க
இன்பமுள்ள உன் அன்பின் நல்திரு
வாக்கையே நோக்கி இருப்பதால் என் முன்
வாரும், கிருபை தாரும், ஐயரே, —நம்பி

மரியான் உபதேசியார்.

பைரவி] 78 [திரிசுரதாளம்.

மெட்டு "தீயமனதை மாற்றவாரும்")

கண்ணிகள்.

1. எந்தன் ஜீவன் சொந்தமாகத்
தத்தம் செய்கிறேன் — ஜீவன் தந்த நாயகா

2. எந்தன் நிமிஷம் நாட்கள் யாவுந்
தத்தம் உமக்கே - உண்மை - என்றும் போற்றவே

3. எந்தன் வெள்ளித் தங்கமெல்லாம்
பாதத்தில் வைத்தேன் - என்றன் சொந்தம் சூன்

4. எனது புத்தியுத் தியாதி [யமே
மனதின் தத்துவம் - யாவும் உமது பாத்தியம்

5. எந்தன் சித்தம் உன்றன் சித்தம்
நித்தமுமதே — எந்தன் — சொந்த நாதனே.

யாழ்ப்பாண பாட்டு.

இராகம்—கமாஸ்] 79 [ரூபக தாளம்.

பல்லவி.

நீயுனக் குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்டபாவி,
நீயுனக் குச் சொந்தமல்லவே..

அனுபல்லவி.

நீயுனக்குச் சொந்தமல்லவே, ரீ—ரீ—ரீ—ரீ,
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம் (நீயுனக்)

சரணங்கள்.

1. சிலுவைமரத்தில் தொங்கி மரித்தாரே; திருரத்தம், ரத்தம்
திருவிலாவில் வடியுது, பாரே;
மிகுந்த பரிசத்தால் கொண்டாரே; ரீ—ரீ—ரீ—ரீ,
மோட்ச மகிமையுனக் கீவாரே. (நீயுனக்)

2. இந்த நன்றியை மறந்துபோனாயோ? ஏசுவைவிட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்தத முன திரயங் காயமும், ரீ—ரீ—ரீ—ரீ,
சுவாமி கிறிஸ்தினுடைய தல்லவோ? (நீயுனக்)

3. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே; உலகைவிட்டு
மரிக்கினும் அவர்க்கே மரிப்பாயே;
மரித்து உயிர்த்த யேசுநாதரின், ரீ—ரீ—ரீ—ரீ,
மலரடி எந்நாளும் நினைப்பாய். (நீயுனக்)

தேவசகாயம் உபாத்தியாயர்.

80

"மெட்டு:— கல்லுமல்லவே காயம்."

பல்லவி.

யேசு சுவாமி ஏழை என்னை ஈகிறேனையா.

அனுபல்லவி.

என்று மெனைத் தொண்டனாக ஏற்றிடுதூயா! (யேசு)

சரணங்கள்.

1. தந்தையும் நீ, தாயாரும் நீ, தமர்களும் நீயே,
தஞ்ச மென்றுனை யடைந்தேன், தயைபுரிவாயே:— (யே)

2, கானலை நீ ரென்று மாயுங் கடுவன் மான்போல்
காசினி மீதே யலைந்து கடுகினே னுன்பால்:— (யேசு)

3. இவ்வுலக மேன்மை செல்வம் யாவும் விழலே,
இன்ப முன்றன் பாதமென்று மேத்தித் தொழவே:— (யே)

4. பாவியெனை மீட்பதற்காய்ப் பாடுபட்டாயே,
பாதசேவை செய வெனக்குப் பலமளிப்பாயே:— (யேசு)

யாழ்ப்பாணப் பாட்டு.

தேவ வசனம்.

இராகம்—இந்துஸ்தானி. **81** ஏக தாளம்

பல்லவி.

வேத புத்தகமே வேத புத்தகமே
வேத புத்தகமே விலை பெற்ற செல்வம் நீயே.

சரணங்கள்

1. பேதைகளின் ஞானமே — பெரிய திரவியமே
பாதைக்கு நல் தீபமே — பாக்கியர் விரும்பும் தேனே.

2. என்னை எனக்குக் காட்டி — என் நிலைமையை மாற்றி
பொன்னுலகத்தைக் காட்டி—போகும் வழி சொல்வாயே.

3. துன்ப காலம் ஆறுதல் — உன்னாலுண்டு; சாகுதல்
இன்பமாகு மென்றுமே — என்றும் நம்பின பேர்க்கே.

4. பன்னிரு மாதங்களும் — பரித்துண்ணலாம் உன் கனி
உன்னித் தியானிப்பவர் உயர் கதி சேர்ந்திடுவார்.

அருளானந்தம் பிரசங்கியார்.

இராகம்—ஹரிகாம்போதி. **82** ஆதிதாளம்.

பல்லவி.

வேதமே என்ன சொல்லுவேன் — நின்மாட்சியை

அனுபல்லவி.

சேதமில்லாது நன் ஞதர் தம் அருள் திருப்
பாதமுறும் நெறி யோது மொரே சத்ய —வேத

சரணங்கள்.

1. கண்முன் நீ எழுத்தானுல் கரையிலா ஞானம்
காந்தி நற்பனி மழை கசிந்திடும் வானம்
புண்மன முடையோர்க்கு புகழருந்தானம்
புசித்திடப் புசித்திட ருசித்திடும் பானம் —வேத

2. சிறியவர் பெரியவர் செல்வர்கள் வறியார்
தீரர்கள் வீரர்கள் சீரியர் எளியார்
அறிஞர்கள் அல்லவர் ஆடவர் மெலியார்
அனைவரும் அருந்திட அருந்திடச் சலியார் —வேத

3. கனபலமருளுவாய் - தினம் தினம் காலை
களைப்பினைப் போக்குவாய் களைப்புறுமாலை
தினமெனதிதயமே திருத்தலுன் வேலை
செப்பருங் கனிதரும் கற்பகச் சோலை —வேத

4. அகமுறுமானைகள் விழுந்து தள்ளாடும்
அருள்நதி ஆடுகள் நடந்துனிலோடும்
தசஉனின் கரை களில் குருவிகள் கூடும்
தருக்கள் செழித்திருக்கும் - தாசர்கள் நாடும் —வேத

5. பொன் அபரஞ்சியிலும் - உன் விலை பெரிதே
பூவுலகினிலுனக் குவமைகளரிதே
நின்னையசட்டை செய்வோர் - நிலைமிகவரிதே
நின் படிப்பறியாதோர் - கல்வி மாசிறிதே —வேத

6. இருபுறம் கருக்குவாள் தனிலும் நீ கூரே
இகபரம் ரண்டிற்கும் உன்வழிநேரே
கிருபை யத்தனமுனக் கேற்றநற்பேரே
கிறிஸ்துவின் அருள்தனை எனக்கு நீ வாரே —வேத

சாமுவேல் ஐயர்.

இராகம்—கமாஸ். **83** ஆதிதாளம்.

கண்ணிகள்.

1. தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்ய மதுரமாமே;
அதை - தேடியே நாடி ஓடியே வருவாய் தினமும் நீ மனமே
—தேன்

2. காசினிதனிலே நேசமதாக கஷ்டத்தை உத்தரித்தே—பாவக்
கசடதை யறுத்துச் சாபத்தை தொலைத்தார் - கண்டுணர் நீ
மனமே—தேன்

3. பாவியை மீட்கத் தாவியே உயிரைத்தாமே ஈந்தவராம்—பின்னும்
நேமியாங் கருணை நிலைவரமுண்டு நிதம் துதி என் மனமே—தேன்

4. காலையில் பனிபோல் மாயமாய் உலகம் உபாயமாய் நீங்கிவிடும்
என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ மனமே —தேன்

5. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல துணைவராம் நேசரிடம்
நீயும்
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்துனைக் காப்பார் ஆசை கொள்
நீ மனமே—தேன்

6. பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்று நாமம்
அதை
பூண்டுகொண்டால் தான் பொன்னகர் வாழ்வில் புகுவாய்
நீ மனமே—தேன்

சவரிமுத்து ஐயர்.

84

பல்லவி.

வா வா நேசா; வளர்சுவிசேஷத்தின்
மதுதனையுண்டிடவே

அனுபல்லவி.

தேவாமிர்தமாம் ஜீவனைக்கண்டிட
சாவாமிர்தமாம் சாமியை அண்டிட —வாவா

சரணங்கள்.

1. ஜீவபோஜனம் ஜீவநீரதும் தினமும் சுரந்திடவே
தினமும் பார்த்திட தினமும் கேட்டிட சிந்தைவரும் திடமே
பாவமனைத்தையும் பாடுடனழித்திடும்
ஓவா மகிழ்ச்சியை உளமதிலளித்திடும் —வாவா

2. நானுலகினில் நன்மை அடைந்திட நல்லவழி தருமே
நன்மை எடுத்திட தின்மை விடுத்திட நல்ல மனம் வருமே
காணுக்கடவுளை கண்ணினில் காட்டிடும்
தோணுத்துணையதைச் சுபமுடனூட்டிடும் —வாவா

3. கோர பேய்களின் கொல்லும் தீவினை கொடுமை நீக்கியதே
கோடா கோடியாம் நரரைச்சேர்த்து துர்க்குணம் போக்கியதே
சோரர்கள் சூதினர் சுத்தராய் மாறினர்
பேரதும் மாறியே பொறுமையில் தேறினர் —வாவா

4. ஏசுநாமம் எங்கெங் குலவுமோ இன்பம் அளித்திடுமே
இனியமறையது தினமே தேடுகில் இதயம் விழித்திடுமே
பேசிடும் பேயெலாம் அகன்றிட ஓட்டிடும்
வீசிடும் ஒளியதை விரைவுடன் காட்டிடும் —வாவா

5. கரும்பைப் புசித்திடக் கையில் கூலியைக் கனிவாய்க்கொடுப்ப
ருண்டோ.
கண்டிலும் மேலதாய் இனிக்கும் பொருளிதைக்கடிந்து
[தடுப்பருண்டோ
விரும்பியே எடுத்திட வேதமே வேறில்லை
திரும்பியே அடுத்திட தேவரும் வேறில்லை —வாவா

இராகம்-மோகனம்] 85 [ஆதி-தாளம்.

பல்லவி.

ஜீவவசனங் கூறுவோம், – சகோதரரே;
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்.

அ. பல்லவி.

பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதி பதி ஏசு சிந்தை மகிழ்ந்திடவே. (ஜீவ)

சரணங்கள்.

1. பாதகப் பேயின் வலையில், – ஐயோ! திரள் பேர்
பட்டு மடியும் வேளையில்.
பேதமை யோடு பிடிவாத மருள் மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதிபெறவே. (ஜீவ)

2. காடுதனிலே அலைந்தோம்; – கிறிஸ்தேசு
கர்த்தன் சேவையில் அமர்ந்தோம்.
நாடு, நகர், கிராமந்தேடி நாம் பெற் றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லாருங் கண்டடைய, (ஜீவ)

3. பூலோகம் எங்கும் நம்மையே — கிறிஸ்து நாதர்
போகச்சொல்லி விதித்தாரே;
காலமெல்லாம் உம்மோடு கூட யிருப்பேன் என்று
கர்த்தன் வாக்கை நினைந்து எத்தேசமும் திரிந்து (ஜீவ)

4. விண்ணின் மகிமை துறந்தார்; — கிறிஸ்து நமை
மீட்கக் குருசில் இறந்தார்;
மண்ணின் புகழ், பெருமை எல்லாம் தூசு குப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியொடு. (ஜீவ)

வேதமாணிக்கம்.

தேவ ஆலயம்.

86

1. ஏசுதேவா இவ்வாலயம் வா
ஏசுதேவா இவ்வாலயம் வா.

2. ஜீவவிதை முளைக்க — பாதகன் வினை தீர்க்க
கோகிலனே இவ்வாலயம் வா.

3. ஆதியந்தமில்லானே அற்புதமானேகோனே
கோதில்லானே இவ்வாலயம் வா.

4. எங்கள் உண்மை உருக — எங்கும் பிரகாசிக்க
சுந்திரனே இவ்வாலயம் வா.

5. சபையை ஆசீர்வதிக்க — சத்ருதனை ஜெயிக்க
சம்பூரணனே இவ்வாலயம் வா.

கருணாகரபுரி.

இராகம்—கமாஸ். **87** ஆதிதாளம்.

பல்லவி.

தேவனே ஏசுநாதனே இத்
தேவ ஆலயம் வந்திடும்;
தேவ ஆலயம் வந்தவர்க்கருள்
திவ்விய ஆவியை ஈந்திடும்.

சரணங்கள்.

1. பாவிகள் உமக்காலயஞ் செய்ய
பாத்திரர்களோ அல்லவே
பாவநாசராம் ஏசுவே உம்மால்
பாத்திரராய் இதைச் செய்தனர். —தேவ

2. கூடிவந் துமையே பணிந்திடக்
குறித்த இத்திரு ஆலயம்
நாடி வந்தவர் யாவருக்குமுன்
நல்வசன மூணவாகவும். —தேவ

3. தேவனே உமக்கான ஆலயம்
பாவியின் சிறு நெஞ்சமே
பாவம் யாவையும் நீக்கியே ஒரு
தேவ ஆலயமாக்கிடும்.

தாவீது ஐயர்.

இராகம்—ஆனந்தபைரவி. 88 ஆதிதாளம்.

பல்லவி

திருமாமறையே—அருள்பதியே! நின்
திரு வவை வளர நின்தயை புரியே.

சரணங்கள்.

1. கருணை வாசகக் கதிர்பலத்தொளிர
கனகார் புவிநின்றே யகல
மருள்ஜன மொளியுற வலனருளுணர —திரு

2. யேசு நாமமெங் கணுமொளி வீச
இறையே நினை மெய் விசுவாச
நேச மொடேயுனின் தாசர்கள் பேச —திரு

3. ஞாலம் அந்தமட் டெம்முடனிருக்க
நயவாக் களித்தா யெமக்குருக்க
சீலமதாயுனின் வசனமதுரைக்க —திரு

4. ஆறிரண்டு பேரான வருடனே
அமலா விருந்தாய் வெகுதிடனே
போரற வருளிய நேயமே போலே —திரு

5. நின்னையன்றிக் கட்டிடவெமக்காகா
நேயா தூயா நினை வாகா
யுன்னி யுழைத்திட பலமளி யேகா —திரு

6. சத்ய போத மித்தரைதனில் செழிக்க
தமியோர் நின் புகழே யுரைக்க
நித்திய பாக்கியமே புவிக் களிக்க —திரு

ஞா. சா.

இராகம்—கமாஸ் **89** ஆதிதாளம்

1. வானமும் பூமியும் வகுத்திடுந்தேவே
வளம் நிறை ஆண்டவரே—தேவரீர்
ஈனராம் எம்மேல் இரங்கி இவ்வறுப்பை
ஈந்ததற்காய்த்தோத்ரம்.

2. பாவம் நிறைந்தோர் பாத்திரமற்றோர்
கோபத்துக்கேயுரியர்—வறியர்
ஆயினர் எமக்கிவ்வறுப்பை யளித்த
ஆண்டவரே தோத்ரம்.

3. வானமன்னாவை வருஷித்திஸ்ரேலை
வருடநாற்பது காத்தீர்—அந்த
வல்லமை எமக்கிவ் வருடமுங்காட்டிய
வல்லவரே தோத்ரம்.

4. ஐந்தப்பங்கொண்டையாயிரம்பேரை
பைந்திடல் போஷித்தீர்—பகவா
போத எம்பசியும் புறமுறச்செய்தீர்
புண்ணியரே தோத்திரம்.

5. பெரிய உம் நாமம் பேருலகோங்க
வறியவர் மிடியகல—இவ்வினை
அறிவுடன் காத்து அருமையாய் ஆளும்
நெறியெமக்கீந்தருள்வீர்.

6. திருச்சபைப்பண்ணை—திகழ்பயிர் நாங்கள்
தேவரீர் பயிர்க்காரர்—திருவே
ஆவியின் மழையால் ஆக்கிடும் எம்மை
அழகிய கதிர்மணியாய்.

7. இவ்வறுப் பெங்கட் கின்பமளிக்கும்போல்
எம்மறுப் புமக்குவப்ப—இறைவா
இரவது பகலாய் ஏத்தியே உமக்குச்
சாற்றுவோம் தோத்திரமே.

தேவசகாயம் ஐயர்.

செஞ்சுருட்டி **90** ஆதிதாளம்

பல்லவி.

திருப்பதம் சேராமலிருப்பேனோ—நான்
தெய்வத்தைத் தேடாமற் பிழைப்பேனோ?

சரணங்கள்.

1. அருட்கடலாமீசன் அடியவர் பாசன்!
உருக்கம் நிறைந்த விண்ணுயிரான நேசன்! —திரு

2. ஆவியு மாத்மமும் ஆண்டவர் பங்கே
பூவிலவரல்லாற் புகலிடமெங்கே? —திரு

3. சத்தியமார்க்கமும் சகலமுமான
நித்திய ஜீவனும் நிமலனுமான —திரு

4. கண்ணிற் காண் யாவுமே கலைந்திடுமாயம்
மண்ணிலென் ஜீவனை மாய்க்குமுமபாயம் —திரு

5. ஆறுதல் தேறுதலளித்திடுஞ் சேயன்
கூறு மகிமையிற் சேர்த்திடுந் தூயன் —திரு

6. உலையிற் மெழுகுபோலுருகுதென் நெஞ்சம்
மலையாதுன் திருவடி வணங்கினேன் தஞ்சம் —திரு

பரமானந்தம் ஐயர்.

ஜெபம்.

இராகம்—காப்பி **91** சாபுதாளம்.

இம்மனுவேலுக்குன்னருள் என்ற மெட்டு.

சரணங்கள்.

ஆயத்த ஜெபம் செய்ய பெலன் தாரும் சுவாமி
அடைக்கலமாயுந்தன் துணை வேணும் நேமி.

1. காயத்தால் குணக்கேடு தடைகள் வராமல்
காப்பாற்றக் கேட்கிறேன் கிறிஸ்துவே தேவா.

2. திருக்குள்ள இருதயம் மறைத்துப்போடாமல்
சிறுமையாய்ப் பாவத்தை உணர்ந்திடச்செய்யும்.

3. நரஜென்ம மனுஷரின் அமளி வராமல்
நாதா நீர் கிருபையாய்க் காத்திடவாரும்.

4. சாத்தானால் சோதனை மெத்த உண்டையா
சர்வாயுதம் தந்து காத்திடுமையா.

5. சுருக்க நாளானதால் கொதிக்கிறான் சீறி
சுடரொளிப் பட்டயத் தூதரால் காரும்.

6. எழுமுறை ஜெபத்துக்குத் தடைகள் வராமல்
இரக்கமாய் தயவுடன் நடத்துமேன் சுவாமி.

7. கேட்கிற வரமெல்லாம் கிருபையாய்த் தாரும்
கேடான மனமொன்றாய் பொருந்திடவாரும்.

8. கருத்தான மனதுடன் ஒருமித்துப்பாடி
களிப்புடன் மன்றாட அருள் செய்யும் சுவாமி.

9. வருகையின் நாள் மிக நெருங்குதே சுவாமி
மறுரூப ஆவிக்காய் தவிக்கிறேன் பாவி.

10. கிருபையின் கரத்தினால் தாங்குமேன் சுவாமி
கிறிஸ்துவின் மூலமாய் வருகிறேன் பாவி.

11. இம்மானுவேலுக்கு எதிர் கொண்டு போக
எண்ணெயும் தீபமும் தாருமேன் சுவாமி.

12. மறுபடி பிறந்து தற்பெருமையைக் களைந்து
மனத்தாழ்மை அணிந்திட படிப்பியும் சுவாமி.

13. இப்படியாகவே கேட்கும் மன்றாட்டை
ஏசுவின் மூலமாய் ஏற்றுக்கொள் ஐயா.

இராகம்—கல்யாணி **92** ரூபகதாளம்.

1. ஜெபம் செய்யப்போதித்த ஜெகநாதா—சதா
திருமுறை புகழ்கின்ற குருநாதா

2. தவம் செய்து காட்டின தனபாலா—எந்தன்
சஞ்சலம் நீக்குவாய் குணசீலா

3. பாத தரிசனம் கொடுப்பாயே—இந்தப்
பாவிக்கருள் தந்து விடுப்பாயே.

4. அன்னை பாசத்தோடு வருவாயே—தினம்
என்னை அணைத்தாவி தருவாயே.

5. பணிசெய்தே தொழுவதே என் பாகம்—எல்லாப்
பாவங்கள் போக்குதல் உன் பாரம்.

6. உடல் பொருள் ஆவிதான் உன் பாகம்—அன்று
உதிர்த்த திருரத்தம் என் பாகம்.

7. அடிமை நான் என்னைவிட்டகலாதே—உந்தன்
கடமைதான் காப்பது மறவாதே.

8. பரலோக ராஜனே வருவாயே—போற்றும்
பாவியைப்பார்த்தாசீர்புரிவாயே.

தேசிகதோடி. **93** சாபுதாளம்.

தேவாரம்

1. பத்தியாய்ச்செபம் பண்ணவே
சுத்தமாய்த் தெரியாதையா!
புத்தியோடும்மைப் போற்ற, நற்
சித்தமீந்திடும் ஏசுவே!

2. பாவ பாதையை விட்டு நான்
ஜீவபாதையிற் சேர, நல்
ஆவிதந்தெனை யாட்கொள்ளுந்,
தேவதேவ குமாரனே!

3. ஆசையோடுமெக் காட் செயும்
மாசிலாமனம் நல்கியே
நேசம் வைத்தெனை ரக்ஷியும்
யேசுநாதசுவாமியே

4. இரவில் மோசமொன் றின்றியே
உரிமையாயுறக் காட்டினை
பரமனேபதி னுயிரம்
சரணம் யேசு தயாபரா.

5. துட்டரோடுற வாடிநான்
மட்டிலாத துன் மார்க்கனுய்க்
கெட்டிடாவகை கிருபை செய்
தட்டிலாத தயாபரா.

6. இந்த நாளிலெப்பாவமும்
சிந்தையாலுஞ் செய்யாமலே
முந்தவுன் கிருபை தந்துகா
வந்தனமனு வேலனே.

கிருஷ்ண பிள்ளை.

இராகம்—கமாஸ் **94** ஆதிதாளம்

பல்லவி.

ஜெபமறவாதே நேசனே—எக்காலமும் நீ!

சரணங்கள்.

1. ஜெபம் பரமனுடன் பேச்சு
தேவையெல்லாமத் தாலாச்சு;
தப விசு வாசி மூச்சு;
தகாதெலாமத்தாற் போச்சு.

73

2. அம்பரன் கற்பனை நோக்கு
அவரதருமை வாக்கு
நம்பிச்சந்தேகத்தைப் போக்கு
நலம் வரத் தீமை நீக்கு

3. பேயை ஜெபத்தோடு வென்ற
பிரிய நாம முங்கொண்ட
நேய சுதன் தனைத் தந்த
நின்மலனுக்கே உகந்த

4. பகலுட னிரவிலும்
பணிவுடன் குறை விலும்
திகிலிலும் மகிழ் விலும்
செல்வம் வறுமை யிலும்

5. விசுவாச நேசத்தோடு
மிகும் பக்தி யோடு நாடு
நிசமாய் பரனைத் தேடு
நேர்மை யுடனே நீ ஓடு

6. தேவ அரசாட்சிக் காக
ஜெபி உந்தன் குறை போக
ஆவலுடன் பிறர்க் காக
அன்புடன் ஜெபிப் பாயாக

7. மறந் திடாதே ஜெபமே
மறக்கில் நீ ஓர் சவமே
சிறந்த உன் வீடவமே
செய்ய லாமோ பவமே.

சாமுவேல் ஐயர்.

95

இராகம்-பியாகடை] [ஏகதாளம்.

பல்லவி.

அருமைநாதயம் ஜெபிக்கிறேன்
அருள்பரனே கேளுமேன்
ஆவி வரந்தாருமேன்—என் யேசுவே.

சரணங்கள்.

1. கருணையுடன் கடந்த இராவில் காப்பாற்றினீர் தெய்வமே
கரங்குவித்து தோத்தரிக்கிறேன்—என் யேசுவே
சிரங்குனிந்து தோத்தரிக்கிறேன் (அரு)

2. இந்த நாளைக் காணச்செய்தீர் இரக்கமுள்ள தெய்வமே
இதற்காயும்மைத் தோத்தரிக்கிறேன்—என் யேசுவே
இதயத்தாலும் தோத்தரிக்கிறேன். (அரு)

3. கதிரவன் எழும்பி வரும் முறையின்படியே என்மேல்
கர்த்தரே நீர் பிரகாசித்திடும்—என் யேசுவே
நித்தம் நித்தம் பிரகாசித்திடும். (அரு)

4. லோகமதில் நான்புகுந்து வேலைசெய்யப் போகிறேன்
தூதனாலே காவல் செய்யுமே—என் ஏசுவே [உன்
உம் சமுகம் என்னைச்சூழச் செய்யுமே. (அரு)

5. பகலில் வரும் மோசம் ஒன்றும் தமியன்மேல் விழாமலே
பாதுகாக்க வேணும் தெய்வமே—என் யேசுவே
சூது வாது போக்கும் அண்ணலே. (அரு)

6. மாமிசமும் கண்ணும் இந்தமாய்கையில் விழாமலே
ஆவிக்குள் அடங்கச் செய்யுமே—என் யேசுவே.
பாவிக்கருள் பெய்யச் செய்யுமே (அரு)

ஆனந்தம்.

இராகம்-நவரோஜ்] 96 [ஏகதாளம்.

1. என்ன என் ஆனந்தம், என்ன என் ஆனந்தம்
சொல்லக் கூடாதே.
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே.

2. கூடுவோம் யாவரும் பாடுவோம் நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்.
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனை தோத்தரிப்போம்.

3. பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம்
பரிகரித் தாரே.
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே.

4. அட்சயன் பட்சமாய் ரட்சிப்பை எங்களுக்
கருளின தாலே
நிச்சய ஏசுவைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே.

5. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல் வீட்டில்
ஜெயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனை தோத்தரிப்போம்.

சட்டாம்பிள்ளை, பிரகாசபுரம்.

இராகம்-இந்துஸ்தானி] 97

பல்லவி.

ஆனந்தமே ஜெயா ஜெயா
அகமகிழ்ந் தனைவரும் பாடிடுவோம்.

அனுபல்லவி.

ஞானரட்சகர், நாதர் நமை—இந்த
நாள்வரை ஞால மதினில் காத்தார் புகழ்! (ஆன)

சரணங்கள்.

1. சங்கு கனம், வளர் செங்கோல் அரசிவை
தளராதுள கிறிஸ்தானவராம்
எங்கள் ரட்சகர் ஏசுநமை—வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால் புகழ்! (ஆன)

2. முந்து வருட மதினில் மனுடரில்—வெகு
மோசக் கஸ்திகள் தனிலே யுழல
தந்து நமக்குயிர் உடை உணவும்—வெகு
தயவுடன் ஏசு தற்காத்ததினால் புகழ்! (ஆன)

3. பஞ்சம் பசிக்கும் பட்டயத்திற்கும்—லெகு கொடும்
பாழ் கொள்ளை நோய் விஷ தோஷத்திற்கும்
தஞ்ச ரட்சகர் தவீது நமை—இத்
தரை தனில் குறைதனைத் தாற்றியதால் புகழ்! (ஆன)

மாசிலாமணி ஐயர்.

98

பல்லவி.

அதே ஆனந்தம் பக்தி அதே ஆனந்தம் முக்தி
அதே ஆனந்தம்.

1. ஆனேன் மனுப்பிறவி ஆனேனே யாயினும்—நல்ல
ஆத்மாவின் லாபத்தைக் கண்டேன் என்றால் (அதே)

2. உலகமெல்லாம் ஒரு குடைக்குள்
அரசு புரிந்தாலென்ன—அந்த
மேலான மானுட்டைக் கண்டேனென்றால் (அதே)

4. தான தர்மம் செய்கிலும் தற்பெருமையா லென்ன—இங்கு
நானேது மில்லையென உள்ளங்கண்டால் (அதே)

5. பரதேசி ரத்தினம் கவிபாடும் வண்ணமாக நான்—நிதம்
பாடிப்பரம சுகமடைந்தால் (அதே)

99

(சுந்தராமேசையா.)

பல்லவி.

ஆனந்தமே பரமானந்தமே—இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

சரணங்கள்.

1. இந்தப்புவி ஒரு சொந்தமல்ல வென்று,
இயேசு என் நேசர் மொழிந் தனரே;
இக்கட்டு துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும் (ஆன)

2. கர்த்தாவே! நீர் எந்தன் காருண்யக் கோட்டையே
காரண மின்றிக் கலங்கேனே யான்;
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட,
மேவியே சுக்கான் பிடித்திடுமே. (ஆன)

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணுய்,
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது;
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெயகீதம் பாடி மகிழ்ந்திடலாம். (ஆன)

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு,
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ;
கைவேலை யல்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச்சொல்லிப் போகலையோ. (ஆன)

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்,
சொல்லி முடியாத ஆறுதல் கிருபை யை
துன்பத்தினூடே அனுப்பிடுவார். (ஆன)

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குறேனே.
என்நேசர் தம்முக ஜோதி யதேயல்லால்
இன்பந்தரும் பொருள் ஏதுமில்லை. (ஆன)

சகாயம் பிரசங்கியார்.

தேசிக காப்பி] **100** [ஆதி தாளம்.

பல்லவி.

நித்யானந்தத்தை நாடு—பரன்
நின்மலர் சுகந்தேடு—ஓமனமே

அனுபல்லவி.

சத்திய மார்க்கம் தன்னிலே கூடு
சற்சன சங்கத்தி னேடுறவாடு.

சரணங்கள்.

1. இந்திர ஜாலம் உலக வைபோகம்
இன்றைக் கிருப்பதுவோ சந்தேகம்,

அந்தர மின்னல் போல் அழியும் இத்தேகம்
ஐயோ அதனுடன் உனக்கென்ன ஸ்நேகம். (நி)

2. தனதானிய முதலான சம்பத்து
சாஸ்வதமோ அதற் காயிரம் தத்து
தினமும் கவலையை விளைத்திடும் வித்து
சீ! சீ! அதனை விரும்பல் விபத்து (நித்)

3. மெய்யே ஒன்றுக்கும் உதவாப் பண்டம்
மிருகாதிகள் சூழ் மாமிசக் கண்டம்
பொய்யோ இதற்கிங்கு நித்திய கண்டம்
புண்ணியம் செய்யுனக் காயிரந் தண்டம் (நித்)

4. காண்ப தெல்லாம் நிலையாது அநித்தியம்
காயம் இறந்திட வேண்டு மகத்தியம்
வீண்பொருள் மீதுனக் கென்ன பைத்தியம்
வேதாகமமே சொல்வது சத்தியம். (நித்)

வேத நாயகம் பிள்ளை.

கிறிஸ்துவின் வருகை.

இராகம்-செஞ்சுருட்டி] **101** [ஆதி-தாளம்.

சரணங்கள்.

1. மன்னுயிர்க் காகத் தன்னுயிர் விடுக்க
வல்ல பராபரன் வந்தார் வந்தார்—பாவி

2. இந்நிலம் புரக்க உன்னதத் திருந்தே
ஏக பராபரன் வந்தார் வந்தார்—பாவி

3. வானவர் பணியும் சேனையின் கருத்தர்
மகிமைப் பராபரன் வந்தார் வந்தார்—பாவி

4. நித்ய பிதாவின் நேயகுமாரன்
நேமியனைத்தும் வாழ வந்தார் வந்தார்—பாவி

5. தந்தைப் பிரானார் விந்தைக்குமாரன்
சச்சிதானந்த குரு வந்தார் வந்தார்—பாவி

6. மெய்யான தேவன் மெய்யான மனுடன்
மேசியா ஏசையா வந்தார் வந்தார்—பாவி

7. தீவினை நாசர் பாவிகள் நேசர்
தேவ கிறிஸ்தையா வந்தார் வந்தார்—பாவி

8. ஜெய அனுகூலர் திவ்விய பாலர்
திருமனுவேலனே வந்தார் வந்தார்—பாவி

9. ஆசைக் கண்ணாளர் ஆத்தும நேசர்
அருமைமணாளரே வந்தார் வந்தார்—பாவி.

வேதநாயகம் சாஸ்திரியார்

இராகம்-இரமாமனோகரி] **102** [ஆதி-தாளம்.

பல்லவி.

வரவேணும் எனதரசே
மனுவேல் இஸரவேல் சிரசே.

அனுபல்லவி.

அருணோதய ஒளிர் பிரகாசா
அசரீரி ஒரே சருவேசா.

சரணங்கள்.

1. வேதா கருணாகரா மெய்யான பராபரா
ஆதார நிராதரா அன்பான சகோதரா
தாதாவுந்தாய் சகலமும் நீயே
நாதா உந்தாபரம் நல்குவாயே (வரவே)

2. படியோர் பவமோசனா பரலோக சிம்மாசனா
முடியாதருள் போசனா முதன்மாமறை வாசனா
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவரடிதொழு மேன்மையின் எந்தாய் (வரவே

3. வானோர் தொழும் நாதனே மறையாகமபோதனே
கானாவின் அதிதனே கலிலேய வினோதனே
ஞானாகரனே நடுநிலையோவா
நண்பா உன்னதனன்மையின் மகாதேவா. (வரவே)

வேதநாயகம் சாஸ்திரியார்.

மோகனம்] **103** [ஆதி-தாளம்.

1. சாலேமின் ராஜா, சங்கையின் ராஜா, ஸ்வாமி வாருமேன்.
ஸ்வாமி, வாருமேன்;—இந்தத்
தாரணிமீதினில் ஆளுகை செய்திட—சடுதிவாருமேன் (சாலே)

2. சீக்கிரம் வருவோமென் றுரைத்துப்போன செல்வக்குமாரனே;—இந்தச்
சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற செய்திகேளீரோ (சாலே)

3. எட்டி எட்டி உம்மை அண்ணார்ந்து பார்த்துக்கண் பூத்துப்போகுதே-நீர்
சுட்டிக் காட்டிப்போன வாக்குத்தத்தம் நிறைவேறலாகுதே (சாலே)

4. நங்கை எருசலேம் பட்டினம் உம்மை நாடித்தேடுதே;—இந்த
நானிலத்திலுள்ள ஜீவப்பிராணிகள் தேடிவாடுதே. (சாலே)

5. சாட்சியாகச் சுபவிசேஷம் தாரணிமேவுதே;—உந்தஞ்
சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம் தாவிக்கூவுதே. (சாலே)

அருளானந்தம் பிரசங்கியார்.

---

104 சாபுதாளம்.

பல்லவி.

உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?

சரணங்கள்.

1. பூவிலேசு வரும்போது பொல்லாரோடிடுவார்
அவ்விதம் நீயிருந்தால் என்ன செய்திடுவாய்.

2. மேகங்களுடன் வருவேன் என்று சொன்னவர்
மேகந்தனில் வரும்நேரம் கிட்டிச்சேருதே.

3. தூதரோடும் பெரும் எக்காளத்தோடும்
பக்தரை சந்திக்கும் நேரம் ஆச்சுதே.

4. பாவங்களில் ஜீவிப்பவர் கீழே பதுங்கிடுவார்
பரிசுத்தம் பெற்றோரே மேலே பறந்திடுவார்

5. கிருபையின் காலத்தில் நீ மனந்திரும்பு
உனக்காய் மரித்த ஏசு காத்து நிற்கிறார்.

எதுகுலகாம்போதி **105** ரூபகதாளம்.

பல்லவி.

நீர்தானே வருபவர் நீர்தானே வருபவர் நீர்தானே
சுவாமியே என் இறையே பணிந்தேன்.

அனுபல்லவி.

பாழுலக ஆசைமனம் பற்றித் தயங்கி நிற்க
பார்க்குதே புவிதொல்லையாக்குதே — பார்த்திபா
அந்நேரம் காக்கவா.

சரணங்கள்.

1. பாதரட்சை வார் அவிழ்க்க பாத்திரவானல்லவே
பகர்ந்து யோவான் மனம் சுகந்த—பரமனே பாவ
மறிந்திடவா — நீர்

2. எட்டுத்திக்கோர்க்குச் சுகம்—இயன்றபரிகாரியோ
எலியாவோ வனதவ முனியாரோ - ஈசனே என் இடறை
நீக்கவா—நீர்

3. சத்திய விஷேடமறை சாற்றும் சற்பாத்திரரோ
சாதாமோ ஸ்திரிவித்தாதாமோ - ஆதரைக்கருள்
புரியவா—நீர்

4. முற்பிதாக்களுரைத்த முன்னவ மன்னவனே
நித்யனே மூவுலகசத்யனே - நின்மலா இவ்வேழைக்
கருளவா — நீர்

5. கூன் குருடூமையர்க்குக் குற்றம் பொறுத்தவரோ
வான்வீடோ வல்லவர்க்குயானீடோ - வல்லவா வரமரு
ளவா—நீர்.

சாமுவேல் உபா.

கிறிஸ்துவின் பிறப்பு.

இராகம் - சரசாங்கி **106** திஸ்ர ஏகதாளம்.

பல்லவி.

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித் துதி மனமே, இன்னும்

சரணங்கள்.

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர் - இங்கு
தாழ்மையுள்ள தாய்வயிற்றில் தலைசாய்க்கலானார் - பெத்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் - இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் - பெத்

3. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே - பெத்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் - இங்கு
ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார் - பெத்

5. இந்தடவாய் அன்புவைத்த எம்பெருமானை - நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே - பெத்

ஜான் பால்மர்.

இராகம் - சங்கராபரணம் **107** ஏகதாளம்.

1. பெத்தலேகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி —
கர்த்தன் ஏசுபாலனுக்குத் துத்தியங்கள் பாடி
பத்தியுடன் உத்தமியே வாடி —பெத்த

2. காலம் நிறைவேறின போதிஸ்திரியின் வித்து
சீலகன்னி கர்ப்பத்தாவியாலே உற்பவித்து
பாலனான ஏசு மேசையாவே —பெத்த

3. எல்லையில்லா ஞானபரன் வெல்லமலையோரம்
புல்லணையிலே பிறந்தார் இல்லம் எங்கும் ஈரம்
தொல்லை மிகும் அல்லிருட்டு நேரம் —பெத்த

4. வான்புவியாம் ராஜனுக்கு மாட்டகந்தான் வீடோ
வானவர்க்கு வாய்த்த மெத்தை வாடின புல் பூண்டோ
ஆன பழங்கந்தை யல்லோ மானே —பெத்த

5. அந்தரத்தில் பாடுகிறார் தூதர்சேனை கூடி
மந்தையாயர் ஓடுகிறார் பாடல் கேட்க தேடி
இன்றிரவில் என்ன இந்த மோடி —பெத்த

6. ஆட்டிடையர் அஞ்சுகிறார் அவர் மகிமை காண
அட்டியின்றி காபிரியேல் சொன்ன செய்தி கேட்டு
நாட்டமுடன் ரக்ஷகரைக் காண —பெத்த

7. இன்றிரவு கண்டரசர் மூவர் நடந்தாரே
சந்திர தூபம் போளம் வைத்து நாதனைப் பணிந்தாரே
விந்தையது பார்க்கலாம் வா நேரே —பெத்த

இராகம் - பைரவி **108** ஆதிதாளம்.

பல்லவி.

தோத்திரம் செய்வேனே - ரட்சகனைத்
தோத்திரம் செய்வேனே

அனுபல்லவி.

பாத்திரமாக்க இம்மாத்திரம் கருணை வைத்த
பார்த்திபனை யூதக் கோத்திரனை என்றும்,—தோத்

சரணங்கள்.

1. அன்னை மரி சுதனை — புல்மீது
அமிழ்துக் கழுதவனை
முன்னணை மீதுற்ற சின்னக்குமாரனை
முன்னுரை நூற்படி இங்கிலத்துற்றோனைத் — தோத்

2. செம்பொன்னுருவானை - தேசிகர்கள்
தேடும் குருவானை
அம்பரம் மேவிய உம்பர் குழாங்களோ
டன்புபெற நின்று பைம்பொன் மலர் தூவித் - தோத்

3. கந்தை பொதிந்தவனை வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க்கானந்த மாட்சிமை யளித்தோனை
வானபரன் என்னும் ஞான குணவானைத் — தோத்

சத்தியநாதன் உபதேசியார்.

இராகம் - சூரியகாந்தம் **109** ரூபகதாளம்.

பல்லவி.

துதிதங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்
சுபமங்கள மிகு சம்பிரம சுபசோபன க்ஷேமம்.

சரணங்கள்.

1. அதி சுந்தர நிறைகொண்டுயர் அருள்மோக்ஷ தீபன்
கதி உம்பர்கள் தொழும் இங்கித கருணைப்பிரதாபன் —துதி

2. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய
அத்தனார்
நிந்தையாய் ஒரு கந்தைமூடவும் வந்தமா பரிசுத்தனார்-துதி

3. திருவான் உலகரசாய் வளர் தேவசொருபானார்
ஒரு மாதுட வினைமாறிட நரரூபம தானார் —துதி

4. அபிராமுனி யிடமேவிய பதிலாள் உபகாரன்
எபிரேயர்கள் குலம் தாவீதென் அரசற்கோர் குமாரன்
—துதி

6. விண்ணுடரும் மண்ணுடரும் மேவுந்திருப்பாதன்
பண்ணேதுவர் கண்ணுட்வளர் பரமண்டல நாதன் —துதி

வேதநாயக சாஸ்திரியார்.

ஹரிகாம்போதி **110** ஆதிதாளம்.

பல்லவி

ராஜ ராஜ பிதா மைந்த தேசு லாவுசதா நந்த
யேசுநாயகனார் சொந்த மேசியாநந்தனே!

அனுபல்லவி

ஜெகதீசு ரேசுரன் சுக நேச மீசுரன், மக —

சரணங்கள்

1. மாசிலா மணியே! மந்த்ர ஆசிலா அணியே! சந்த்ர
நேசமே பணியே, தந்த்ர மோசமே தணியே;
நிறை வான காந்தனே! இறையான சாந்தனே! மறை,—

2. ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே முந்த
வேதபந்தனமாய் வந்த பாதம் வந்தனமே;
பத ஆமனுமனு! சுதனுமனுமனு! சித—

3. ஆதிகாரணனே! சத்ய வேதபூரணனே! நித்ய
போத தாரணனே! துத்ய கீத ஆரணனே!
மரியாளின் தோத்ரனே! ஸ்திரீ ஏவை கோத்ரனே! துரை

4. மேன்மை யாசனனே! நன்மை மேவு போசனனே!
தொன்மை
பான்மை வாசனனே! புன்மை பாவ மோசனனே!
கிருபா கராகரா! சருவேசுரா! பரா! ஸ்ரீ—

5. வீடு தேடவுமே, தந்தை நாடு கூடவுமே, மைந்தர்
கேடு மூடவுமே, விந்தையோடு பாடவுமே,
நரவேடமேவினன்; சுராதி கோவினன், பர—

வேதநாயக சாஸ்திரியார்.

தபசு காலம்.

இராகம் - சஹானா. **111** ஆதி-தாளம்.

கண்ணிகள்.

1. ஆதம் புரிந்த பாவத்தாலே மனுடனாகி
வேதம் புரிந்த சிறை விடுத்தீரோ பரனே.

2. ஏவை பறித்த கனியாலே விளைந்த எல்லாப்
பாவத்துக்காகப் பழியானீரோ பரனே.

3. வேதகற்பனையனைத்தும் மீறி நரர் புரிந்த
பாதகந்தீரப் பாடு பட்டீரோ பரனே.

4. தந்தைப் பிதாவுக்கும்மைத் தகன பலியளித்து
மைந்தரை மீட்க மனம் வைத்தீரோ பரனே.

5. சிலுவைச் சுமை பொறுமல் தியங்கித் தரையில் விழக்
கொலைஞர் அடர்ந்து கோட்டி கொண்டாரோ பரனே

6. வலிய பவத்தை நீக்கி மனுடரை ஈடேற்றிச்
சிலுவை சுமந்திறங்கித் திகைத்தீரோ பரனே.

7. சென்னியில் தைத்த முடி சிலுவையின் பாரத்தினால்
உன்னியமுந்தத் துயர் உற்றீரோ பரனே.

8. வடியும் உதிரம் ஓட மறுகித் தவித்து வாடிக்
கொடிய குருசில் கொலையுண்டீரோ பரனே.

9. வானம் புவி படைத்த வலமைப் பிதாவின் மைந்தா
ஈனக்கொலைஞர் கையா லிறந்தீரோ பரனே.

10. சங்கையின் ராஜாவே சத்ய அனாதி தேவே
பங்கப்பட்டு மடியப் பட்டீரோ பரனே.

வேதநாயக சாஸ்திரியார்.

இராகம்-முகாரி] **112** [ஆதி-தாளம்.

பல்லவி.

திருதேவனின் மகனே—தே
சிகனே ஏசு பரனே.

அனுபல்லவி.

ஏவைதின்ன விலக்கும் கனியின்
தீவினையால் மனுவான (திரு)

சரணங்கள்.

1. கனமே மிகுனதமே—வானகமேவிட முனமே—இந்தக்
கானகந்தனை விரும்பி—மானிடர்க்குப் பிணையான (திரு)

2. படுபாதகராலே—கடுமுடி சூடியமாலே-லோக
பாவத்தின் பாரம்சுமந்த-மீதவ ஆட்டுக்குட்டியான (திரு)

3. ஆறாக்கொடுந்துயரா-ழியில் ஆழ்ந்தே மிகத்தாழ்ந்தே—உன
தங்கமுழுதும் குருதி—பொங்க முகம் மங்கி நின்ற (திரு)

4. வதையால் திருமயமே—நீயும் சிதையமனமுடைய-கெட்ட
வம்பு நிறை யூதர்புரி—துன்பமும் பொறுத்திருந்த (திரு)

5. கட்டியடித்தாரே—திருக்கண்ணை மறைத்துன்னை—மயிர்
கத்தரிக்கும் ஆடதுபோல்—சத்தமிடாதேயிருந்த (திரு)

6. ஏகபலியானீர் எமக்—காக உயிர்போக—குரு
சேறி கபாலமலை—மேடுவந்து பாடுபட்ட (திரு)

7. கள்ளர் நடுவாக—கால் கரங்கண் மிக நோக—அன்று
சொல்லரும் வேதனையுடன்-தொங்கிடமூவாணி
கொண்ட (திரு)

8. வானம் இருளாக—மாமகிமை பலவாக—அன்று
மண்டலம் பிழைக்கஅன்பு-கொண்டதிருவுயிர்தந்த (திரு)

முத்துசாமி உபாத்தியாயர்.

உசேனி **113** சாபுதாளம்.

கண்ணிகள்.

1. பரனே, பரப்பொருளே — நித்ய
பாக்கியனே சத்ய வாக்கியனே
நரரான பாவிகட்காய் — இந்த
நானிலத்தில் வந்த வானவனே.

2. காவில் அதம் ஏவை — தேவ
கற்பனை மீறினதாலுலகில்
மேவிய பாவம் அறப் — பொல்லா
வெஞ்சினக் கூழியின் வஞ்சம் அற.

3. கூடி அனுதியினில் - செய்த
கோப்பின்படி அந்த தீர்ப்பின்படி
நீடுங்கருணை கொண்ட - எங்கள்
நேயகனே! ஏசுநாயகனே.

4. வேரூர் மலர்க்காவில் - சென்று
வேதனை போற்றி மனம் நொறுங்கி
ஆருக்கொடுந்துயரம் - உந்தன்
ஆத்துமத்தில் வரலானதுவோ.

5. ஈராறு சீடர்களில் - பண
இச்சை மிகுந்த ஒரு சீடன்
பேர் யூதாஸ்காரியோத்தாம் - அவன்
பேசினதின்படி காசு பெற்று.

6. ஒன்னாரின் கும்புகளை அழைத்
தோடிவந்தே உம்மை நாடிவந்தே

கன்னத்தில், முத்தமிட்டே — உமைக்
காட்டிக் கொடுக்கத் துணிந்தானே.

7. காட்டிக் கொடுத்திடவும் - அந்தக்
காதகராகிய பாதகர் கை
போட்டே பிடித்திடவும் - பின்னும்
பொற்கரங் கட்டி இழுத்திடவும்.

8. செம்புருவைப் போல - கூடச்
சென்றிடக் காய்பா முன் நின்றிடவும்
அம்பரனே உமக்கு - இந்த
ஆபத்து வந்ததென் பாவம் அல்லோ.

வேதநாயக சாஸ்திரியார்.

இராகம் : சுருட்டி] **114** [திரிபுடை-தாளம்.

பல்லவி.

பாருங்கள் தொடர்ந்து வாருங்கள் கொல்கதா
பாதையிற் கோதையரே.

அனுபல்லவி.

ஆருங்காணவே ஆட்டுவாசல் கடந்துமலை
மேட்டில் நடந்தனந்தங் கோட்டிகள் படுகின்றார் (பாரு)

சரணங்கள்.

1. பொன்னு யொளிரு மேனிமண்ணாய் மடியுதே
புங்க உடம்பெல்லாம் புழுதிகள் படியுதே
நன்னய மலர்க்கண்கள் கண்ணீர்கள் வடிக்குதே
நாவும் அஸ்தியும் காய்ந்து சாவுமே பிடிக்குதே (பாரு)

2. பாவியைத் தேடிவந்த பாதங்கள் பொறியுதே
பட்சத்தினால் விரித்த கைகளும் நெறியுதே
நாபிக்கமலம் வற்றி சோபித்துக் கரியுதே
நடையுமுடையுந் தொய்ந்து சதைகளும் சரியுதே (பாரு)

3. திருமுக அருள் ஒன்றும் தெரியா தடையுதே
செங்குருதிகளெல்லாம் பொங்கி வடியுதே
சருவமேனியும் நைந்து திரையும் நிறையுதே
ஜகமும் பாமுந்துக்க சாகரத் தழுந்துதே. (பாரு)

4. துன்ப துரிதத்திலும் அன்பையே பொழிகின்றார்
துட்டர்கள் அதற்காக திட்டுகள் மொழிகின்றார்
அன்பர் பிழைக்கத் தம தாவியைக் கொடுக்கின்றார்
அந்தோ நாசரேத்தையர் நொந்தடி எடுக்கின்றார். (பாரு)

சத்தியநாதன் உபதேசியார்.

ஆனந்த பைரவி] **115** [சதுரச்ர ரூபக-தாளம்.

பல்லவி.

கல்வாரி மலையோரம் வாரும் பாவம் தீரும்

அனுபல்லவி.

செல்வராயன் கிறிஸ்து தியாகேசன் தொங்குறாரே.

சரணங்கள்.

1. லோகத்தின் பாவமெல்லாம் ஏகமாய்த் திரண்டு
நொம்பலப் படவைக்க ஐயன்மே லுருண்டு
தாகத்தால் உடல்வாடி கருகியே சுருண்டு
சடலமெல்லாம் உதிரப்பிரளயம் புரண்டு
சாகின்றாரே நமது தாதா ஜீவதாதா—ஜோகி (கல்)

2. பொன் முடி மன்னனுக்கு முண்முடியாச்சோ
உபகாரம் புரிகரம் சிதையவு மாச்சோ
விண்ணிலுலாவும் பாதம் புண்ணாக லாச்சோ
மேனி யெல்லாம் வீங்கி விதனிக்கலாச்சோ
மேசையனப்பன் கோபம் மேலே இதற்குமேலே—
ஜோகி (கல்)

3. மலர்ந்த சுந்தரக் கண்கள் மயங்கலுமேனோ
மதுரிக்கும் திரு நாவு வரண்டதுமேனோ
தளர்ந்திடாத்திருக் கைகள் துவண்டதுமேனோ
ஜலத்தில் நடந்த பாதம் ஜவண்டதுமேனோ
சண்டாளர் நம்மால்தானே தானே நம்மால்தானே
ஜோகி—கல்

4. ரட்சகனை மறந்தால் ரட்சண்யமில்லை
நாமக்கிறிஸ்தவர்க்கு இரு பங்கு தொல்லை

பட்ச பாதகம் ஒன்றும் பரதீசில் இல்லை
பரதீசில் பங்கில்லோர்க்குப் பாடென்றும் தொல்லை
பந்தயத்திலே முந்தப் பாரும் முந்தப் பாரும்

ரத்னப் பரதேசியார்.

பரிசுத்த வாரம்.

116

"கருவினுருவாகிவந்து" என்ற மெட்டு.

அருமை ஏசு தாயை விட்டு அகன்றவுடன் துவங்கினது
சிறுமை மிகு பரிசுத்த வாரம்
மரியம்மை மிகத்துக்கித்து—உரிமையுடன் தம்மகனை
பிரியமாகக் கேள்வி பல — கேட்டார்.

1. ஞாயிற்றுக்கிழமைதனில் என்னருமை என் மகனே,
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
பரியின்மீது-ராஜனைப்போல்-பவனி செல்லும் வழிதனிலே
உரிய ஜனம்-மாத்து தழை விரிப்பார்.

2. திங்கட்கிழமை தனிலே என்னருமை என் மகனே
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
பெத்தனியை விட்டு எரு சாலேம் நகரம்புகுந்து
கர்த்தராலயத்தை சுத்தி செய்வேன்.

3. செவ்வாய்கிழமை தனிலே என்னருமை என் மகனே
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
உலகத் தீர்க்கதரிசியாக வானம் பூமி அழியுமென்று
சகல மனிதருக்கும் உரைப்பேன்.

4. புதன்கிழமை தனிலே என்னருமை என்மகனே
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்படும் ஆட்டைப்போல
தப்பாது தாழ்மைக் கோலமெடுப்பேன்.

5. வியாழக்கிழமை தனிலே என்னருமை என்மகனே
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
ஆயத்தம் செய்தமேல் வீட்டில் ஆனபலி ஆடுபோல
தாவியே திருப்பந்தியில் இருப்பேன்.

6. வெள்ளிக்கிழமை தனிலே என்னருமை என்மகனே
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
முள்ளாணி மூன்றுகளால் கள்வரைப்போல், கால் கைகளில்
சுள்ளெனவே அறைந்து கொல்வார் பாரீர்.

7. சனிக்கிழமை தனிலே என்னருமை என்மகனே
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
கோதுமையழிந்து துளிர் கொண்டு வளரும் போல
புத்துயிரடைய எதிர் பார்ப்பேன்.

8. ஞாயிற்றுக்கிழமை தனில் என்னருமை என்மகனே
எங்கிருப்பாய் என்ன செய்வாய்? மகனே
சாவின் கூரை யொடித்து ஜெயத்துட னெழுந்திருப்பேன்
தாயே நீயும் என்னைக்கண்டு மகிழ்வாய்.

கருணாபுரி.

இராகம்-யமுனா கல்யாணி] **117** [ரூபக-தாளம்.

பல்லவி

பவனி செல்கின்றார் ராஜா—நாம்
பாடிப்புகழ்வோம் நேசா

அனுபல்லவி

அவனிதனிலே மறிமீதேறினார் ஆனந்தம் பரமானந்தம்

சரணங்கள்.

1. எருசலேமின் நிதியே—சுரர்
என்றுந் தொழுஞ் சீயோன் பதியே
அருகில் நின்று அனைவர் போற்றும்
அரசே எங்கள் சிரசே.

2. பன்னிருவர் ஆடைதரித்து—நின்று
பாங்காய் வஸ்திரம் விரித்து
நன்னயம் சேர் மனுவின் சேனை
நாத கீதம் ஓத.

3. குருத் தோலைகள் பிடிக்க—பாலர்
கும்பல் கும்பலாக நடிக்க

பெறுத்த தொனியாய் ஓசன்னு வென்று
போற்ற கீத மேற்ற.

4. பெரியோர்கள் பலர் தடுக்க—நல்ல
வறியோர்கள் பலர் அடுக்க
தெரியாதோரும் பரிசுத்தாவியால்
தேட அருள் கூட.

5. வேத பாதகர் மயங்க—அருள்
வேத சாஸ்திரம் இலங்க
பாதக மதைத் தவிர்த்து ஜெயித்த
பாலா தேவ சீலா.

இராகம்-இங்கிலீஷ்] **118** [ஆதி-தாளம்.

பல்லவி.

ஓசன்னு பாடுவோம் ஏசுவின் தாசரே
தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்னு.

சரணங்கள்.

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னப்பாலர் பாடினர்
அன்றுபோல இன்றும் நாமும் அன்பாய் துதி பாடுவோம்.

2. சின்னமறி மீதிலேறி அன்பர் பவனி போனர்
இன்னும் என் அகத்திலவர் வந்து அரசாளுவார்.

3. பாவமதைப் போக்கவும் இப் பாவியைக் கை தூக்கவும்
பாசமுள்ள ஏசையா பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் வீணை யோடுபாடி பாதமுத்தி செய்குவோம்.

5. குருத்தோலை ஞாயிறில் நம்குரு பாதம் பணிவோம்.
திரு அருள் பெற்று நாமும் திரியேகரைப் போற்றுவோம்.

இராகம் - கியால். **119** ஆதி தாளம்.

பல்லவி.

ஏன் இந்தப் பாடையா — நான்
என்ன தருவேன் இதற்கிடையா

அனுபல்லவி.

ஆனந்த நேமியே எனை ஆளவந்த குரு சுவாமியே —என்

சரணங்கள்.

1. கெத்சேமனேயிடம் ஏகவும் — அதின்
கெழுமலர்க்காவிடை போகவும்
அச்சயனே மனம் நோகவும் - சொல்
அளவில்லாத் துயரமாகவும் —என்

2. முழந்தாள் படியிட்டுத் தாழவும் - மும்
முறைமுகம் தரை பட வீழவும்
மழுங்கச் சினம் உமைச் சூழவும் - கொடு
மரண வாதையினில் மூழ்கவும் —என்

3. அப்பா பிதாவே என்றேத்தவும் - துயர்
அகலச் செய்யும் எனச்சாற்றவும்
செப்பரும் சித்தமாகப் போற்றவும் - ஒரு
தேவதூதன் வந்து தேற்றவும் —என்

4. ஆத்துமத் துயர் மிக நீடவும் - குழம்
பாக உதிர வேர்வை ஓடவும்
சாத்திர மொழிகள் ஒத்தாடவும் - உந்தன்
தாசரும் பதந்தனை நாடவும் —என

ஏசுதாசன் அண்ணாவியார்.

இராகம் செஞ்சுருட்டி. **120** பிலந்தி தாளம்.

பல்லவி.

பாவம் போக்கும் ஜீவநதியைப்
பாராய் வந்துபாராய் - பாவி

அனுபல்லவி.

தீவினை தீர்க்கும் தேவ மரியின்
திரு ரத்தமிந்த ஆறும் - பாவி! —பாவம்

சரணங்கள்.

1. கல்வாரி மலைச்சிகரமீதூற்றுக்
கண்கள் ஐந்து திறந்து, - அதோ

மல்கிச் சிறுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாராய் — பாவி —பாவம்

2. பாவச் சுமையால் நொந்து சோர்ந்து
பதறி விழுந்தலறி – நிதம்
கூவியழுத அநந்தம் பேரிதில்
குளித்தே யுளங்களித்தார் — பாவி —பாவம்

3. ஒருதரமிந்த நதியின் தீர்த்தம்
உண்டோர் ஜீவன் கண்டோர் - தாகம்
அறுதியடைவர்; வேறொரு நதிக்
கலையார் தேடியலையார், - பாவி —பாவம்

4. முன் பின் ஒன்றையும் யோசியாமல்
முழுகாயோ நீ, பாவி? - இந்த
அன்பின் நதியில் விசுவாசம் வைத்தால்
அதுவே போதும், பாவி, ஆ, ஆ, —பாவம்

சந்தியாகு ஐயர்.

மாணம் - அடக்கம்.

இராகம் - லாவணி.] **121** [ரூபக-தாளம்.

அந்தாதி.

1. தேவசுதன் பூவுலகோர் பாவம் எல்லாம் தீர
திருமரணமான செய்கை சிந்தைசெய் என்னுள்ளமே.
2. எருசலேயில் ஈராரு சீஷருடன் பஸ்கா
திருவிருந்தை ஆசரித்து சேர்ந்தே நற் கெத்சேமனே.
3. கெத்சேமனே சீஷர் பதினொருவருடன் சென்று
கெஞ்சி ஒரு ஜெபமுறையை மிஞ்சி அவர் செய்ய.
4. செய்த நமதாண்டவரின் திருமேனி யெல்லாம்
செந்நிறமாய் சிவந்துடலில் சேர்ந்த ரத்தமெல்லாம்.
5. ரத்த மெல்லாம் வேர்வையதாய் புற்றரையி லோட
ரக்ஷகனார் அயர்ந்துடனே குப்புற விழுந்தார்.
6. தாரணியோர் பவம் யாவும், தற்பரனார் கண்முன்
திரண்டு ஒரு பாத்திரத்தில் புரண்டுவரக் கண்டார்.

7. கண்டசுதன் மெய் சோர்ந்து கர்த்தனது சித்தம்
மண்டபத்தில் ஆகவென்று மறுபடி மன்றுடி.

8. மன்றுடி மிகவாடி நிற்குமந்த வேளை
சென்று னங்கொரு தூதன் செம்மரியைத் தேற்ற.

9. தேறுதலடைந்த குரு சீஷரிடம் போக
ஆறுதலாய்த் தூங்கின அம்மூவரைக் கண்ணுற்றுர்.

10. கண்ணுற்றுப் பார்த்தவரை கை தட்டி எழுப்பி
என்ன இது நித்திரை எழுந்திருங்கள் போவோம்.

11. போவோம் அதோ பெரிய ஒரு கும்பலேயே பார்க்க
சேர்வோம் எதிர்கொண்டு மனப்பூர்வமாய் ஒப்பிக்க.

12. ஒப்பிக்கவென்று சொல்லி தற்பரனுர் போக
குப்புற விழுந்தாரந்தக் கூட்டமெல்லாம் தாழ.

13. தாழவீழ்ந்த கூட்டமதைத் தற்பரனுர் கிட்டி
மீளவும் எழுப்பிய பின் வீரமுள்ள சீஷன்.

14. சீஷனும் பேதுருமிக மூர்க்கவெறி கொண்டு
வீசினுனோர் பட்டயத்தால் மல்கூசின் காதை.

15. காதை யொட்டிப் பேதுருவைக் கண்டனம் செய்வித்து
வாதையாவும் பட்டிறக்க வந்தவரை கண்டான்.

16. கண்டவுடன் சண்டாளப் பாதகன் துரோகி
கன்னமதில் முத்தமிட்டுக் காட்டினுன் யூதாசே.

17. யூதாசு காட்ட அந்த யூதர் பிடித்துடனே
யுகம் வணேந்த கரமதையே மிக நெருங்கக்கட்டி.

18. கட்டிவரும் வழியில் செய்த நிஷ்டூர மெல்லாம்
கண்டு கல்லு முருகுமதைச் சொல்லவும் நாவில்லை.

19. நாவினுல் சொலற்கரிய நடபடிக்கை யெல்லாம்
நடத்தியே காய்பாமனையில் நாதனைச் சேர்த்தார்கள்;

20. சேர்த்த பின்பு அந்தக்காய்பா தேவசுதன் தன்னை
செய்த நிந்தை மிகுதியல்லோ எருசலேமையோர் காண.

இராகம் கமாஸ்] **122.** [அடதாளம்.

பல்லவி.

கொல்கதா போகிருரே - குருசெடுத்து
கொல்கதா போகிருரே - நம் நேச மீட்பர்

அனுபல்லவி.

பொல்லார் சொல்லும் அவதூறெல்லாம் சகித்தவராய்—கொல்

சரணங்கள்.

1. அங்கமெல்லாம் புண்ணுக - அடிகள் பட்டாரே நோக
பங்கமில்லாத சீலன் - பாவிகள் அனுகூலன் —கொல்

2. ரத்தம் தேகத்தில் ஓட - மெத்தவும் முகம் வாட
பித்த யூதர்கள் சேர்ந்து-கத்தித்துரத்தச் சோர்ந்து-கொல்

3. வள்ளலை மெய்வருத்தக் - கள்ளனைப் போல் நடத்த
எள்ளளவும் பேசாமல் - மெள்ள மெள்ள நடந்து —கொல்

4. பெற்ற மனங் கலங்க - உற்ருருள்ளம் குலுங்க -
மற்ற மாதருமேங்கி - மார்படித்துப் புலம்ப —கொல்

5. பாவ வினையைப் போக்க - சாபம் அனைத்தும் நீக்க
தேவகோபத்தை முற்றும் - தாமே சுமந்து தீர்க்க —கொல்

பரமானந்தம் ஐயர்.

இராகம் - நீலாம்புரி **123** ஆதி தாளம்.

பல்லவி.

எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

சரணங்கள்.

1. எங்கே சுமந்து போறீர்! இந்தக் கானலில் உம
தங்கம் முழுதும் நோக, ஐயா! என் ஏசு நாதா! (எங்)

2. பாவியினுலே வந்த பாரச்சுமையோ? இதை
ஆவலுடன் எடுத்து ஆவிதுடிக்கவும் நீர் (எங்)

3. தோழில் பாரம் அழுந்தத் தூக்கப்பெலன் இல்லாமல்
தாளுந் தத்தளிக்கவே, தாப, சோபம் உறநீர் (எங்)

4. கைகள் அயர இரு கண்கள் இருளத்திரு
மெய்யுங் கருக நாவும் மெத்த வறண்டுபோக (எங்)

5. வஞ்சத் துரோகிகளால் வாதைப்பட்டது மகா
கொஞ்சம் என்றோ? இதையுங்கூட எடுத்துக்கொண்டு (எ)

6. வாதையினுல் உடலும் வாடித் தவிப்புண்டாகப்
பேதமில்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர (எங்)

7. தாயார் அழுதுவரச் சார்ந்தவர் பின்தொடர
மாயமில்லாத ஞான மாதர் புலம்பிவர (எங்)

8. வல்லபேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்
எல்லையில்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் (எங்)

9. வண்டக் கள்ளர் நடுவில் மரத்தில் தொங்குவதற்கோ
சண்டாளர்களைத் தூக்கும் தலையோட்டுமேட்டுக்கோ (எ)

10. மாசணுகாத சத்திய வாசகனே! உமது
தாசரைக் காக்கவும் தாங்காச் சுமை எடுத்து (எங்)

ஏசுதாசன் அண்ணாவியார்.

இராம் பைரவி] **124** [சாப்புத் தாளம்.

கண்ணிகள்.

1. தலையே சாய்ந்தனையோ விழு
தலையே போக்குதற்காய் விடு
தலையே பெற்றெனின் தலையே நிற்கநற்
றலையே சாய்ந்தனையோ.

2. கண்காள் பஞ்சடைந்தீர் துஞ்சா
கண்காள் துஞ்சுகின்றீர் என்தன்
கண்காண் பாவங்கள் கண் காணப்படி
கண்காள் பஞ்சடைந்தீர்.

3. நாவே சோர்ந்தனையோ திரு
நாவே வான்புவி செய் வனு

நாவே பாவியின் நாவே காத்திட
நாவே சோர்ந்தனையோ.

4. முகமே வாடினையோ கதிர்
முகமே தூதர் தொழுங்-தூய
முகமே தீய வென் முகமே வாழ்ந்திட
முகமே வாடினையோ.

5. கைகளே நீர் தளர்ந்தீர் தயைக்
கைகளே நோய்தீர்க்கும் நல்ல
கைகளே சோரும் என் கைகளைத் தாங்கிடக்
கைகளே நீர் தளர்ந்தீர்.

6. பக்கந் திறந்ததுவோ ஏவை
பக்கத் தினின்று வர எந்தப்
பக்கமு மற்றவன் பக்கம் புகந்திடப்
பக்கந் திறந்ததுவோ.

7. பாதங்களே அயர்ந்தீர் திருப்
பாதங்களே ஆட்டைத் தேடும்
பாதங்களே என்தன் பாதங்கள் நின்றிடப்
பாதங்களே அயர்ந்தீர்.

சாமுவேல் ஐயர்.

125

1. கர்த்தரின் திருவுடல் கல்லறைக்குப் போகுது
கனிந்துருகி என்மனம் கலங்கிமிகப் பதைக்குது.

2. தாசர் யோசேப் நீக்கோதேம் பாசமுள்ள பக்தர்கள்
தூய காங்கு கொண்டுமே துய்யர் காயமிறக்கினர்.

3. ஐயோ எந்தனாண்டவர் அகிலம் புரிந்த ரக்ஷகர்
ஜீவனின்றி பிரேதமாய்ச் சுமந்து போகப்படுகிறார்.

4. நன்மை எங்கும் புரியவே நாடிச் சென்ற கால்களும்
அற்புதம் செய் கைகளும் அசைவில்லாமல் கிடக்குதே.

5. தூக்கியவர் சவத்தையே-தொடர்ந்து செல்வோர் கொஞ்சமே
அருமை மீட்பர் சாவுக்காய்-அழுது நிற்போர் சொற்பமே.

6. சீயோனின் குமாரிகள் சிலுவையண்டை நின்றவர்
நேயரினடக்கத்திற கேகியேகிப்போகிறார்.

7. ஆயுளுள்ள நாளெல்லாம் ஆண்டவரினன்பை நான்
அகத்தில் வைத்து அவரிலே அமைதலாய் மரிப்பேனே.

சாமுவேல் புதுச்சேரி.

இராகம்-இங்கிலீஷ்] 126 [ஆதி-தாளம்.

பல்லவி.

அல்லேலூ அல்லேலூயா, மகத்துவத் தம்பரா பரா
அல்லேலூ அல்லேலூயா ஜெயஞ் ஜெயம் ஆனந்த ஸ்தோத்திரம்.

அனுபல்லவி.

ஓம் ஆனுதிதந்தார் வந்தார் இறந்
துயிர்த் தெழுந்தாரே உன்னதமே. (அல்)

சரணங்கள்.

1. வெற்றி கொண்டார்ப்ப ரித்துக்-கொடும்வே
தாளத் தைச்சங் கரித்து முறித்து
பத்ராசனக் கிறிஸ்து-மரித்து
பாடுபட்டுத் தரித்து முடித்தார், (அல்)

2. வேதம் நிறைவேற்றி-மெய்தோற்றி
மீட்டுக் கரையேற்றிப்-பொய்மாற்றி
பாவிகளைத் தேற்றிக்-கொண்டாற்றி
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார். (அல்)

3. சாவின் கூர் ஒடிந்து-மடிந்து
தடுப்புச் சுவர் இடிந்து-விழுந்து
சீவனே விடிந்து-தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து-ஒழிந்தது (அல்)

4. தேவ கோபந் தீர்ந்து-அலகையின்
தீமையெலாஞ் சோர்ந்து-முடிந்தது
ஆவலுடன் சேர்ந்து-பணிந்து கொண்
டாடும் களி கூர்ந்து-மகிழ்ந்து (அல்)

வேதநாயக சாஸ்திரியார்.

இராகம்-சங்கராபரணம்] **127** [திஸ்ர-ஏகதாளம்.

1. இந்நாளில் ஏசு நாதர் உயிர்த்தார், கெம்பீரமாய்
இகல் அல்கை யாவும் வென்றதிக வீரமாய்
மகிழ் கொண்டாடுவோம்-மகிழ் கொண்டாடுவோம்.

2. போர்ச் சேவகர் சமாதி சூழ்ந்து காவலிருக்க
புகழார்க் தெழுந்தனர், தூதன் வந்து கல்முடி பிரிக்க (மகி)

3. அதிகாலையில் சீமோனொடு யோவானும் ஓடிட,
அக்கல்லறையினின் றேகினர் இவர் ஆய்ந்து தேடிட (மகி)

4. பரிசுத்தனை அழிவு காண வொட்டீர் என்றுமுன்
பகர்வேதசொற்படி பேதமற்றெழுந்தார் திருச்சுதன் (ம)

5. இவ்வண்ணமாய்ப் பரன் செயலை எண்ணி நாடுவோம்;
எல்லாருமே களிகூர்ந் தினிதுடன் சேர்ந்து பாடுவோம்.
(மகிழ்)

ஜான் பால்மர்.

இராகம் - பியாகு. **128** ஆதி தாளம்.

பல்லவி.

எழுந்தார் இறைவன் - ஜெயமே ஜெயமெனவே
எழுந்தார் இறைவன்.

சரணங்கள்.

1. விழுந்தவரைக்கரை யேற்ற - பாவத்
தழுந்துமனக்குலத்தை மாற்ற - விண்ணுக்
கெழுந்து நாமவரையே போற்ற.

2. செத்தவர் மீண்டுமே பிழைக்க - உயர்
நித்திய ஜீவனை அளிக்க — தேவ
பக்தர் யாவரும் களிக்க. எழு.

3. கருதிய காரியம் வாய்க்க - தேவ
சுருதி மொழிகளெல்லாம் காக்க - நம்
இருதிறத்தாரையும் சேர்க்க. எழு.

4. சாவின் பயங்கரத்தை ஒழிக்க - கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க - இப்
பூவின் மீது சபை செழிக்க. எழு.

5. ஏதுந்தீவினை செய்யாத்தூயன் - எப்
போதுமே நன்மைபுரிநேயன் - தப்
பாது காத்திடும் நல்லாயன். எழு.

பரமானந்தம் ஐயர்.

பூரிகல்யாணி. 129 ஆதிதாளம்.

பரமேறுதல்.

பல்லவி.

மகிழ் மகிழ் மங்கையே நீ அல்லேலூயாபரன்
மைந்தன்பர மேறினார் அல்லேலூயா.

அனுபல்லவி.

மகிழ் மகிழ்; பரன்மைந்தன் மகத்வ பரமேறினார்
திகழ் திருச்சேனைபாடும் அல்லேலூயா இன்று மகிழ்.

சரணங்கள்.

1. வானமெல்லாம் நிரப்ப மனுஷமைந்தன் எல்லா
வானங்கள் மேலேறினார் அல்லேலூயா
தீனதயாளு நம்மைச் சேர்ந்த தலைவரானார்
ஞானமுடன் பாடுங்கள் அல்லேலூயா - இன்று மகிழ்.

2. ஏசுபரன் நமக்கு இறையானார்; இது
எல்லவர்க்கும் சந்தோஷம் அல்லேலூயா
வாசம் நாம் செய்யத்தந்தை வளவில் இடம் பிடித்த
நேசமுன்னத நேசம் அல்லேலூயா - இன்று மகிழ்.

3. தந்தை வலபாகத்தில் சத்யகிறிஸ்து எங்கள்
சத்துருக்கள் மேற்சிறந்தார் அல்லேலூயா
சொந்தக்காயங்கள் காட்டி சுகிர்தமுடன் ஜெபிப்பார்
மங்கையே உந்தனுக்காய் அல்லேலூயா - இன்று மகிழ்.

4. மோட்சசுதந்தரர் நாம் வானோருக்கும் ஒப்பர்
முகிவில்லாப் பாக்கியர் நாம் அல்லேலூயா
பாழ் ஜெகம் நிலையல்ல பரம சஞ்சாரிகள் நாம்
சூட்சுமக்கர்த்தனுக்கே அல்லேலூயா - இன்று மகிழ்.

5. பூதல மந்த மட்டும் உங்களுடனே நித்தம்
புனிதன் இருப்பேனென்றூர் அல்லேலூயா
ஏதெமக்குக் குறைச்சல் இயேசெங்களோ டிருந்தால்
யாது மோசங்தொடரும் அல்லேலூயா! இன்று மகிழ்.

சாமுவேல் ஐயர்.

பரிசுத்தாவியின் பண்டிகை.

இரகம்-ஆனந்தபைரவி] 130 [ஏக தாளம்.

பல்லவி.

சுத்தபரன் சுத்த ஆவியே நின் மா மகிமை
சொல்ல வரம் எனக் கீவையே.

அநுபல்லவி.

மெத்தவும் அசுத்தன் நானே
மேவினேன் நின் பாதந்தானே
உத்த மனம் கெஞ்சு வேனே
உன்னையல்லால் அழிவேனே. (சுத்த)

சரணங்கள்.

1. அடியேன் புத்தி பலத்தினுல் என் ஆத்ம மீட்பர்
அருளைப் பெறவும் போகுமோ
மிடியுறும் ஏழைச் சிஷ்டி தான் மனந்திருப்பி
விசுவாசங் கொள்ள லாகுமோ
கடினம் என் மனங் கல்லு
கர்த்தா ஓர் வார்த்தை சொல்லு
திட சீவன் வரக் கொல்லு
சேவடி நீ சேர்த்துக்கொள்ளு. (சுத்த)

2. சுவிசேடத்தின் தொனியினுல் எனையழைக்கும்
சுகிர்தந்தனையானறிந்தேன்
உவந்தளிக்கும் வரங்களால் என் இதயத்துக்
கொளிதருவதையுணர்ந்தேன்.
அவமாகா மெய் விஸ்வாசம்
அதனுல் தூய்மை நன்னேசம்
கவர்ந்துனைத் தொழும்பாசம்
கனிந்தளித்தாய் நல்வாசம் (சுத்த)

3. பேயுடல் உலகின் தீ விஷம் தொடாப்படிக்குப்
பேணுவதும் நின் கிருபையே
காயம் விழுந்துயிர் போகையில் பலங்கொடுத்தைங்
காயனே நீ காட்டிடுவையே
நேயனே பரிசுத்தாவி
நீ வாராயோ ஏழை கூவி
பாய்கிறேன் மான் போலே தாவி
பரிவு செய்நான் ஏழைப்பாவி. (சுத்த)

4. பூமியெங்கும் உள்ள சபையை வர வழைத்துப்
பொற்புறவிணைத்துச் சேர்த்து
சாமியொளிதந்து தூய்மை அளித்து யேசு
தற்பரனில் நித்தங்காத்து
க்ஷேமகரஞ்செய்யும் நேயா
தின்மையைப் பகைக்குங் நேயா
பாமரர்க்கு நற்சகாயா
பார்த்திபா என் றென்றும் மாயா. (சுத்த)

5. நித்தமும் பவம் பொறுக்கிறுய் திருச் சபையில்
நீதி தீர்வை நாளிலே யன்பாய்
செத்த விசுவாசிகளையும் என்னையும் உடல்
ஜீவனோ டெழுப்புவா யின்பமாய்
நித்திய ஜீவன் தருவாய்
நின்மலன் யேசுவை மெய்யாய்
பத்தியாகவே மனம் வாய்
பற்றினோர்க்குமா தயவாய். (சுத்த)

சாமுவேல் ஐயர்.

பண்டிகை நாட்கள்.

131. மிசியோன் தோத்திரப் பண்டிகை.

இங்கிலீஷ். [ஆதிதாளம்

பல்லவி.

கெம்பீரமாகவே சங்கீதம் பாடுவோம்.

அனுபல்லவி.

நம்பாரமே எங்காளும் நீக்குவோனை நாடுவோம்,

சரணங்கள்.

1. மங்காத தீபமாய் விளங்கும் மாவசனமே
சிங்காரமாயித்வீபம் நாடிச்சேர்ந்ததினமே. கெம்

2. படாமுடிக் கொடூரனைப் பதைக்கவே கொல
குடாரமாக வெய்ததேவ வேதமே வெல. கெம்

3. எக்காளமே தொனித்திடப் பொல்லாப்புரிவிழ
முக்காலமும் திரியேகரை முதன்மையாய்த் தொழ. கெம்

4. ஜீவாதிபற் கெலாமத்வமே சிறந்திட
தேவாதி தேவன் ஏசுவென்றெலா மறிந்திட. கெம்

5. அகோரப்பேய் நடுங்கிகியோட யாமகிழ்ந்திட
மகாமகத்வன் ஏசுவென்றெலாம் புகழ்ந்திட. கெம்

சாமுவேல் ஐயர்

சங்கராபரணம்] **132** [திஸ்ர-ஏகதாளம்.

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றுகக் கூடுங்கள்,
மன்னன் ஏசுநாதருக்கே வான்முடி சூட்டுங்கள்.

பல்லவி.

ராஜாதி ராஜன் யேசு, யேசு மகா ராஜன்!—அவர்
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க,
அவர் திரு நாமமே விளங்க, — அவர் திருநாமமே விளங்க,
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயாவே!
அல்பா, ஓ மேகா, அவர்க்கே அல்லேலூயாவே!

2. நாலாதேசத் திலுள்ளோரே நடந்து வாருங்கள்,
மேலோனேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்!

3. நல்மனதோடு சொல்லுகிறேன், நாட்டார்களே, நீங்கள்
புன்னகையொடு நிற்பானேன்? பூ முடி சூட்டுங்கள்!

4. இந்தியா தேசத்தார்களே, ஏகமாய்க்கூடுங்கள்,
சிந்தனையை வைத்துக் கொண்டு செம்முடி சூட்டுங்கள்!

5. சின்ன நாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்,
பொன்னகராம் சாலேமுக்குப்போய் முடி சூட்டுங்கள்!

6. குற்றமில்லாப் பாலகரே, கூடிக் குலாவுங்கள்,
வெற்றி வேந்த ரேசுவுக்கே வெண்முடி சூட்டுங்கள்!

7. யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாருங்கள்,
ராசாதி ராசன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்!

8. சகல கூட்டத்தாரே, சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகத்வ ராசரிவரே; மாமுடி சூட்டுங்கள்!

பிச்சைமுத்து, தஞ்சாவூர்.

கேதார கௌளம்] **133** [ஆதி தாளம்.

சிந்தை செய்யும் என்னில் ரம்புவீர்-என்ற மெட்டு.

பல்லவி.

இதோ! அடியேனிருக்கிறேன், —என்னை அனுப்பும்,
ஏசுவே, இப்போதே போகிறேன்.

அனுபல்லவி.

இதோ! போகிறேன் நாதனே, இப்புவியில் நீர் எனக்கு
எந்த இடம் காண்பித்தாலும் உந்தன் சித்தம் செய்திடுவேன்;-

சரணங்கள்.

1. மலைகள், பள்ளங்கள் தாண்டியோ, —மாகஷ்டமான
வனங்கள், கடல்கள் கடந்தோ,
தொலைதூரமாகச் சென்றோ, சுவிசேஷம் கூறும்படி
செல்லும்போது நீர் ஏசுவே, துரிதமாய்ச் சென்றிடுவேன்;
(இதோ)

2. வறியர் அறிவீனருக்கும், — மா துஷ்டருக்கும்,
வணங்காக் கழுத்துள்ளோருக்கும்,
அறிவி என் நாமம் என்று அடியேனை ஏவும்போது
சரியென்றிணங்கி எல்லா சனத்தையும் தேடிப்போவேன்;
(இதோ)

3. வயல் நிலங்கள் இப்பொழுதே—அறுப்புக்கேற்க
வளமாய் விளைந்திருக்குதே;
நயமான வேலையாட்கள் ஞாலமதில் தேடுகின்றீர்;
பயமின்றி என்னையுந்தன் பாதமதில் ஒப்புவித்தேன்;
(இதோ)

4. உலக முடிவுமட்டுமே—சகல நாளும்
உங்களோடிருப்பேன் என்றீரே;
மலை மேலே நீர் கொடுத்த மாபெரிய கட்டளையைத்
தலைமேலே கொண்டிப்போது தரணியில் ஏகிடுவேன்;
(இதோ)

சந்தியாகு ஐயர்.

சீர் திருத்தலின் பண்டிகை.

ஹரி காம்போதி] **134** [ஆதி தாளம்.

பல்லவி.

பஜித்திடும் சுவிசேட திருச்சபையோரே
பரனை ஸ்மரித்துத் தினம் மகிழ்வீரே.

சரணங்கள்.

1 பஜித்திடும் சுவிசேஷ சபைக்குள் வந்தோரே
பரனருளால் ஜெயமடைந்தீரே
துஜம் பிடித்தே ஜெயமெனப் புகல்வீரே
தோத்ர சங்கீர்த்தனம் துத்யம் செய்வீரே. (பஜி)

2 நித்ய சுவிசேடமே நேர்வழியாமே
நிமலனருள் வழிபோவோமே
சத்ய மறைபிடிக்கில் வழிதவறோமே
தத்வ குஞ்சரன் தனைத் துதிப்போமே. (பஜி)

3 திருக்குருசில் மரித்தோனது நேசம்
தினம் மறவாதே, வை விசுவாசம்
இரக்க புண்ணியங்களால் எழில் நகர் வாசம்
இனி பெறலாமென வெண்ணுதல் மோசம். (பஜி)

சாமுவேல் ஐயர்.

135

பல்லவி.

வாழ்த்திப் பாடுவோம் நாம் வாழ்த்திப் பாடுவோம்,
வல்லவர் கிறிஸ்து வேந்தை வாழ்த்திப் பாடுவோம்.

அனுபல்லவி.

பாப்புவின் சிறை விடுத்த பரமவேந்தை நாம்
பாடி, ஆடி; நாடி, கூடி வாழ்த்திப் பாடுவோம்.

சரணங்கள்.

1 ஆயிரத் தைநூற்றுப் பதினேழாம் ஆண்டினில்
அக்டோபர் மாதம் முப்பத்து ஒராம் தேதியில்
புகழ் பெருகும் தொண்ணூற்றைந்து ஞாயம் நேரினில்,
பிரசுரம் செய்தனரின்று வித்தன்பர்க்கூரில். —(வாழ்த்தி)

2 பாவ மன்னிப்பின் பாக்கியம் பணத்தினால் அல்ல
பாவ நாசர் இயேசுவின் ரத்தத்தாலல்லோ
பாவி கரையேறும் வழி பாழும் சீட்டல்ல
பகரும் சத்ய வேத வசனத்தினாலல்லோ —(வாழ்த்தி)

3 விசுவாசத்தால் நீதிமான் உய்வானென்பது
மெய்யான சுவிசேஷத்தின் போதகமிது
புண்ணியங்களால் ஒருவன் மோட்சம் சேர்வது
பொய்யே அதை ஒருவனும் நம்பலாகாது. —(வாழ்த்தி)

4 சுத்த சுவிசேடமிது பாரில் வாழ்கவே
நித்தம் அதை வாசிப்போர் கேட்போர் வாழ்கவே
மேன்மை தங்கும் அத்தியக்ஷர் குருமார் வாழ்கவே
சத்தியனுத்தரன் திருச்சபை வாழ்கவே. —(வாழ்த்தி)

கருணாகரபுரி.

கனடா.] **136** [ஆதி தாளம்.

பல்லவி.

வெள்ளை அங்கிகள் தரித்த
விமல முத்தர் இவர்யார்?

அனுபல்லவி.

கள்ள மில்லா ஆட்டுக்குட்டிக்
கருணைவள்ளல் முன் நிற்கும்.

சரணங்கள்.

1. நாலுதிக்கிலு மிருந்து
நயந்து வந்தவர் இவர் ;
கோரைத் துன்பக் கடலில்
குளித்துவந்தவர் இவர். (வெள்ளை)

2. குருத்தோலைகள் பிடித்துக்
கொற்றவனைச் சூழ நிற்கும்
பெருத்த கூட்டத்தார் இவர் ;
பேரன்பின் அடியார்களாம். (வெள்ளை)

3. ஆட்டுக்குட்டியாலே மீட்பை
அடைந்த உத்தமர் இவர் ;
தேட்டமுடனே நாயனை
சேவித்து நிற்கின்றார் நித்தம். (வெள்ளை)

4. பசிதாகம் யாவுமற்ருர்;
பாக்கிய நிலைமை பெற்ருர்;
உசித மோட்சத்தில் கண்ணீர்
உகுக்கா வாழ்வினை யுற்ருர். (வெள்ளை)

சி. ஜி. ஞானமணி.

மோகனம்,] 137 [ரூபகம்.

"வாவீணுமிருது பாணி" என்ற மெட்டு.

பல்லவி.

சிறந்த சிலுவை வீரர் திருக்கூட்டம், திரளானோர்,
சிங்காசனம் சூழ்ந்தோர் திருக்கீதம் பாடுகின்ருர்.

அனுபல்லவி.

அல்லேலூயா—அல்லேலூயா,
அல்லேலூயா—அல்லேலூயா,
அல்லேலூயா—அல்லேலூயா,
அல்லேலூயா—அல்லேலூயா,
அல்லேலூயா—அல்லேலூயா,
அல்லேலூயா—அல்லேலூயா, ஜய, ஜய, ஜய.

சரணங்கள்.

1 முன்னோர்கள் தீர்க்கரானோர்,
முற்பிதாக்கள் திரளானோர்,
தெய்வ சித்தம் நடப்பித்தோர்
தேவனோடு சஞ்சரித்தோர்.

2 பன்னிருவர் அப்போஸ்தலர்,
பட்டயம் தீக் கிரையானோர்,
துட்ட மிருகம் பீறுண்டோர்,
தூயரத்தம் சிந்தலானர்.

3 பரிசுத்த ஆவி பெற்ருேர்,
பகிரங்க சாக்ஷியிட்டோர்,
பகைவர்க்காய் வேண்டினோர்,
பரதீசில் பாடுகின்ருர்.

4 துக்க பாத்ரம் குடித்தோர்கள்
துன்பச்சிலுவை சுமந்தோர்கள்
தீங்கு துயர் சகித்தோர்கள்
திரியேகனைத் துதிக்கின்றார்.

5 பக்தர் சாட்சி பெறச்செய்யும்,
பாவிருளில் ஜோதி வீசும்,
போரில் வெற்றி தந்து காரும்,
பொற்கிரீடம் பரிசளியும்.

6 பக்தர் கூட்டம் சேருவோமே,
பரிசுத்தம் பெறுவோமே,
பாருலகை ஜெயிப்போமே,
பாசமாய்ப் பின் செல்வோமே.

கருணாகரபுரி.

வருஷோற்சவம்.

ஆனந்த பைரவி. **138** ஆதி தாளம்.

பல்லவி.

ஆத்துமமே, என் முழு உள்ளமே, — உன்
ஆண்டவரைத் தொழுதேத்து; — இந்நாள் வரை
அன்பு வைத்தாதரித்த
ஆண்டவரைத் தொழுதேத்து.

சரணங்கள்.

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற்கரிய தன்மையுள்ள —ஆண்

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன்தோன்றி ஒழியாத —ஆண்

3. தினம் தினம் உலகில் நீ செய்பலவான
வினைபொறுத்தருளும் மேலான —ஆண்

4. வாதை, நோய் துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த —ஆண்

5. உற்றுனக்கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் —ஆண்

6. துதி மிகுந்தேற ஸ்தோத்திரி தினமே,
இதயமே, உள்ளமே, என் மனமே —ஆண்

தைரியம் ரைட்டர்.

தசாவந்தி. **139** ஆதி தாளம்.

பல்லவி.

இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்திரிப்போமாக.

அனுபல்லவி.

நம்மை ரக்ஷிக்க வந்து, தம்மைப் பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும், அற்புதமாகவும். (இம்)

சரணங்கள்.

1. காலம் சொல்போல் கழியும், தண்ணீரைப்போல் வடியும்
கனவைப் போலேயும் ஒழியும்
வாலிபமும் மறையும், சீலம் எலலாம் குறையும்
மண்ணின் வாழ்வொன்றும் நிற்கமாட்டாது
கோலப்பதுமைக்கும் நீர்க்குமிழிக்கும், புகைக்குமே
கொண்ட உலகதில் அண்ட பரன் எமைக்
கண்டுகருணைகள் விண்டு தயவுடன். (இம்)

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்
பரம பாதையைத் தொடர்ந்தோம்
வலிய தீமையை வென்றோம் நலியும் ஆசையைக் கொன்றோம்.
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்
கலி என்றதெல்லாம் விண்டோம் கர்த்தாவின் மீட்பைக்கண்டோம்
காய்ந்த மனதொடு பாய்ந்து விழுகணம்
சாய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன்

3. புசலை வரக்கண்ட தாய் பெற்ற குழந்தைதனை
பேணித் தற்காக்கும் நேர்மையே
விசுவாசமாய் ரட்சகர் காலில் விழுந்தவரை
மேவிச் சரண்புகுந் தோரையே
நிஜமாய்க் கர்த்தாவின் கையே துன்னாளில் காக்கும் மெய்யே
நேயத்தினால் ஐந்து காயத்தினால் வெகு
பாயத்தினால் மிகு ஞாயத்தினாலுமே.

4. எச்சரிப்பும் விழிப்பும் விசாரிப்பும் அவர்தாமே
இல்லாவிட்டால் வீணுமே
உச்சிதமாய்த் தினமும் அன்பாய் நவமாய்ச் செய்த
உயர் அனுக்ரகம் எல்லாம் மேன்மை
நிச்சயமாய்ப் புகழும் தோத்திரமும் துதியும்
நித்திய காலமும் உத்தமமே வளர்
பத்தியோடே சன த்த்திய மாகவும். (இம்)

5. இனியும் நீர்தாம் ஏறிட்டுத் தமியோர்களை ரட்சித்தே
எல்லா இக்கட்டிலேயும்
கனிவாய்ச் சகாயம் செய்யும், துன்னுளில் நாங்கள் தாழ்ந்து
கலங்கி மிரண்டும் உம்மைச் சார்ந்து
அநியாய லோக வாழ்வை விட்டுக்
காகத்திடன் எடுத்து, யூகத்துடன் அடுத்து
நாகப்பகை தடுத்து, ஸ்நேகித்தருள் கொடுத்து. (இம்)

6. கனசேதம் வருவிக்கும் கேடுகெட்கோர் முடிவு
தந்து நொறுங்கினதைக் கட்டி
சன சபையை ஆதரித்தன்பாய் ஆசீர்வதித்து
கண்ணோக்கி எல்லார் மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து தமது தேவ
சிந்தையினூடே தி விந்தையதாய் உயர்
மைந்தனினுல் எமை இந்த விநோதமாய் (இம்)

வேதநாயக சாஸ்திரியார்.

இராகம் - பங்களா. **140** ஆதி தாளம்.

பல்லவி.

நித்தமருள் செய் தயாளனே - எங்கள்
நேசா ஏசு மணாளனே - சுவாமி

அனுபல்லவி.

உத்தம சற்குண தேவகுமாரா
உம்பர்கள் சந்ததம் போற்றும் சிங்காரா
சத்திய வேத விநோதலங்காரா
சதிசெய்யும் பேய்தலை சிதைத்த ஒய்யாரா —நித்தம்

சரணங்கள்.

1. பட்ச பரம குமாரனே — எங்கள்
பாவம் தீருமா வீரனே - சுவாமி
அச்சய சவுந்தர ஆத்தும நாதா
அடியர்கள் துதி செய்யும் ஆரண போதா
இரக்ஷண்ய சுப சுவிசேடலங்காரா
ராஜ கெம்பீர சங்கீத பொற்பாதா —நித்தம்

2. சென்றுண்டெமை முகம் பார்த்தவா - ஒரு
சேத விக்கினமின்றிக் காத்தவா - சுவாமி
இன்னோர் புது வருடாரம்பம் கண்டோம்
ஏக சந்தோஷமாய் சந்தித்துக்கொண்டோம்
குன்றுதுமதுட ஆவியை ஈந்து
கூடவே இருந்தடியார் ஜெபம் கேட்டு —நித்தம்

பிச்சைமுத்து தஞ்சாவூர்.

சுவிசேஷ ஊழியம்.

இராகம்-மோகனம்] **141** [ரூபக தாளம்.

பல்லவி.

ஊழியம் வளர்ந்தோங்கச் செய்யும் - தேவ
ஊழியத்தால் புவி ஈடேறச் செய்யும்

அனுபல்லவி.

நாளெல்லாம் உழைத்தும் நற்பலன் காணோம்
நாதனின் வல்லமை தேடாதே போனோம்

சரணங்கள்.

1. சங்கத்தின் பணக்குறைவாலே - இது
தற்பரன் செயல்தான் என்றேசிக்கலாமோ?
துங்கனேசு சபை தோன்றின நாளில்
தூய ஆவி ஒன்றே துணையாகத் தந்தீர் —ஊழி

2. பணந்தானோ வேலைக்கு ஜீவன் - இந்தப்
பணம் போனாலாண்டவர் பெலன் குன்றிப்போமோ?
குணமான சீஷரைக் கூட்டி ரட்சித்தீர்
குருதியும் ஆவியும் தனமாக வைத்தீர் —ஊழி

3. உத்தம ஊழியரும்மை—முற்றும்
உறுதியாய் நம்பிட இது நல்ல சமயம்
நித்தமும் அவர் அப்பம் தப்பாது எனவே
சத்தியன் சொன்ன சொல் தவறியும் போமோ (ஊழி)

4. சம்பள ஊழியரிவர்கள்—எனச்
சாற்றும் தப்பெண்ணத்தை தகர்க்க நற்சமயம்
அன்பான தாசரனேக ரெழும்ப
அந்தந்தச் சபைதனில் ஆவியை ஊற்றும். (ஊழி)

மோகனம் **142** சாபு தாளம்.

பல்லவி.

உன்றன் திருப்பணியை உறுதியுடன் புரிய
உதவாத பாவி நானே.

அனுபல்லவி.

அந்தகாரமே நின்றுன் அருணோதயமே கண்டு
வந்த நாள் முதற்கொண்டு வைத்தாய் எனக்குன்
தொண்டு — உந்தன்

சரணங்கள்.

1. வேதனத்தின் பொருட்டோ? மேலவர் நிமித்தமோ
வெளியிட்டறிக்கை செய்யவோ? உல
காதாயம் சுயநயம், அகிலத்துரிய புகழ்,
அடைந்து பிரகாசிக்கவோ?
ஓதிக்காலங்கழிக்க உலகாவி யடைந்தவன்
நீதிக்கென பலியாய் நேர்ந்துகொண்டுழைக்கேனோ?
— உன்

2. வேனல் குளிரைக் கண்டு மேனி மிக வெருண்டு
வெளியேறுதகம் துஞ்சினேன்; — வேளைப்
பானமுணவு பித்த பல பிணி வருமென்ற
பயத்தாலே நிதம் அஞ்சினேன்;
கானகம் மலைசென்று கடும்பனி குளிர் வென்று
போனகம் நீரகன்று புவியி லுழைத்த யேசு — உன்

3. காடோ, மலை நதியோ, கடலோ கடந்தலத்துக்
கஸ்தி மிகவேயடைந்து, — உடல்

பாடுங் கவலை நோயும் பசியும் நிருவாணமும்,
பகைவர் திருடர் மோசமும்,
சாடக் கிறிஸ்துவுக்கு தகுந்த பான பலியாய்
ஒடத்தனை யொப்பித்தேன் உறுதியெனக்கில்லையே
— உன்

4. வண்டி குடைகள் ஜோடுவைத்து மெனது கூடு
மயங்கி அயர்ந்து வாடுதே — இனி
என்று மிருப்பிடத்திலிருந்து பணி புரிய
இசைந்தென் மனது நாடுதே;
ஒன்று முதவியின்று ஊரேயலைந்து சென்று,
என்றே நிதம் புரிந்த நானே பரனே யேசு — உன்

வேதநாயகம் ஐயர்.

மணிரங்கு **143** திஸ்ர ஏகதாளம்.

"தருணம் ஈதுன் காட்சி சால" என்ற ராகம்.

பல்லவி.

அறுப்போமிகுதி ஆட்கள் தேவை
அருளும் நாதனே திவ்ய—அருமைப்போதனே.

சரணங்கள்.

1. இந்து தேசம் எங்கும் இருள்
எட்டி ஓடவே-எங்கள் சபைகள் நீடவே —அறு

2. எமைப்புரந்த ஏசுநாமம்
எவருங்காணவே-இருள் அடங்கி நாணவே —அறு

3. வசன அமுதை வார்க்கும் நல்ல
வலவர் ஓங்கவே-மதிகேடு நீங்கவே —அறு

4. நாடு நகரம் காடுமேடு
நாடுமிடமெலாம்-சபைபரவு மிடமெலாம் —அறு

5. போதகன்மார் ஆவியோடுன்
புகழை ஓதவே-மிகுபொய்யை மோதவே —அறு

6. எண்ணிலாத ஆத்துமாக்கள்
ஏங்கிநையுதே-மிகவும் இளைத்துத் தொய்யுதே —அறு

7. ஏழையடியார் மனுக்கிரங்கும்
எமையாட்கொண்டவா-நல்லவாக்கு விண்டவா—அரு
பவுல் அருளப்பன்.

தீர சங்கராபரணம்] 144 [ஆதி தாளம்.

பல்லவி.

தாசரே, இத்தாரணியை அன்பாய்
யேசுவுக்குச் சொந்த மாக்குவோம்.

அனுபல்லவி.

நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,
வெளிச்சம் வீசுவோம். (தாசரே)

சரணங்கள்.

1 வருத்தப்பட்டு பாரஞ் சுமந்தோரை,
வருந்தி யன்பாய் அழைத்திடுவோம்;
உரித்தாய் யேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தை,
சுமந்து தீர்த்தாரே. (தாசரே)

2 பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறைந்து,
யேசு கனிந்து, திரிந்தனரே. (தாசரே)

3 நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை,
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்க வொண்ணு கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள், விழுந்தனரே (தாசரே)

4 இந்து தேச மாது சிரோமணிகள்,
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்;
சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,
நிர்ப்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட. (தாசரே)

5 மார்க்கம் தப்பி நடப்போரை சத்ய
வழிக்குள் வந்திட சேர்த்திடுவோம்,

ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம். (தாச)

சந்தியாகு ஐயர்.

பிலகிரி. **145** ஆதிதாளம்.

பல்லவி.

பூமியின் குடிகளே நீர் தாமதமிலாதியேசு
சாமியினன்னுமமதிலே மகிழுவீர்

அனுபல்லவி.

ஓமனுதியந்தபரனே மனுடரான நம்மை
உருக்கமாய்த் - தங்கருணைப்
பெருக்கமாய்த் - மீட்டாணுங்
துருக்கமாய் - இதுவரைக்கும்
நெருக்கமாய் - ஊக்கமாய் நின்றார் —பூமி

சரணங்கள்.

1. தந்தையார் தமதுநேச மைந்தனைப் பாதகர்க்காகத்
தந்துமா நிர்ப்பந்தமற விந்தையாகவே
இந்த நீசமான பூலோகந்தனை மீட்ட நேசத்தைச்
சிந்தையில் நினைந்து முழு நன்றியாகவே
சந்ததமுமே துதிப்ப தந்தமான வேலையல்லோ
தாசரே — யேசுநாதர்
நேசரே - எருசலேம்
வாசரே - கர்த்தருக்குள்ளாம்
ராசரே - ஆசாரிமாரே —பூமி

2. கர்த்தனர் ஒருவரே நம் நித்திய பரமனென்ற
சத்தியத்தை எத்தினமும் உற்றுணருவீர்;
அத்தனர் படைப்புகளைப் புத்தியற்றுத் தெய்வமெனச்
சொற்றவரே விக்கிரகப் பத்தி யகல்வீர்
இத்தரையில் நாங்களல்ல உத்தபரன் எங்களைக் கண்
ணேக்கினர் - எங்கள் பாவம்
போக்கினர் - சகல துன்பம்
நீக்கினர் - தமது மந்தை
ஆக்கினர் - தூக்கினரென்று —பூமி

3. ஜீவபரன் வாசல்களில் மேவி எய்துவேயம் துதியோ
டாவியுடனே நமது நாவு மிசைந்து
தேவ பிரகாரங்களிலே வருவோமே புகழ்ச்சி
மாவுரிமை யோடுரைத்துக் கூவி மகிழ்ந்து
பாவலர் மற்றோரே நல்ல நாவலரே கர்த்தர் வீட்டுக்
கோடுவோம் - அவர் நாமத்தில்
கூடுவோம் - அவர் பதத்தை
நாடுவோம் - அவர் மகிமை
தேடுவோம் - பாடுவோம் துதி. —பூமி

4. வல்ல பரனுனவர் மா நல்லவர் அவர் கிருபை
உள்ள தூழி ஊழிகாலம், தொல்லையுண்டுமோ;
சொல்லரும் அவரதுண்மை யுள்ளதே தலைமுறைகள்
எல்லாவற்றிலு மெங்களுக்கல்ல லண்டுமோ;
புல்லனும் பேயினரசே யில்லையெனுமட்டும் காளம்
பிடிக்கிறோம் - சத்தியத்தைப்
படிக்கிறோம் - பேயரங்கம்
இடிக்கிறோம் - அவனை யெங்கு
மடிக்கிறோம் - சீக்கிரம் ஜெயம். —பூமி

சாமுவேல் ஐயர்.

கடவுளின் மகத்துவம்.

[இராகம்—தோடி] 146 [ஏக தாளம்

பல்லவி.

உனக்கு நிகரானவர் யார்?—இந்த
உலக முழுவதிலுமே. (உனக்கு)

அனுபல்லவி.

தனக்குத் தானே நிகராம் தாதை திருச்சுதனுர்
மனுக்குலம் தன்னை மீட்க மானிடனுக வந்த (உனக்கு)

சரணங்கள்.

1. தாய் மகனுக்காய்ச் சாவாளோ—கூடப்பிறந்த
தமையன் தம்பிக்காய் மாய்வனோ?

நேயன் நேயர்க்காய் வீவனோ? தனதுயிரை
நேர் விரோதிக்காய் ஈவனோ?
நீ இம்மண்ணுலகில் நீசர்கட்காக வந்து
காயும் மனமறவர்க்காக மரித்தாய் சுவாமி. (உனக்கு)

2. கந்தை உரிந் தெறிந்தனே—நீதியின் ஆடை
கனக்க உடுத்து வித்தனே
மந்தையிற் சேர்த்து வைத்தனே—கடிகணையை
மாற்றி எந்தனைக் காத்தனே
கந்த மலர் பாதனே கனக ரத்ன மேருவே
சிந்தையுவந்துவந்த தியாக ராஜனே சுவாமி. (உனக்கு)

பொன்னுசாமி, மதுரை.

147

இராகம்-உசேனி] [ஆதி தாளம்.

பல்லவி.

சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்ரபுவே,
சொரூபத் தரூபக் கோனாரே!-உரை.

அனுபல்லவி.

வல்லறஞ் சிறந்து மனுவானாரே;-உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே;-உரை. (சொல்)

சரணங்கள்.

1 மாடாயர் தேடும் வஸ்துபகாரி,—மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி
வையகம் புரப்பதற்கு வந்தாரே; அருள்
பெய்து நவமும் தவமுந் தந்தாரே,-உரை. (சொல்)

2 அட்சய சவுந்தர அசரீரி; அதி
உச்சித சுதந்தர அருள் வாரி,
ஐயா வல்லாவே, மாதேவா, -ஓ!
துய்யா, நல்லாவே, ஏகோவா, உரை. (சொல்)

3 பாவவினை யாவையுந் தீர்த்தாரே,-உயர்
தேவ குலமாய் எமைச் சேர்த்தாரே;
பக்கிஷத்தால் முகம் பார்த்தாரே,-பெரும்
பொக்கிஷம்போல் எமைச் சேர்த்தாரே;-உரை.-சொ.

வேத நாயக சாஸ்திரியார்.

இராகம்-பூரணசட்ஜமம்] **148** [தாளம் ரூபகம்.

பல்லவி.

காருண்ய ராஜனீ அனுதாபக்கடலே-அதிகா.

அனுபல்லவி.

சீருலாவிய சிந்தைக் கினிய-நீ
தேவ மனிதனுகின - அதி.

சரணங்கள்.

1. நீயேவழி, நீயே சத்யம், நீயே ஜீவன், வேறேது?
நேயமனசு வைத்த தந்தையும் - நீ
தாயுமான ஏசுவே - அதி. (காரு)

2. சீர் நிறைந்து, பேர் சிறந்து, பாரில் வந்தமெய்மூலா
ஆறுமுனைப் போலாதரிப்பரோ - நீ
ஆத்ம நேச நாயனே - அதி. (காரு)

3. தீயதான மாய லோகில் தேயம் காயமாமோ?
சாயும் பொழுதில் தாசனைக்கரம் - நீ
தாங்கியாளும் ஜீவனே - அதி. (காரு)

பரமானந்தம் ஐயர்.

இராகம்-கமாஸ்.] **149** [ஆதி தாளம்.

பல்லவி.

ஆதியாம் பரஞ்ஜோதியின் சுடரே - ஜெக
மனுவர் பவமற பரனுர் அருளிய அருமறை முதலே.

120

சரணங்கள்.

1. ஜோதி மயமாய் எங்கும் நிறைந் தாய்
தொல்லை வினையைத் தீர்க்கத் துணிந் தாய்
பாவக்கசடற எங்களுக்குகந் தாய்
பாரக்குருசினில் மரித்தாய்-எங்களுக் குயிரோடெழுந்தாய்—ஆதி.

2. கன்னிமரி மின்னாள் கற்பிலுதித் தாய்
காலமதில் பிறந்தே வளர்ந் தாய்
நீதியாய் உந்தனின் வார்த்தை பொழிந் தாய்
நெறிதவருது நடந்தாய்-நித்தியம் எங்களுக் களித் தாய் —ஆதி.

3. காரிருள் நிறைந்த கருத்தற்ற பாவிக்கு
நேயமாய் உந்தனின் நேசத்தைக் காட்டிட
அளவற்ற குணத்தை என்றுமே சார்ந்திட்ட
அடியேன் ஆதிபவமற-அருள்செய் பரனே சுரனே. —ஆதி.

ஞானவரம் ஐயர்.

150

சரணங்கள்.

1. தேவனே உன் வல்லமையைத் தெரிந்து கொள்ள திறமை இல்லை.
பாவி எனின் தீவினையைப் பரிகரிக்க பலமே இல்லை
மண்டல வானத்தை – மடியாய் விரித்த
மகிமை அணிந்த மகத்வ – ஒளியே
அண்டர்கள் நாயனே–தொண்டு செய் போதனே
கண்டவர்மாயனே – என்றும் சகாயனே.

2. மேல் வீட்டைத் தண்ணீரதால் மெத்தனவே மச்சுப்பாவி
பால் நாட்டின் மேகரதம் பாங்காய்ப் பறக்குது பார்
ஆளுமடியார் – ஆவியு மக்கினி
தாளுமடியாத் – தாரணிவகுத்து
நீரால் மடியா – தாளவே மூடி
வாழும்படி வைத்த – வல்லவமைக் கர்த்தனே

3. பர்வதத்தின் பானமெல்லாம் பயங்கர குமுறலினுல்
சர்வமும் விரைந்து சென்று சாரப் பள்ளத்தாக்கில் தங்க
தொல்லை யில்லாது – எல்லையைப் போட்டீர்
சொல்ல வொண்ணுத – நல்ல ஊற்றதில்
அல்லலில்லாது – அனந்த ஜீவன்களும்
கல்லலில்லாக் காட்டுக் – கழுதையும் அருந்தும்

4. ஆகாயப்பறவை எல்லாம் அடர்ந்திருக்கும் கிளைகளில்
தாவாகச் சஞ்சரித்துத் – தன் குரலைக் காட்டிப்பாடும்
பூமியின் சாரம் – பாவிக்காதாரம்
தாவி என்கரம் – கூவி உன்புறம்
சாமியுன் பாரம் – பாவியைக் காரும்
ஆவியின் வரம் – மேவி என்னேரம்.

5. நாதன் நன்றாய் நாட்டிவைத்த லீபனோனின் கேதுருவும்
சாதனமாய்த் தேவதாரில் சஞ்சரித்த கொக்குகளும்
பால சிங்கங்கள் – பசித்துக் கர்ச்சிக்கும்
காலக்குறிப்பைக் – காட்டும் சந்திரம்
மாலை மயங்கும் – வேளையிலிலங்கும்
சால நலிந்து – காலை ஒதுங்கும்.

லூத்தரன் சபை அணைக்காடு.

தோத்திரம்.

இராகம்–சங்கராபரணம்.] **151** [ஆதி தாளம்.

1. ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ!
வாகுதங்கு குரு நாதா, நமோ நமோ!
ஆயர்வந்தனை செய் பாதா நமோ நமோ! —அரூபா,

2. மாக மண்டல விலாசா, நமோ நமோ!
மேகபந்தியினுலாசா, நமோ நமோ!
வான சங்கம விஸ்வாசா, நமோ நமோ! மனுவேர,

3. நாக விம்பமுயர் கோலா, நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா, நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா, நமோ நமோ! —நரதேவா,

4. ஏகமந்திரமுறு பூமா நமோ நமோ!
யூகதந்திர வதி சீமா, நமோ நமோ!
யேசுவென்ற திருநாமா, நமோ நமோ!–இறையோனே

5. அறிவினுருவாகிய மூலா நமோ நமோ!
மறையவர்கள் தேடிய நூலா நமோ நமோ!
அதிசய பராபர சீலா நமோ நமோ! —அருளாளா

6. பொறிவினை யுருத சரீரா நமோ நமோ!
குறையணுவிலாத குமாரா நமோ நமோ!
புவன முழுதாள் அதிகாரா நமோ நமோ! —புதுவேதா

7. நிறை வழியின் மேவிய கோனே நமோ நமோ!
முறைகள் தவருத வீஞ்ஞனே, நமோ நமோ!
நிதிபெருகு மாரசதேனே நமோ நமோ! —நெறிநீதா

8. இறைதவீது பாடிய கீதா நமோ நமோ!
பறைகள் பல கூடிய போதா நமோ நமோ!
எருசலையினிடிய தூதா நமோ நமோ —இறையோனே

வே. சா.

இராகம் - சுத்தப்பங்களா. 152 ஆதிதாளம்.

பல்லவி.

தினமே நானுனைத் தேடிப் பணிய
துணைபுரிவாய் நித்ய ஏக தெய்வமே —தின

அனுபல்லவி.

மன நிலை தவறி மருகினேன் நானே
மாசிலானே அனுகூல நற்கோனே —தின

சரணங்கள்.

1. அருள் நாயகனே அம்பரத் தீசா
ஆதியாய் நின்ற பேரருள் நிறை பாசா
மருள்பவ நாசா மனுக்குல ராசா
மகிமையடைந்த மா மகத்துவ நேசா —தின

2. செத்தேனெனக்குன் ஜீவனளித்தாய்
தீயனென் மேல் திரு தீர்த்தம் தெளித்தாய்
முத்தே யென் நன்மைக்காக மரித்தாய்
மோதிய தீவினை யாவுமழித்தாய் —தின

3. திரளென் பாவங்கள் தீர்த்திட வாராய்
தீமை மறந்து நான் சீர் பெறக்கூறாய்
கறள் குணமாற்றிக் கனிந்தெனைச் சேராய்
களிப்புடன் பாடிடக் காதற் கண் பாராய் —தின

பரமானந்தம் ஐயர்.

அமீர்கல்யாணி **153** சதுரஸ்ர ஏகதாளம்.

பல்லவி.

திருத்துவப் பொருளை திரியேக வுருவை
தினமும் அல்லேலூயா துதியுங்கள் அவரை.

சரணங்கள்.

1. கர்த்தனைத் துதியும் வானுளவைகளே
கனித்துன்னதங்களில் துதியுந் தூதர்களே
கடவுளின் சேனைகளே துதியும்
கதிரவன் மதியே நட்சத்திரங்களே
கனவானங்களே ககன ஜலங்களே —திரு

2. மகிமையுள்ளவைகளே மகா மச்சங்களே
மழைகள் அக்கினியே மூடுபனிகளே
மலைகளே காற்றே மேடுகளே
மதுர மரங்களே கேதுருக்களே
மதவிலங்குகளே பறவை யினங்களே —திரு

3. புவியரசர்களே சகல ஜனங்களே
புவனப்பிரபுக்களே நீதிபதிகளே
புகழ் வாலிபர் கன்னிகைகளே
புதல்வர்களே செல்வப் புதல்விகளே
புங்கவனைத் துதியும் முதியோர்களே —திரு

4. ஆண்டவர் நாமம் அதிகம் உயர்ந்தது
அவர் மகிமை வான் புவியில் சிறந்தது
ஆனந்தமாய்த் தன்னடியார்கள்
அகமகிழ்ந்திஸ்ரவேல் வழிகளை வாழ்த்தினார்
அன்னவர்க்காயொரு கொம்பை உயர்த்தினார் —திரு

சங்கராபரணம்.] **154** [ஆதி தாளம்.

பல்லவி.

சுந்தரப் பரம தேவமைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்கு
தோத்திரம், புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்!

அனுபல்லவி.

அந்தரம் புவியும் தந்து, சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார்; நமை ஒன்றாய்க் கூட்டினார்; அருள் முடி
சூட்டினார்; கிருபையால் தேற்றினாரே துதி. (சுந்)

2. பாபமகற்றிடும் நாமம் பரிசுத்தமாக்கிடும் நாமம்
சாபம் தொலைத்திடும் நாமம் சகலர்க்குமுரித்தான நாமம்

3. நோய்களை நீக்கிடும் நாமம் நொம்பலம் போக்கிடும் நாமம்
பேய்களை யோட்டிடும் நாமம் பேரதிசயமுள்ள நாமம்

4. ஜெபத்துக்கு ரகசிய நாமம் தேர்ந்தவர் கொண்டாடும் நாமம்
விபத்துக்குக் கைகண்ட நாமம் வேறு நாமம் வெறு நாமம்

5. ஜாதியை உயர்த்திடும் நாமம் சமாதானம் தந்திடும் நாமம்
நீதியை நிலைநாட்டும் நாமம் நிகரில்லா மகிமை சேர் நாமம்

6. அஞ்ஞானமழித்திடும் நாமம் அறிந்தவர்க்கதிசய நாமம்
மெஞ்ஞானம் புரிந்திடும் நாமம் மேலுலகோர் புகழ் நாமம்

7. மூவுலகோர் முழங்கால்கள் முடங்கிப் பணிந்திடும் நாமம்
சாவையழித்த நல் நாமம் சற்குரு யேசுவின் நாமம்

8. ஐயா! உன் நாமம் ஒன்றே அகிலமெல்லாம் பறந்தின்றே
வெய்ய தீவினைகளைக் கொன்றே மேன்மையடைந்தது நன்றே.

பரமானந்த ஐயர்.

இராகம் - கௌசிகை] 157 [ஆதி-தாளம்

பல்லவி.

இயேசுவின் நாமமே திரு நாமம் — முழு
இருதயத் தாற் றொழுவோம் நாமும்

சரணங்கள்.

1. காசினியில தனுக்கிணையில்லையே — விசு
வாசித்தவர்களுக்குக் குறைவில்லையே —இயேசு

2. இத்தரையில் மெத்த வதிசய நாமம் - அதை
நித்தமும் தொழுபவர்க்கு ஜெய நாமம் —இயேசு

3. உத்தம மகிமைப் பிரதாப நாமம் — இது
உண்மையிது உண்மை, மனமொத்த நாமம் —இயேசு

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம் - கடும்
வேதாளங்கண்டு பயந்தோடும் நாமம் —இயேசு

5. பட்சமுடன் ரட்சை செயுமுபகாரி — தீய
பாவப்பிணி தவிர்க்கும் பரிகாரி —இயேசு

இராகம் கமாஸ் **158** ஆதி தாளம்.

பல்லவி.

இயேசு நாமம் ஒன்றை நம்புவீர்
பூலோகத்தாரே

சரணங்கள்.

1. இயேசு நாமம் ஒன்றை நம்பும்
ரட்சண்யத்துக்கிதுவே ஸ்தம்பம் — ரீ. ரீ.
பேசும் வேறே நாமமெல்லாம்
பேயின் வம்பும் துர்ப்புமாகும் —இயேசு

2. மூவரி லொருவருமாய்
முத்தொழில் புரிவோருமாய் — ரீ. ரீ.
ஆவியாய் அனுதியாய் அ
ரூப ரூப வஸ்துவான —இயேசு

3. ஐயன் ஏசையா உரைத்து
ஆரணத் தெழுதிவைத்து — ரீ. ரீ.
வையன் புரக்கும் நாயன்,
தையல் தரும் தூய சேயன் —இயேசு

4. பார்த்திபன் தவீது குல
கோத்திர கன்னிமரி பால் — ரீ. ரீ.
நேத்திரம் போலே உதித்துத்
தாத்திரி ரட்சகனான —இயேசு

5. பூதலத் தஞ்ஞான இருள்
போக்கவே மெய்ஞான பெரும் — ரீ. ரீ.
ஜோதியாய் விளங்கி நிற்கும்
நீதியின் சூரியன் ஆன —இயேசு

6. பாவிகளீடேற மோட்ச
பாக்கியம் பெறுவதற்காய் — ரீ. ரீ.
ஜீவன் விட்டுயிர்த் தெழுந்து
சேணுலகுக் கேறிச் சென்ற —இயேசு

7. விண்டலத்தவர்கள் சூழ
கண்டலகை பதறி விழ — ரீ. ரீ.
மண்டலத்தைத் தீர்வை செய்யக்
கொண்டல் மிசை வரும் ராஜன் —இயேசு

கேதார கௌளம். **159** ரூபகம்.

பல்லவி.

இயேசு நாமமே தெய்வீக — ஜீவ மந்திரம்
ஜெயகுல தினகர

அனுபல்லவி.

வேத - தீப - மான - தீதரீ
நித்தியம் - சத்திய நெறிதரு குருபர

1. அந்த பிராமுனிக் காறுதல் தந்திட
அன்பன் ஈசாக்குனக்கார் மகவென்றிட
என்றும் உன் சந்ததி ஈடேற்ற முண்டென - ரீ
ஈசனாய் நேசனாய் இனஜன வழிவரும் —

2. பந்தபவங்களை பாவத்தைத் தீர்த்திட
பாலகனாய் பலியாய் நரர் பார்த்திட
சிந்தும் உதிரத்தால் சேயரைக் காத்திட - ரீ
சேயனாய் நேயனாய் திருவடி உயிர்தரும்.

எல். எஸ். சாமுவேல்.

160

பல்லவி.

இயேசுவின் திருநாமம் அது எக்காலமுமெனக்
கினிய நற்றுணையே

சரணங்கள்.

1. உயிர்க்குயிராகி யென்னுள்ளுறை யமுதாம்
உத்தமர் தமதுள்ள முவந்திடும் தேனும்
பயிலப் பயில ஜீவ பழந்தரு தருவாம்
பத்திரசம் பெருகும் பரம நல்லூற்றும்.

2. வானிலிருந்தது வையகம் வந்தது
வாக்கு மெய் மனதுக்கும் வாய்ப்பதரிதது
ஊனமுற்றிடு நார்க் குறுவலி யளித்திடும்
உற்றார் பெற்றாரிலும் உரிமையதாகிடும்.

3. அன்பு மருளுமது அறனுந் திறனுமது
அண்டி வந்தவர்க்கெல்லாம் அடைக்கலமதுவே
துன்ப துயரமெல்லாம் துடைக்கு நல்மருந்தே
துயிலு நேரத்திலுமென் துணையாமந்திரமே.

161

கவலையில் ஆறுதல்.

'திரும்பி பாரேதே சோதோமை' மெட்டு.

பல்லவி.

கவலைவைக்காதே மகனே நீ
கவலைவைக்காதே

அனுபல்லவி.

கவலைவைத்திந்த உலகை – நாடி
அபலமானவரனந்தம் – கோடி – கவலை

சரணங்கள்.

1. பெற்றபிதா நமக்கொன்று – அவர்க்
குற்ற செல்வம் நமக்குண்டு
உத்தம வேலை கை கொண்டு செய்ய
உனக்கென்ன குறையுண்டு — வீண்கவலை

2. என்ன நான் புசிப்பேனென்று – நாளை
என்ன நான் குடிப்பேனென்று
இன்னும் வீண் கவலை கொண்டு – தினம்
ஏங்கிறாய் எப்பலனுண்டு ? — வீண்கவலை

3. காகங்களை நோக்கிப்பாரு – நல்ல
களஞ்சிய முண்டோ வேறு
தாகம் பசிக்கவைக்காரு – இரை
தருகிறாரென்று கூறு. — வீண்கவலை

4. புல்லும் பூண்டும் காட்டில் வளரும் – பிழைப்
பூட்டுவரரரென்று கழறும்
பொல்லாக்கவலை யாற்றழலும் – மனம்
பொறுமை யில்லாமல் அலறும் — வீண்கவலை

5. உடையின் கவலையாலே – மனம்
உடையுமே பலவேளை
முடியுமோ உந்தனாலே – அல்ல
முற்றுமது பிதாவேலை — வீண்கவலை

6. கானகலீலிப் பூப்போல – கன
ஞான சாலமோன் தன் மேலே
பூணவில்லையாகையாலே – பிதா
புல்லுக்குடுத்து மாப்போலே — வீண்கவலை

7. கவலைப்பட்டோர் முழம் கூட்டும் – (நரன்)
காசினியிலுண்டோ காட்டும்
குவலய மெல்லாம் போற்றும் – இயேசு
கோமான் திரு மொழி கேட்டும் — வீண்கவலை

8. ஆகாரத்தைப் பார்க்க ஜீவன் – உடை
யானதைப் பார்க்க சரீரம்
வாகானதே மாவிசேஷம் – என்று
வழுத்துதே சுவிசேஷம் — வீண்கவலை

9. முந்தப்பராபரன் ராஜ்யம் தேடும்
மோனமாம் நீதி சிலாக்யம்
பிந்தியே லோக சாம் ராஜ்யம் வரும்
பேசுவாய் நீயதின் சாட்சியம். — வீண்கவலை

முத்துசாமி உபா.

கேதார கௌளம். **162** ஆதிதாளம்.

பல்லவி.

நெஞ்சே நீ கலங்காதே - சீயோன் மலையின்
இரட்சகனை மறவாதே - நான் என் செய்வேனென்று,

அனுபல்லவி.

வஞ்சகர் பகை செய்தாலும், வாராவினை வந்தாலும்

சரணங்கள்.

1. வினைமேல் வினை வந்தாலும், - பெண்சாதி பிள்ளை
மித்துரு சத்ரு ஆனாலும்
மனையோடு கொள்ளை போனாலும்
வானம் இடிந்து வீழ்ந்தாலும் - நெஞ்

2. பட்டயம் பஞ்சம் வந்தாலும் - அதிகமான
பாடுநோவு மிகுந்தாலும்,
மட்டிலாவருமைப் பட்டாலும்
மனுஷர் எல்லாம் கைவிட்டாலும் - நெஞ்

3. சின்னத்தனம் எண்ணினாலும் - நீ நன்மை செய்ய
தீமை பிறர் பண்ணினாலும்,
பின்னபேதகம் சொன்னாலும்
பிசாசு வந்ததணுப்பினாலும் - நெஞ்

4. கள்ளன் என்று பிடித்தாலும் - விலங்குபோட்டுக்
காவலில் வைத்தடித்தாலும்
வெள்ளம் புரண்டுதலை
மீதில் அலைமோதினாலும் - நெஞ்

வேத நாயக சாஸ்திரியார்.

இராகம் கியால் 163 அடதாள சாப்பு.

பல்லவி.

வாராவினை வந்தாலும் சோராதே மனமே
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே

சரணங்கள்.

1. அலகை சதித்துன் மீது வலை வீசினாலும்,
அஞ்சாதே எசுபரன் தஞ்சம் விடாதே; — வாரா

2. உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்,
உறுதி விட்டயராதே, நெறி தவறாதே; — வாரா

3. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே;
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே, — வாரா

4. தன் உயிர் ஈந்திட்ட உன் ஏசு நாதர்
தள்ளுவாரோ? அன்பு கொள்ளவர்மீதே — வாரா

5. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே, — வாரா

6. வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ
வானவனை முற்றும் தான் அடைவாயே — வாரா

7. தேகம் மோகம் மிஞ்சி வேகங்கொண்டாலும்
திடமன தாயிருந் தடல் புரிவாயே — வாரா

8. எத்தனை தீதுனைப் பற்றி நின்றாலும்
இறைவனே தஞ்சமென்றிரு, மன்னிப்பாரே — வாரா

ஜாண் பால்மர்.

164

இராகம்—சங்கராபரணம்.] [தாளம் ஆதி.

"அஞ்சிடவேண்டாம் நெஞ்சமே" மெட்டு.

1. எஜமான் இருவரைச்சேராதே—அப்போ
இருவரில் ஒருவர் ஆகாதே
நிஜமாய் பகவான் துணை நம்பி
நிதமும் அவரைப் பணிந்திடுவாய்

2. என்னத்தை உண்பேன் குடிப்பேனென - வீணே
ஏங்கிக் கவலை கொள்வதினால்
உன்னத பரன் அன்பை மறப்ப தல்லால்
ஓர் சிறு நலமும் நீ காண்பதில்லை.

3. கான புஷ்பத்தைக் கவனித்துப்பார்—அது
தானுய்த்தனை அலங்கரிப்பதுண்டோ?
ஞானி சாலமோன் முதலாய்
நன்றாய் அதனைப்போலுடுத்ததுண்டோ.

4. ஆகாயத்துப் பறவையைப்பார் — அது
வாகாய் விதைத்து அறுத்திடுமோ.
ஏகபிதாவின் தயையல்லோ
இன்னாளில் அது பிழைப்பது காண்.

5. காட்டுப்புல்லை காகங்களை — உன்
கர்த்தர் உடுத்திப் பிழைக்கவைத்தால்
தேட்டமாய்த் தம் பிள்ளைகளை
தினமும் நடத்துவதுண்மையல்லோ.

6. தலையிலுள்ள ரோமமெல்லாம் — ஒன்று
தவறுதெண்ணப்படவில்லையோ
மலையாதே உன் நாளெல்லாம்
வான பரன் உனைக்காப்பாரே.

7. தேவராஜ்ஜியமே தேடு — அதைச்
சீராய் உலகில் கொண்டாடு
யாவும் அறிந்த பரம பிதா.
நன்றாய் நடத்துவதைக் காண்பாய்.

பரமானந்தம் ஐயர்.

இராகம் அமீர்கல்யாணி **165** ஆதி தாளம்.

பல்லவி.

இனி நமக்கென்ன பயமேது — ஏசு
நாதர் நம்மோடிருக்கும்போது

அனுபல்லவி.

மனித வடிவாயிந்த மானிலம் வந்த ஏசு
அனுதினம் நமதுடன் அருகிலிருக்கும்போது — இனி

சரணங்கள்.

1. வழிதனில் பிறவிக்குருடன் — வரு
வோரிடம் பிச்சை கேட்டிருக்க
ஒளிபோலிலங்கும் ஏசு அவன் மேல் இரங்கி வந்து
விழிகள் திறந்து மனம் களிக்கச் செய்தோனிருக்க
— இனி

2. பெரும் பாடு கொண்ட ஒரு மாது — ஐயன்
பேணி வஸ்திரம் தொடும்போது
ஒருவருமறியாமல் உடனே உதிரம் நீங்க
வருவோர் யாவர் இதயம் மகிழ்ச்சிசெய்தோனிருக்க
— இனி

3. குஷ்ட வியாதி கொண்ட ஒருவன் — குளக்
கரையில் அனுதினமிருக்க
அஷ்ட திசை புகழும் ஆயனர் அங்கு வந்து
கிட்ட அவனைத் தொட்டு கிருபை செய்தோனிருக்க
—இனி

நம்பிக்கை.

இராகம் பிலகிரி. 166 ஏக தாளம்.

பல்லவி.

உனக்கொத்தாசை வரும் நல் உயர் பருவதம் – இதோ

அனுபல்லவி.

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவோனே,—

சரணங்கள்.

1. வானம் புவிதிரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ? —உன

2. காலைத் தள்ளாட வொட்டார், கரத்தைத் தளர வொட்டார்
மாலையுறங்கமாட்டார், மறதியாய்ப் போகமாட்டார் —உன

3. கர்த்தருன்னைக் காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்,
நித்தியமு முந்தனுக்கு நிழலாயிருப்பவராம் —உன

4. பகலில் வெயிலெனினும் இரவில் நிலவெனினும்
இகல் வருவது மில்லை, இன்னல் செய்வது மில்லை —உன

5. தீங்கு தொடாதுன்னை தீமை படாதுன்மேல்;
தாங்குவார் தூதர் கோடி, தாளிடறுதபடி —உன

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பிவிடுமே —உன

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே; —உன

பாளையங்கோட்டை.

இராகம் இந்துஸ்தானி. **167** ஆதி தாளம்.

பல்லவி.

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறைவுண்டு? நீ சொல் மனமே

சரணங்கள்.

1. பொன்னே தொலைந்திடும் மண்ணே அழிந்திடும்
பூவோ ரொழிந்திடுவார் கணமே,
என்னுசை மிகும் யேசுவோ நித்தியர்
எல்லாப் பொருள் விலை கொள்ளாப் பொருளெனும் — என்

2. தாயுதரந்தனிலே யெனை மனுஷனுய்த்
தானுருவாக்கின ஞான பிதா
நேய குமாரன் தூய உதாரன்
நிச்சயமா யென்மேல் பட்ச மிகுத்தென்றும் — என்

3. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்,
விண்ணுல குயர்ந்தோர் உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே சுகபத்திரமருளும் — என்

4. ஆசிசெய்திடுவார், அருள் மிக அளிப்பார்,
அம்பரந்தனி லெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்;
மோட்ச வழிசத்யம் வாசல் உயிரெனும் — என்

5. பாபமோ, மரணமோ, நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ்சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குரு நாதன்
சஞ்சல மினியேன்? நெஞ்சமே, மகிழாய் — என்

6. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்,
கடைசி மட்டுங் கைவிடா திருப்பார்;
பவமனிப்பளிப்பார் பாக்கியங்கொடுப்பார்,
பரம பதவியினுள் எந்தனை எடுப்பார். — என்

7. போனது போகட்டும், புவிவசை பேசட்டும்,
பொல்லானம்புக ளெய்திடட்டும்,
ஆனது ஆகட்டும், அருள் மழை பெய்திடும்,
அன்பு மிகும் பேரின்ப மெனக்கருள். — என்

சாமுவேல் ஐயர்.

இராகம் சகானா. 168 சாப்புத்தாளம்.

பல்லவி.

ஒரு போதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க
உனக்கென்ன குறை மகனே. — ஒருபோதும்

அனுபல்லவி.

சிறுவந்தொட்டுனை - ஒரு
செல்லப்பிள்ளை போல் காத்த
உரிய தந்தை உனக்கு
உயிரோடிருப்பார் என்றும் — ஒரு

சரணங்கள்.

1. கப்பலின் அடித்தட்டில் களைப்புடன் தூங்குவார்
கதறுமுன் சத்தங்கேட்டால் - கடல் புசல் அமர்த்துவார்
எப்பெரிய போரிலும் - ஏற்ற ஆயுத மீவார்
ஏழைப்பிள்ளை யுனக்கு-ஏற்ற தந்தை நானென்பார் — ஒரு

2. கடல் தனக்கதிகாரி - கர்த்தரென்றறிவாயே
கடவாதிருக்க வெல்லை - கற்பித்தாரவர் சேயே
விடுவாளோ பிள்ளையைத் தாய் - மேதினியிற்றனியே
மெய்ப்பரனை நீதினம் - விசுவாசித்திருப்பாயே — ஒரு

3. உன்னுசை விசுவாசம் - ஜெபமும் வீணாகுமா
உறக்கமில்லாதவர்கண் - உன்னை விட்டொழியுமா
இன்னில மீது னுனக் - கென்ன வந்தாலும் சும்மா
இருக்குமா அவர் மனம் உருக்கமில்லாதே போமா — ஒரு

4. உலகம் பேயுடலாசை - உன்னை மோசம் செய்யாது
ஊக்கம் விடாதே திரு - உளமுனை மறவாது
இலகும் பரிசுத்தாவி - எழில் வரம் ஒழியாது
என்றும் மாறாத நண்பன் - இரட்சகருடன் சேர்ந்து — ஒரு

முத்துசாமி உபாத்தியாயர்.

169

(முத்திநெறியறியாத என்ற மெட்டு)

1. தந்தையும் நீர் தாய் தமர் நீர் எனக்குள்ள சகலமும் நீர்
மணவாளன் நீர் மகிமையும் நீர் மற்றுமுள்ள பந்துக்கள் நீர்

2. செல்வமும் நீர் சிறப்பும் நீர் சந்தோஷ பாக்கியம் நீர்
சமாதானம் நீர் சகலமும் நீர் வற்றாத சமுத்திரமே

3. அன்பும் நீர் அழகும் நீர் அளவில்லாத கருணையும் நீர்
தாகமும் நீர் தயவும் நீர் தாழ்மையுள்ளோர்க்கு தாதனும் நீர்

4. ஆடையும் நீர் ஆபரணம் நீர் விலைமதியாதுள்ள மாலையும் நீர்
ரத்னம் நீர் வைரம் நீர் நீதியுள்ளோர்க்கு நேர்மையும் நீர்

5. ஆறுதல் நீர் தேறுதல் நீர் அன்புள்ளோர்க்கு ஆஸ்தியும் நீர்
ஆருமற்ற அகதிகட்கு அரணான அடைக்கலமே.

இராகம் மோகனம்] **170** ஏக தாளம்.

170

பல்லவி.

ஒருமருந்தரும் குருமருந்தே
உம்பரத்தில் கண்டேனே.

அனுபல்லவி.

அருள் மருந்துடன் ஆனந்த மருந்து,
ஆதியிற்றானாய் முளைத்த மருந்து,
வரும் வினைகளை மாற்றும் மருந்து,
வறுமையுள்ளோர்க்கே வாய்த்த மருந்து. (ஒரு)

சரணங்கள்.

1 சிங்கார வனத்தில் செழித்த மருந்து,
ஜீவகனி மீதில் படர்ந்த மருந்து,
மங்கை ஏவை பவம் மாற்றும் மருந்து,
வல்ல சர்ப்பம் விஷம் மாய்த்த மருந்து. (ஒரு)

2 மோசே முதல் முன்னோர் காணு மருந்து,
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து,
தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து,
தீர்க்க தரிசிகள் செப்பிய மருந்து. (ஒரு)

3 தீராத குஷ்டத்தைத் தீர்த்த மருந்து,
செவிடு குருடுமை தின்ற மருந்து,
மானுதிருத்துவ மான மருந்து,
மனுவாய் உலகினில் வந்த மருந்து. (ஒரு)

4 செத்தோர் உயிர்த்தே எழுந்த மருந்து,
ஜீவன் தவரு தருளும் மருந்து,
பக்தரைச் சுத்திகரித்திடும் மருந்து,
பரம வாழ்வினில் சேர்க்கும் மருந்து. (ஒரு)

யாகோபு கருவூர்.

தேவ துணை.

திருப்புகழ். 171 தாளம் ஆதி.

கண்ணிகள்.

1. ஆதியந்தமில்லாதா துணைபுரி
ஜோதி சின்மய வேதா துணைபுரி
மாதிடம் வந்த நாதா துணைபுரி — மனுவேலா.

2. திறை திறந்த வீர நாதர் துணைபுரி
மறை புகழ் மரிமைந்தா துணைபுரி
குறை யகற்றிட வந்தாய் துணைபுரி — குமரேசா.

3. பெத்தலேயில் பிறந்தோனே துணைபுரி
சுத்த சத்தியவானே துணைபுரி
நித்தியம் தரும் தேனே துணைபுரி — நெறியோனே.

4. பாவிகள் பரிகாரா துணைபுரி
பூவில் போதகம் தீரா துணைபுரி
சேவித்தேன் உனை நேரே துணைபுரி — திரியேகா.

5. குருதிசிந்தின கோனே துணைபுரி
சுருதி தந்த சீமானே துணைபுரி
கருதிக் காத்திடும் கண்ணே துணைபுரி — கதியீந்தே.

6. சிலுவையில் ஜெயங் கொண்டாய் துணைபுரி
திரைமிகும் கடல் சென்றாய் துணைபுரி
வலுசர்ப்பந்தனைக் கொன்றாய் துணைபுரி — வரமீந்தே.

7. அடிமை எந்தனை ஆண்டே துணைபுரி
கொடியன் நானுனைக் கொண்டேன் துணைபுரி
படிமிசை எனக்கின்றே துணைபுரி — பணிந்தேனே

172

ஆதி தாளம்.

பல்லவி.

ஐயா கொல்கதாமலை நாதா
எனக்கார் துணை சொல் அனுகூலா.

அனுபல்லவி.

மெய்யாய் இது தருணம் வா வா,
இச்சிறியன் முகத்தைப் பார்க்க வா வா. (ஐயா)

சரணங்கள்.

1 — பாறைக்குள் தேரை போலானேன்-நான்
பலதுயர் பட்டவனானேன்
ஆலைக்குள் கரும்பு போலானேன்-இந்த
அகதிக்குள் முகங் காட்டவாரும். (ஐயா)

2 பலரும் பலது சொல்லி ஏய்த்து-எனை
அலைவாய் துரும்பு போலாய்த்து
தொலையாக் கவலைக்குள் மாய்கையில்-எனைத்
துரத்திவிட்ட கதியைப் பார்த்து. (ஐயா)

3 பெற்றோர் எனைக் கைவிட்ட போதும்-என்பிறவி
மறந்திட்ட போதும்
மற்றோர்கள் இரங்காத போதும்-என்னை
மறவா என் நேசா நீர் பாரும் (ஐயா)

4 தாகம் மிகுந்தவரே வாரும்-நல்
அமர்ந்த தண்ணீரண்டை சேரும்
பணமும் விலையுமில்லாமல்-நான்
பருகிட தாகத்தைத் தீரும். (ஐயா)

காம்போதி] **173** [சாப்பு தாளம்

பல்லவி.

நின்பாதம் துணை அல்லால், வேறொரு துணை இல்லை
நித்ய பரமபோதா.

அனுபல்லவி.

என்பாவம் போக்கியே கிருபைபுரியும், சுவாமி
ஏக வஸ்துவான ஏசுக்கிறிஸ்து நாதா! — நின்.

சரணங்கள்.

1. ஆதிமனிதருக் கன்றேற்றியபடி மனு அவதாரமாய்ப்பிறந்தீர்
ஜாதி அனைத்தும் உய்ய, நீதிக்கென்று தலைசாய்த்துக் குருசில் இறந்தீர்;
வேதம் முழுவதும் நிறைவேற்றிக் கடைசியிலே வெற்றி முடியும் சிறந்தீர்:
ஏதம் இல்லாத அனாதித் திருமகனே,
எங்கும் நிறைந்திலங்கும் ஏசுக்கிறிஸ் தென் தேவா:—

2. தேவரீருக்கேற்காத குற்றம் செய்திருந்தாலும்
சித்தமிரங்கி வரும்;
மேவி எனது வினையாவும் அகல இந்த வேளை எனையும் காரும்;
பாவிக்குதவியாக மனுவேலே நீர்பட்ட பாடனைத்தையும்
ஆவலாக உமையடைந்து சரண்புகுந்தேன்;
ஆபத்தை நீக்கும், ஐயா, இப்போ மெய்யாய்! —நின்.

வேத நாயக சாஸ்திரியார்.

[இராகம் - முகாரி] **174** அடதாள சாப்பு.

பல்லவி.

ஆறும் துணை இல்லையே எனக்
காதியான் திருப்பாலா-உந்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய் ஏசு நாதா.

அனுபல்லவி.

சீர் உலாவு பூங்காவில் ஓர் கனி
தின்ற பாதகம் மாற்றவே
சிலுவை மீதினிலே உயிர்விடும்
தேவனே என் சுவாமியே.

சரணங்கள்.

1 முந்துமானிடர் தந்த தீவினை
முழுவதும் அறவேண்டியே
முள் முடியுடன் குருசில் ஏறிய
முன்னவா கிருபை கூர்வையே
சிந்தும் உன் உதிரத்தில் என் வினை
தீர்த்திரட்சியும் ஐயனே
தீயபாவி எனக்கு வேறொரு
செயலிடம் துணை இல்லையே (ஆரும்)

2 தந்தை தாயரும் மைந்தர் மாதரும்
சகலரும் உதவார்களே
சாகும் நாளதில் நீ அலால் எனைத்
தாங்குவார்களும் உண்டுமோ
சொந்தம் நீ எனக்கன்றி வேறொரு
சொந்தமானவ ரில்லையே
சுற்றமும் பொருள் அத்தமும் முழ
பத்தமே எனதத்தனே. (ஆரும்)

3 கள்ள ஞயினும் வெள்ள ஞயினும்
பிள்ளை நான் உனக்கல்லவோ
கர்த்தனே வலப்பக்க மேவிய
கள்ளனுக்கருள் செய்தையே
தள்ளி என்னை விடாமல் உன்னடி
தந்து காத்தருள் அப்பனே
தயவதாய் ஒரு குருசில் ஏறிய
சருவ ஜீவ தயாபரா. (ஆரும்)

4 நன்றி அற்றவனுகிலும் எனைக்
கொன்று போடுவ தாகுமோ
நட்டமே படும் கெட்ட மைந்தனின்
கிட்ட ஒடின தில்லையோ
கொன்றவர்க் கருள் செய்ய என்று

பிதாவை நோக்கிய கொற்றவா
குற்றம் ஏது செய்தாலும் நீ எனைப்
பெற்றவா பொறுத் தாள்வையே. (ஆரும்)

வேத நாயக சாஸ்திரியார்.

திருப்புகழ். 175 தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

1. இல்லார்க்கும் எளியார்க்கும் ஏற்ற நற்சகாயன்
இழிவான பாவிகளை ஏற்றுக் கொள்ளும் நேயன்
சொல்லாதகத்தின் எண்ணம் தோன்ற வைக்கும் தூயன்
சுடராய் விளங்காநிற்கும் ஜோதிமயத் தேயன்.

2. மண்ணோரைக் காக்கவந்த மாண்புநிறைமூலன்
மனுவாகி பாவம் போக்கும் மாசில்லாத சீலன்
எண்ணாரை எண்ணி நலமீயுமனு கூலன்
இந்நாள் வரையிலெனைக் காத்த மனுவேலன்

3. சிற்றுரை யேற்றுவரம் தந்த அருள் நாதன்
சேராரைச் சிரடையத் தேடிய பொற்பாதன்
கற்றாரை ஞானிகளைக் கலங்கவைத்த வேதன்
கனிவான மாந்தர்மீது கருணையுற்ற போதன்.

4. எல்லார்க்குமீட்பனாக இறங்கிவந்த ஈசன்
எல்லாரும் தம்மை நம்ப ஏவினநற் பாசன்
புல்லான பாவிகட்குப் புகலளித்த ராசன்
புவியோர் எந்நாளும் சூழ்ந்து போற்றுபவ நாசன்.

பரமானந்தம் ஐயர்.

பாவ அறிக்கை.

இராகம் முகாரி.] 176 [சாப்புத்தாளம்.

பல்லவி.

ஐயையா நான் பாவி—என்னை
ஆளும் தயாபரனே!

சரணம்.

1. பொய்யாம் உலக உல்லாசத்தினால் மனம்போன வழி நடந்தேன்—ஏ
சையா அபயம் அபயம் இரங்கும்; மேசையா என்தாதாவே! (ஐயை)

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள் எத்தனை தீதுகளோ?—என
தத்தனே! என்பிழை அத்தனையும் பொறுத்தாண்டருளும் கோவே!
(ஐயை)

3. வஞ்சகமோ, கரவோ, கபடோ, மாய்மாலமோ, ரண்டகமோ,—மனச்
சஞ்சலம் நீக்கி, எனக்கருள் செய்யும் சமஸ்த நன்மைக்கடலே! (ஐயை)

4. பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும் பொறாமையும் ஆணவமும்-விட்
டுய்யும்படி அருள் செய்யும் அனாதி ஓர் ஏகத்திரித்துவனே! (ஐயை)

5. உன்னை எல்லாத்திலும் பார்க்கச் சிநேகித்துன தடியார்களையும்,—நான்
என்னைச் சிநேகிக்குமாப் போல் சிநேகிக்க ஏவும் பராபரனே. (ஐயை)

வேதநாயக சாஸ்திரியார்.

இராகம் பைரவி. **177** திரிசுரதாளம்.

பல்லவி.

இரங்கும் இரங்கும் கருணைவாரி
ஏசுராஜனே! பவ நாச நேசனே.

சரணங்கள்.

1. திரங்கொண்டாவி வரங்கொண்டுய்யச்
சிறுமைபார் ஐயா! ஏழைவறுமை தீர்ஐயா! —இரங்.

2. அடியன் பாவக் கடிவிஷத்தால்
அயர்ந்து போகின்றேன், மிகப்பயந்து சாகின்றேன்-இர.

3. நெஞ்சமும் எனை வஞ்சன் என்ன
நெருக்குதே ஐயா - மிகக்-கருக்குதே துய்யா —இர.

4. பேயும் என்னை மாயை பண்ண
உபாயம் தேடுதே - ஏழைக்-காயம் வாடுதே. இர.

5. நித்தம் என்னைச் சேதம் செய்ய
நினைக்குதே ஐயா-விஷம் முனைக்குதே மெய்யாய் —இர.

6. எரிநரகும் பெருநரகாய்
இரையுதே என்மேல்-மனப்-விரையுதேநின்மேல் —இர.

7. தீமையன்றி வாய்மை செய்யத்
தெரிகிலேன் ஐயா - தெரிவை-புரிகிலேன் ஐயா —இர.

8. பாவி ஏற்றும் கவிமன்ருட்டைப்
பரிந்துகேள் ஐயா- தயை - புரிந்து மீள் ஐயா. —இர.

வேதக்கண்.

178

கண்ணிகள்.

தேவாரம்.

1. நின்னடிக்கன்பு செய்யா நீசனே, ஈசனே உன்
பொன்னடிக்கன்பு செய்யும் புண்ணியர் சபையில்
நன்னடை கற்றுமில்லேன்; நன்றெலாம் நீங்கி நின்ற
என்னடை யிகழ்ந்து மில்லே னென்செய்வான்
தோன்றினேனே

2. கதிரொளி மழையப்பூமி கம்பிக்கச் சிமையங்கிறிப்
பிதிர் படச்சிலுவை மீது பெருந் தகை குருதிசிந்தி
வதைபடு திருக் கோலத்தை மனக்கண்ணுற்றரிசித்தேத்தி
இதயநெக்குருகுகில்லே னென்செய்வான் தோன்றினேனே

3. சுத்தனே அல்லன் நன்மை சொல்ல வெட்டுணையு மில்லேன்
பித்தனுன் பெரிய பாவி பிழைக்குமாறுணர மாட்டேன்
நித்த நீயருளுமீவை நினைக்கிலேன், நன்றி யீனம்
எத்தனை யிறைவனே யானென்செய்வான்
தோன்றினேனே.

4. அழுகிலேன் மனங்கசந்திட்டெளியனேன் பிழையையுன்னி
விழுகிலேனின் பாதாரவிந்தமே கதியென்றேத்தித்
தொழுகிலேனுவியாலே தொடர் பவத்துயிலை நீத்திங்
கெழுகிலேனீச னேயானென் செய்வான் தோன்றினேனே

கிருஷ்ண பிள்ளை.

இராகம் மோகனம்] 179 [சாப்புத்தாளம்.

பல்லவி.

ஆண்டவனே கிருபை கூராய் — எனக்
காதாரமுன்தனின் பாதாரவிந்தம்.

அனுபல்லவி.

மீண்டெனின்மேல் தயை பூண்டருள் நாதா
ஈண்டுனின் தாள் பணிந்தேன் திருப்பாதா —ஆண்

சரணங்கள்.

1. துர்க்குணத்திலுருவானேன்—பொல்லாத்
தோஷியாய்ப் பேயவன் தோழனாய்ப்போனேன்
நற்குணமென்னில் நான் காணேன்—நித்ய
நாசமரண நரகுக்குள்ளானேன்
சற்குண மன்பு தயை மிகு தேவா
தாவிப் பிடித்தேனுன் மேவிநீகாவா —ஆண்

2. பாவ ஊற்றெனதுள்ளம் மெய்யே—பாவம்
பாய் வழியென் செவி, வாய், கண், கால், கையே
நோவென்னைப் பிடித்ததென் ஐயே—எனை
நோக்கியுலகு சொல்லும் ஆறுதல் பொய்யே
ஏவைபுத்திரனழு தேங்கல் நோக்காயோ
என் பாவச் சேற்றை விட்டென்னைத் தூக்காயோ—ஆண்

3. சாபத்துக்காளாய்ப் போனேனே—சீனாய்
தன்னிடிகுமுறலின் சத்தங்கேட்டேனே
கோபத்தின் தீயைக்கண்டேனே—தேவ
கோஷ்ட முணர்ந்தே கலக்கமுற்றேனே
ஆபத்தில் நீ என் அடைக்கலம் தஞ்சம்
ஐயையோ எங்கோடும் என் ஏழை நெஞ்சம் —ஆண்

4. பாடெனக் காய்ப்பட்டாயன்றோ—என்தன்
பத்தா நின் சாவு நான் சாவதற்கென்றோ
கேடென்னில் நிற்பதும் நன்றோ—என்னைக்
கேளாதிருக்க உன்தன் மனங்குன்றோ
நாடறியப் பாடுபட்டுயிர் தந்தாய்
நம்பினபேர்க்காயுயிர்த் தங்கு சென்றாய் —ஆண்

5. பன்னித்தோமென்று சொல்வாயே—அப்போ
மாபாவி நான் மெய்யாய் உன்நேசச் சேயே
பொன்னுலகென்னைச் சேர்ப்பாயே—நின்னைப்
போற்றிடும் என் மன தோடென்தன் வாயே
மன்னவா துய்ய நல் இருதயந்தாராய்
வானவழி தன்னில் காவென்னை நேராய் —ஆண்

சாமுவேல் ஐயர்.

சகானு **180** ஆதிதாளம்.

திபதை—கண்ணிகள்.

1. நரனும் எளியேன் நற் கதி சேர,
பரனே, உன் அருள் செய், என்பவ வினை தீர.

2. தரணியோர்க்காக நரர் உருத் தரித்தாய்,
தகுநெறிவிளக்கிட மிகவும் சஞ்சரித்தாய்.

3. இகபரம் அனைத்தும் வகையுடன் படைத்தாய்,
எளி யோர்க்கென்றுவின் கொட்டில் வழிவரத்
தொடுத்தாய்.

4. பாவிகள் உயிர்த்து ஜீவனைக்கூட,
பரிவுடன் பாடடைந்தீர், திருரத்தம் ஓட.

5. இந்நிலத்தவர்க்காய் நல்நெறி முடிக்க,
இழி மரத்தறையுண்டீர் எழில் உடல் துடிக்க.

6. பாதகன் ஒருவன் தீதுணர்ந்துருக,
பரதீசில் அமைந்தீரே அருள் மிகப்பெருக.

7. மரணத்தின் கூர் போய் நரர் என்றும் நேரே
வாழ்ந்து பரத்துறவே ஆழ்ந்துயிர்த்தீரே.

ஜாண் பால்மர்.

ஜீவியப்போர், முடிவு.

இராகம்-இங்கிலீஷ் **181**

ஜெயராஜக் கொடி ஏற்றிக்காட்டியே
யுத்தம் செய்யச் செல்லுவோம்
வெற்றி மாலை சூடி ஜெயம் பெறவே
பூரிப்போடு பாடுவோம்.

பல்லவி.

செல்லுவோம், வெல்லுவோம்-நம் மீட்பர் நாமம் மூலமாய்
வெற்றி சிறப்பார், ஆளுவார்; பூமி எங்கும் ஜோதியாய்

சரணங்கள்.

1. எதிர்ச்சேனை சிறி பாய்ந்துவரினும்;
ராஜக்கொடி காட்டுவோம்
திரள் கூட்டமே போராட்டஞ் செய்யினும்
வெற்றி வேந்தராகுவோம்.

2. எந்தத் தேச ஜாதி பாஷைக்காரரும்
சுவிசேஷம் கேட்பதால்
ஏசுநாதர் மாண்பாய் ஆளும் காலமும்
மா சமீபமானதால்.

3. அந்த நல்ல காலம் வந்தவுடனே
ராஜரீகம் பண்ணுவார்;
அவபக்தி யாவும் ஒழிந்திடவே
நீதிமுறை நாட்டுவார்.

இராகம்-லாவணி **182** ஏகதாளம்

பல்லவி.

ஜீவ நதியின் ஓரமாய் சீயோன் பட்டணம் தெரியுது

அனுபல்லவி.

நித்தியம் நித்தியம் நித்தியமாக
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் கொள்ளலாம் —ஜீவ

சரணங்கள்.

1 பாவம் நிறைந்த லோகமே - உன்
பாக்கியம் எனக்கு வேண்டாமே — நித்திய

2 கண்ணி நிறைந்த லோகமே - உன்
கஸ்தி எனக்கு வேண்டாமே — நித்திய

3 எருசலேமின் ஓரமாய் - என்
ஏசுவின் சத்தங் கேட்குது — நித்திய

4 வயல் வெளியின் பக்கத்தில்—வான
தூதர் சத்தங் கேட்குது — நித்திய

5 கெத்செமெனே தோட்டத்தில் - என்
கிறிஸ்துவின் சத்தங் கேட்குது — நித்திய

6 பெந்தேகோஸ்தே ஆவியால் - என்
இதய முற்றும் நிரம்புது — நித்திய

7 அல்லேலூயா பாடுவேன் - என்
ஆண்டவர் நாமம் பரவவே — நித்திய

இராகம்-தோடி **183** மிஸ்ரதாளம்

1 மாட்சி மிகும் மோட்ச நகர் மகிமை என் சொல்வேன்
அந்த மங்களம் சேர் மாளிகைக்குள் என்று சேருவேன்.

2 நாமெல்லோரும் நாடுகின்ற பட்டணமது
நமது நாதரேசு வீற்றிருக்கும் பட்டணமது.

3 பட்டணத்து வீதியெல்லாம் சுத்தப் பொன்னுமே-அங்கே
பாடுவோரும் ஆடுவோரும் கோடா கோடியே.

4 முத்துமய மாயிலங்கும் பட்டணமது - நமது
முன்னோர் சிலர் போயிருக்கும் பட்டணமது.

5 ஜீவநதி பாயுகின்ற பட்டணமது - வெகு
சித்திரமுடனிலங்கும் பட்டணமது.

6 சாவு துக்கமே இல்லாத பட்டணமது - நிதம்
சங்கீதங்கள் தாம் முழங்கும் பட்டணமது.

7 எண்ணிறந்த தூதர் போற்றும் பட்டணமது—என்றும்
ஓயாமல் கீதம் பாடும் பட்டணமது --மாட்சி

இராகம்—காப்பி. **184** ஆதி தாளம்.

பல்லவி.

பொன்னகர் பயணம் போகும் புண்ணியர்களே - மகிமை
என்னவென்றுரைக்க வல்லோர் யாருமில்லையே.

சரணங்கள்.

1 உன்னத சுதனுக்கேதும் ஒப்புமை யுண்டோ - அவர்
தன்னுதிரந் தந்து கொண்ட தன்மையருமை — பொன்

2 லாசருக் கழுத கண்ணீர் நம்முடையதே - அவர்
நேசமார்பில் சாய்ந்து கொள்ளும் நித்திரையிதே — பொன்

3 வந்தழைத்துப் போயென்னோடு வைப்பேனென்றவர் -இன்று
வந்தழைத்துப் போகுமேன்மை மாந்தருக்குண்டோ-பொன்

4 மண்ணினு ளுண்டானவுடல் மண்ணேயாயினும் - யேசு
தன்னுருவோடே யெழுப்பும் சத்தியமிதே — பொன்

5 கண்ணீர் துடைத் தெம்மையாற்றும் கர்த்தருகில்-சென்றோர்
நண்ணியே ஜீவகனியுண்டின்னல் நீங்குவார் — பொன்

6 ஆட்டுக் குட்டியானவர் சிங்காசனங் கண்டு — புதுப்
பாட்டுகள் பாடி சுத்தர் கூட்டமடைந்தார் — பொன்

7 கர்த்தருக்குள்ளே மரிப்போர் பாக்கியரென்று - சொல்லும்
உத்தம வேதத்தினுண்மை உன்னதமல்லோ — பொன்

வேதநாயகம்.

குறிஞ்சி **185** ஆதிதாளம்.

பல்லவி.

மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்,
வானெக்காளத் தொனிமுழங்க.

அனுபல்லவி.

எரிபுகை மேக ரதமேறி
ஏசுமகாராஜன் வருங்கால், —மரித்

சரணங்கள்.

1. தூதர் மின்னூற்றிசை துலங்க,
ஜோதி வான் பறை இடி முழங்க,
பாதகர் நெஞ்சம் நடு நடுங்க,
பரிசுத்தோர் திரள் மனதிலங்க, —மரித்

2. வானம் புவியும் வையகமும்
மடமடவென்று நிலைபெயர,
ஆன பொருளெல்லாம் அகன்றோட,
அவரவர் தம்தம் வரிசையிலே, —மரித்

3. அழிவுள்ளோராய் விதைக்கப்பட்டோர்
அழியாமேனியை அணிந்திடுவார்;
எளியரூபமாய் விதைக்கப்பட்டோர்
என்றும் வாழும் ஜோதிகளாய் —மரித்

ஏசடியான் ஐயர்.

இந்துஸ்தானி, காபி. **186** திரிபுடை தாளம்.

பல்லவி.

சிலுவைக் கொடி பிடித்து, சிறுவரே
நாம் சென்றிடுவோம்

1. உலகினி லெங்கும் சென்று-ஓசன்னு! கீதம்பாடி
ஊழியம் நாம் செய்திடுவோம், ஊக்கமாக யேசுவுக்கு-சிலு.

2. நன்மை நிறையேசுவின்கை-நாம் செல்லும் பாதை காட்டும்
நம்பியே நாம் ஏகுவோமே, நமது பெலன் யேசுதானே
-சிலு.

3. சோதனைகள் வந்திடினும்-சோராமல் முயன்றிடுவோம்,
நாதன் யேசு கைவிடாமல் நம்மை நித்தம் தாங்குவாரே
- சிலு.

4. கெட்டோரை யேசுவிடம்-கூட்டியே சேர்த்திடுவோம்
மட்டில்லா யேசு அன்பை மானிடர்க்குப் பகர்ந்திடுவோம்—
சிலு.

சந்தியாகு ஐயர்.

இராகம் - சிந்து **187** அடதாளம்.

பல்லவி.

பாலியராய் துதி ஏற்றிறோமே—சிறு
நேயர்களாயும்மை போற்றிறோமே.

அனுபல்லவி.

பாரினிலேமனு ஈடேறிடப்பெரும்
பாரக்குருசினிலே மரித்து
பாதாள லோகமதிலிறங்கி - பரமானந்தமாய்
உயிர்த்தெழுந்தனரே.

சரணங்கள்.

1. தாளமேளங்களெல்லாம் முழங்க - காதல்
கன்னிமார் சிலம் பொலிக்க
நாதனைப்போற்றி நடனம் செய்ய
நாமெல்லாரும் கூடி களித்திடவே.

2. சங்கீதம் சூழ்ந்த சமுத்திரமே
எங்கும் நிறைந்த பராபரமே உன்
தங்க முகத்தொளி வீசிடவே
இங்கேயும் வந்து உயிர்த்தனரே.

3. வானோர்கள் போற்றிடும் வல்லவனே
ஞானம் நிறைந்த நன்மைக் கடலே
ஞானகுணமுள்ள தற்பரனே
நானிலத்தில் வந்த வானவனே.

இந்துஸ்தான்-டப்பா **188** ஆதி தாளம்.

பல்லவி.

இந்நேரம் வந்தென்னை சுத்தம் செய்யும்
சுத்தம் செய்யும்—தேவா—சுத்தம் செய்யும்.

சரணங்கள்.

1. பாவ துக்க மெல்லாம் நீங்கிடவே,
நீங்கிடவே—சுவாமி—நீங்கிடவே.

2. ஊழ் வினை யாவையும் போக்கிடவே
போக்கிடவே—சுவாமி—நீக்கிடவே.

3. உம் வாக்கை நம்பி நான் இப்போவாரேன்,
இப்போ வாரேன்—சுவாமி—இப்போவாரேன்.

4. கல்வாரி ஜீவாறு ஓடுதிப்போ
ஓடுதிப்போ—எனக்காய்—ஓடுதிப்போ.

5. இயேசுவின் ரத்தத்தால் சுத்தம் செய்யும்,
சுத்தம் செய்யும்—சுவாமி—சுத்தம் செய்யும்.

இராகம்-இங்கிலீஷ். **189**

பல்லவி.

ஏசு நேசரறிவா ரென்னை
என்றும் என்னோடிருப்பாரே — ஏசு.

1. ஏசுவைப்போல் நல்ல நேசருண்டோ
இல்லையே, இல்லையே,
ஆத்தும நோய் தீர்க்கும் வைத்தியருண்டோ
இல்லையே, இல்லையே.

2. ஏசையர் மேன்மைக்கோர் நிகருண்டோ
இல்லையே, இல்லையே,
ராஜனின் தாழ்மைக்கோர் ஒப்புமுண்டோ
இல்லையே, இல்லையே — ஏசு.

3. எப்பொழுதாயினும் கை விடுவாரோ
இல்லையே, இல்லையே,
காரிருளில் அவர் நீங்குவாரோ
இல்லையே, இல்லையே; — ஏசு.

4. யாரும் அவரில் ஏமாந்த துண்டோ
இல்லையே, இல்லையே,
எப்பாவியும் தள்ளப்பட்ட துண்டோ
இல்லையே, இல்லையே. ஏசு.

5. ஏசுவைப்போல் மீட்பரெங்குமில்லை
இல்லையே, இல்லையே,
அன்பரில் அன்பர் வேருருமில்லை
இல்லையே, இல்லையே — ஏசு.

இராகம்-மாஞ்சா. **190** அடதாளம் சாப்பு.

1. கண்ணுக்குக் காணும் பூவுமல்ல—இந்த
மண்ணில் முளைத்தோங்கும் பூவுமல்ல - இந்த
மாந்தர்கள் அணியும் பூவுமல்ல - அது அன்பு

2. ஜாதி விலகிவரும் தோஷமல்ல - அது
சாத்தானுல் உண்டாகும் தோஷமல்ல - மனு
மக்களால் உண்டாகும் தோஷமல்ல - அது சந்தோஷம்

3. சாஸ்திரத்தில் சொல்லும் தானமல்ல - அது
சண்டையில் முந்திடும் தானமல்ல - மிக
சலிப்புடனே செய்யும் தானமல்ல - அது சமாதானம்

4. காகிதத்தில் எழுதும் மையுமல்ல - அது
கண்ணுக்கழகிடும் மையுமல்ல - இந்த
மாந்தரை மயக்கிடும் மையுமல்ல - அது பொறுமை

5. தாமர்கள் செய்திடும் தருமமல்ல - இந்த
தரணியோர் புகழும் தருமமல்ல - உடன்
தமயர்கள் புரிந்திடும் தருமமல்ல - உடன் தரும், தயவு

6. கல்வினை பயப்பது குணமன்று,
மிக நல்லோராய் நடப்பது குணமன்று
மிக நன்மயம் வருவது குணமன்று - அது நற்குணம்

7. பூக்களில் எழும்பும் வாசமல்ல—அது
பன்னீரால் உண்டாகும் வாசமல்ல—இந்த
பாவையர் தெளித்திடும் வாசமல்ல—அது விசுவாசம்

8. சம்பனன் உள்ளோன் சாத்மீகனும்—நல்ல
சடங்கை ஆசிரிப்போன் சாத்மீகனும்—நல்ல
சாயல் நிறைந்தோன் சாத்மீகனும்—அது நவில் சாந்தம்

9. அகலிடம் வசிப்பது அடக்கமல்ல—பின்னும்
அகலே தொழுவதும் அடக்கமல்ல
பிறமறைக்கா மறைப்பது அடக்கமல்ல—
அது இச்சையடக்கம்

10. ஆவியின் கனிகளோ ஒன்பதாம்
அதன் கருணைபலன் இங்கு ஜொலிப்பதாம்
அதை ஆசிப்புவர்கள் மனங் களிப்பதாம்—நிலை நிற்பதாம்.

191

எழுப்புதல் கீதங்கள்.

பல்லவி.

காண்பேன் நான் இயேசு ராஜனை
காண்பேன் நான் இயேசு ராஜனை
காண்பேன் நான் இயேசு ராஜனை
நான் காண்பேன் நிச்சயம்.

1. ப்ரார்த்தனையில் காண்பேன் நான் இயேசு ராஜனை (3)
நான் காண்பேன் நிச்சயம் —காண்

2. தூதர் மத்யில் காண்பேன் நான் இயேசு ராஜனை (3)
நான் காண்பேன் நிச்சயம் —காண்

3. சத்ரு பயம் நீக்கின இயேசு ராஜனை (3)
நான் காண்பேன் நிச்சயம் —காண்

4. ரோகிகட்கு வைத்யராம் இயேசு ராஜனை (3)
நான் காண்பேன் நிச்சயம் —காண்

5. சுத்தமாக்கி மன்னிக்கும் இயேசு ராஜனை (3)
நான் காண்பேன் நிச்சயம் —காண்

6. வன் குருசிலேறின இயேசு ராஜனை (3)
நான் காண்பேன் நிச்சயம். —காண்

192

பல்லவி.

இத்தரையில் என்னை மீட்க ஏழையாக வந்தவா
பெத்தலையிலே பிறந்த மன்னவா!

அனுபல்லவி.

பாடுவேன் பாடுவேன் உன் திரு நாமத்தை
தேடுவேன் தேடுவேன் தேடுவேன் உன் திவ்ய நாமத்தை
தேடுவேன் தேடுவேன் உன் திவ்ய நாமத்தை
என்னைத் தேடிவந்த இயேசு நாதனே.

சரணங்கள்.

1. பெற்ற தாயுந்தந்தையும் எனின் பிரிய இயேசுவே
பேணி என்னைக் காப்பவரும் நீரல்லோ —பாடு

2. ஆடையாபரணங்கள் ஆகாரமும் நீர்தானல்லோ
ஆஸ்தியும் சம்பாத்தியமும் நீரல்லோ —பாடு

3. நித்தம் நித்தமும் நினைக்கும் சத்தியமும் நீரல்லோ
பித்தனைப் பிரபாக்குவோரும் நீரல்லோ —பாடு

4. ஏழை என்னைப் போதிவிக்கும் உபாத்தியாரும் நீரல்லோ
பாடங்கள் படிப்பதுவும் உம்மிலே. —பாடு

193

மன்னன் முன்னே நிற்போம் நாம் பொன்முடி சூடி
மன்னும நித்தியானந்தம் மகிமை ஜீவனும்.

பல்லவி.

அல்லேலூயா கீதம் பாடுவோம் நாம்
அல்லேலூயா கீதம பாடுவோம் நாம்
பாடுவோம் நாம் பாடுவோம் நாம்
அல்லேலூயா கீதம்.

சரணங்கள்.

2. அன்பரேசு எம்பிரான் அருகில் சேருகில்
துன்பமெல்லாம் இன்பமாய் மாறும் நிச்சயம்.

3. சாவு அற்ற லோகத்தில் சத்துரு பயமேன்
மேவு கர்த்தர் நம்மவர் மித்ரு ஆவாரே.

4. விண்ணில் சேரும் சுத்தரின் கண்ணின் நீரெல்லாம்
மண்ணில் வந்த புண்ணியவான் அன்று நீக்குவார்.

5. விண்ணோர் வீணை தாளமும் பாடும் ஓசையும்
மண்ணோர் பாடும் மகிமை இன்பகீதமும்.

6. தெய்வமக்கள் யாவரும் ஒன்றாய் வாழ்ந்திடும்
தேவமைந்தன் தந்திடும் திவ்ய ராஜ்யத்தில்.

194

பல்லவி.

(1) வானம் பூமி யாவற்றிலும்
யேசு மேலானவர்
மனிதர் தூதர், பேய்தானும்
அவர் முன் விழுவார். (நான்)

நான் நம்புவேன்; நான் நம்புவேன்
யேசு எனக்காய் மரித்தார், மரித்தார்
பாவம் நீங்கச் சிலுவையில்
உதிரம் சிந்தினார்.

சரணங்கள்.

1 ரட்சகர் உயிர் விட்டதும்
எந்தனுக் காகவே
வேறெந்த வாக்கு வாதமும்
வேண்டிய தில்லையே (நான்)

2 பாவியின் பயம் யாவையும்
நீக்கும் நாமமிது
நரகத் தண்டனையையும்
தொலைத்திடும் இது. (நான்)

3 பாவச் சங்கிலி யாவையும்
தறிப்பார் என் யேசு
வேதாளத்தின் தலையையும்
நசுக்குவார் யேசு. (நான்)

4 பாதத்தில் மாளும் யாவர்க்கும்
உயிரளிப் பாரே
பெலனற்ற ஆத்மாவுக்கு
சக்தி கொடுப்பாரே. (நான்)

---

(2) பல்லவி.

இன்ப துன்ப நேரத்திலும்
உன் அன்புள்ள இயேசுவைப்பார்.

சரணங்கள்.

1 இன்பத்தினால் அகமகிழ்ந்து
கிலேசத்தினால் துக்கித்து
சிற்றின்பப் பேருலகில்
சிக்கிக்கொண்டு இருக்கும் போதும். —இன்ப

2 உறுமையினால் யாசித்து
வாடுமிகப் படும்போதும்
பத்தான் உனைப் பகடி செய்து
சான் விசுவாசத்தைக் குறைக்கும் போதும்—இன்

3 கடும் நோயால் பெலன் குன்றி
பெலவீனத்தால் தள்ளாடி
ஜீவன் உனக்குக் கசப்பாகி
சாவை நீ விரும்பும் போதும் —இன்ப

4 நான் என் இயேசுவின் தரிசனத்தை
நிமிஷந்தோறும் காண்கிறதால்
நான்தான் பயப்படாதிருங்கள்
என்றவர் என்னைத் தேற்றுகிறார். —இன்ப

இராகம் **195** [ஆதி-தாளம்.

பாவ தோஷம் நீக்கிட, மீட்பரின் ரத்தம் தானே!
தீய குணம் மாற்றிட, மீட்பரின் ரத்தம் தானே!

பல்லவி.

மெய்யாம் ஜீவ நதி! பாவம் போக்கும் நதி!
வேறே நதியை அறியேன்! மீட்பரின் ரத்தம் தானே!

சரணங்கள்.

1 என்னைச் சுத்தமாக்கிட, மீட்பரின் ரத்தம் தானே!
மன்னிப்பை நான் பெற்றிட, மீட்பரின் ரத்தம் தானே!

2 வேறே ரட்சிப்பில்லையே! மீட்பரின் ரத்தம் தானே!
புண்ணியக்கிரியை செல்லாதே! மீட்பரின் ரத்தம்தானே!

3 மோட்ச மார்க்கம் இதுவே! மீட்பரின் ரத்தம் தானே!
ஏக சுத்த தீர்த்தமே! மீட்பரின் ரத்தம் தானே!

196

பல விஷய கீதங்கள்.

பத்துக் கற்பனைகள்.

(சதகம் பாடுவதுபோல்)

உன் தேவ னாகிய கர்த்தர் நாமமே தவிர
உனக்குவேர் தெய்வம் வேண்டாம்
உயர் வான மீதிலும் பூமி தண் ணீரிலும்
உண்டான சிருஷ்டி வஸ்துக்
கொத்ததொரு விக்ரகம் சுரூபந் தனைச்செய்ய
சித்தமது கொள்ள வேண்டாம்
ஓதவும் வணங்கவும் நமஸ்காரம்ய புரியவும்
உன் மனம் நாட வேண்டாம்
அவசிய மில்லாமல் அவர்திரு நாமத்தை
அணுவேனும் உரைக்க வேண்டாம்
திருநாளை ஆசரித் தாலயம் சென்றுநீ
திருவசனம் கேள் மனமே

சந்ததம் வாழவும் நலம்பெற உந்தனின்
தாய்தந்தை பெரியோர் தமை
தரணியில் கனம்பண்ண முந்துவது உந்தனின்
தலைமேல் பொறுத்த தன்றோ
உன்னுயிர் போல்நினைக் தடுத்தவனை ஓர்காலும்
ஒடுக்கிக் கொலை செய்யாதே
விபசாரம் பண்ணாதே களவு நீ செய்யாதே
வேறொரு வனுக்கு நேரே
பகிரங்க மாகப் பொய் சாட்சி நீ சொல்லாதே
பிறன் வீட்டை இச்சியாதே
பிறர்மனைவி வேலையாள் மிருகங்கள் வேறெதையும்
பிடுங்க நீ இச்சியாதே
கர்த்தர் அருளிச்செய்த பத்துக் கற்பனைகளை
கருத்தில் நீ வைமனமே
கருணை நிறைதற்பரன் நீதி நெறி தவறாது
கங்குல் பகல் வாழ்வதறிவு
நேராய் கைக்கொள்ளார் சந்ததி மூன்றுக்கும்
வரும் பலன் துக்க துன்பம்
சீராய் கைக்கொள்வோர்க் காயிரம் தலை முறை
திரள் ஆசீர் நன்மை பெருகும்.

கருணாகரபுரி.

இராகம்-பியாகடை **197** சாபு தாளம்.

பாக்கிய கீதங்கள்.

(1) மரியம்மாள் கீதம்.

1

பல்லவி

என்ன பாக்கியம் அம்மா! ஏகனருள்
ஏழைக்குக் கிடைத்த தம்மா!

அனுபல்லவி.

உன்னியே தவம் புரிந்தோர் அனேகரிருக்க,
கன்னியெனை நினைத்த கருணையை என்ன சொல்ல?
—என்ன

சரணங்கள்.

1. என்னாத்துமாவே! நீ இறைவனை
என்னாளுமே துதிப்பாய்!
என்னாவியே! தேவரட்சகனையறிந்து
என்றும் வணங்கி மகா நன்றியோடு களிப்பாய்! —என்ன

2. பாக்கியவதியானேன்—இப்பூவின் கண்
யார்க்கு மதிப்பானேன்;
வாக்கிலே வல்லபரன் மகிமை எனக்குச் செய்தார்;
நோக்கிலவரிய நாமம் பரிசுத்தமே —என்ன

3. ஆண்டவர் இரக்கம்—அடியார்க்கு
ஆண்டாண்டாக நிலைக்கும்;
மீண்டுமவர் புயத்தால் மெத்தப்பராக்கிரமஞ் செய்தார்
மேட்டிமையுள்ளவரை மேதினியில் அழித்தார் —என்ன

4. பலவான்களானோரை—ஆசனம் விட்டு
பாதாளத்தில் தள்ளினார்;
தலமதில் தாழ்ந்தோரைத் தம்மாசன முயர்த்தி
தாகம் பசியுள்ளோர்க்குச் சகல நன்மை யளித்தார் —என்ன

5. நேசன் ஆபிரகாமை—பின் சந்ததியை
நினைத்திரக்கஞ் செய்தோனை
தாசன் இஸ்ரவேலைத் தாங்கியே யாதரித்த
தற்பரன் கிருபையை நித்தமு மறவேனே. —என்ன

பரமானந்தம் ஐயர்.

இராகம்-சுருட்டி] (2) பாக்கியர் யார். [மிஸ்ரதாளம்.

பல்லவி.

பாக்கியரிவ ராவாரே – பரமன் முன்னே
பாக்கிய ரிவ ராவாரே.

அனுபல்லவி.

பாக்கியரிவ ரென பகவான் திறந்து சொன்ன
வாக்கியங்களைத் தினம் மனதிலே எண்ணுவீரே (பாக்)

சரணங்கள்.

1 ஆவியில் எளிமையுள்ளார் – மாதாழ்மையுள்ளார்
பாவிக ளறிந்திடா பரலோக ராஜ்யத்தில்
ஆவலுடனே சேர்ந்து ஆண்டவரைத் துதிப்பார் (பாக்)

2 துக்கம் துயரடைவோரை – பல விதத்தும்
பக்கத் துணையிருந்து பாதுகாப்பாரே கர்த்தர்
தக்க உதவிபுரிந் தாறுத லளிப்பாரே (பாக்)

3 சாந்த குணம் நிறைந்தவர் – எவ்வேளையிலும்
வேந்த ரட்சகனோடே மேதினியிலே வாழ்ந்து
காந்த மணிந்து அரசாட்சியும் செய்குவரே. (பாக்)

4 நீதியில் பசிதாகித் தோர் – நிதம் நிதமே
பூதியத்திலே மாந்தர் புகழ்ந்து போற்றுவிடினும்
ஜோதி தேவனாலென்றும் திருப்தியடைவார்மெய்யே (பா)

5 இரக்க குணம் உள்ளவர்கள் – எவர்கள் மீதும்
இரக்கம் பெறுவதல்லால் ஏக பிதாவின் மன
துருக்கப்படி நடத்தும் உரிமை யடைந்து வாழ்வார் (பா)

6 இதயத்தே சுத்தம் பெற்றவர் – இவ்வுலகின் கண்
உதய மதிய மாலை உறங்கும் ரா வேளையிலும்
உற்சாகமாக தேவ ரட்சகன் முகம் பார்ப்பார். (பாக்)

7 சமாதானந்தனை முடிப்போர் ஜனங்கட்குள்ளே
அமலனருக் கருமைன யான் புத்திர ராகும்
ஆதிக் கத்தை யடைந்து அன்புடன் பிழைப்பாரே. (பா)

8 யேசு ரட்சக னிமித்தம் – துன்ப மடைவோர்
பேசிடும் பலவித தீமை மொழிகள்–நோக்கா
தீசன் ராஜ்ஜியம் சேர்ந்து ஏற்றநற்பலன் காண்பார் (பாக்)

பரமானந்தம் ஐயர்.

198 (1) அன்பே பிரதானம்.

இராகம் கமாஸ் பல்லவி. ஆதி தாளம்.

அன்பே பிரதானம் - சகோதர
அன்பே பிரதானம்.

சரணங்கள்.

1 பண்புறு ஞானம் பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம், — இவைகளிலெல்லாம் —அன்பே

2 பல பல பாஷை படித்தறிந்தாலும்
கல கலவென்னும் கைமணியாமே —அன்பே

3 என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்,
அன்பிலையானால் அதிற்பயனில்லை —அன்பே

4 துணிவுடனுடலைச் - சுடக்கொடுத்தாலும்
பணியவன் பில்லாற் - பயனதிலில்லை —அன்பே

5 சாந்தமும் தயவும் - சகல நற்குணமும்,
பேர்ந்த சத்தியமும் - பொறுமையுமுள்ள —அன்பே

6 புகழிறுமாப்பு - பொழிவு பொறாமை
பகைய நியாயப் - பாவமும் செய்யா —அன்பே

7 சினமடையாது - தீங்கு முன்னாது
தினமழியாது - தீமை செய்யாது —அன்பே

8 சகலமும் தாங்கும் - சகலமும் நம்பும்,
மிகை படவென்றும் - மேன்மை பெற்றோங்கும் —அன்பே

சுத்த சாவேரி (2) சகோதர ஐக்கியம். திரிபுட தாளம்.

1 சகோதரர்களொருமித்துச்
சஞ்சரிப்பது எத்தனை
மகா நலமும் இன்பமும்
வாழ்த்தல் செயலாயிருக்குமே.

2 ஆரோன் சிரசில் வார்த்த நல்
அபிஷேகத்தின் தைலந்தான்
ஊறி தாடி அங்கியில்
ஒழுகுமனந்தம் போலவே.

3 எர்மோன் மலையின் பேரிலும்
இசைந்த சீனாய் பேரிலும்
சேர்மானமாய்ப் பெய்கின்ற
சீதளப் பனிகள் போலவே.

4 தேச மார்க்கம் இரண்டிற்கும்
சேர்ந்த திசைந்த தாகிய
ஆசீர்வாதம் ஜீவனும்
அங்கு மென்றுமுள்ளதே.

199

(1) காணிக்கை கீதம்.

"உனக்கோத்தாசை வரும் நல் என்ற-மெட்டு."

இராகம்-பிலகிரி] பல்லவி. [ஏகதாளம்.

கர்த்தருக்குக் காணிக்கை பக்தியாய் கொண்டுவாரும்,
அத்தன் கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பார் நித்தம்

1 திருச்சபையோரே நீங்கள்-தேவ சன்னிதி தனில்
வரும்போது வெறுங் கையாய்-வர வொண்ணா
தென்றுணர்ந்து

2 தசம பாகங்க ளெல்லாம்-சுவாமி பண்ட சாலைக்கு
நிசமதாகவே கொடும்-நன்மை மிகப் பெறுவீர்

3 சிறுக விதைக்கிறவன்-சிறுகவே தானறுப்பான்
பெருக விதைக்கிறவன்-பெருகவே தானறுப்பான்

4 அவனவன் விசனமும்-அலட்டுதலோடு மல்ல
அமலன் அன்பு கூறவே-அகமகிழ் வோடு தானே

5 நெல் கம்பு கேப்பை சோளம்-புல் காடைக்கண்ணி சாமை
வெல்லம் பருத்தி வற்றல்-வெங்காயம், பயறுகள்

6 தேங்காய் கிழங்கு மல்லி-தேன் நெய் காய்கனிகளும்
பாங்காய் நீ செய்து வரும் பல வேலைப் பொருள்களும்

7 காசு, ரூபாய் நகைகள்-பட்டு நெசவுப் பொருள்
முட்டை கோழி புறாக்கள் - மாடு கிடா யாடுகள்

8 யாவிலும் மேலானதாய்-தேவனுக்கே யுமது
ஆவி ஆத்துமா சரீரம்-யாவும் படைத்தே இப்போ

9 மனிதர் உம் நற்கிரியை-மதித்து மகா தேவனே
மகிமைப் படுத்த உங்கள்-வெளிச்சம் பிரகாசிக்க.

---

(2) தருமம்.

இராகம் செஞ்சுருட்டி] பல்லவி. [ஆதி தாளம்.

தருமம் செய்ய நிருபந் தனில் சாற்றுதே பாரும்
சாற்றுதே பாரும்-வேதம் தூற்றுதே கேளும்

1 தசம பாகம் தருவோர்க்கு-தற்பரன் ஈவார்
தற்பரன் ஈவார்-ஆசீர் தாராளமாய் ஈவார்

2 சோதித்துப் பார்க்கச் சொல்லி தேவன் சொன்னாரே
தேவன் சொன்னாரே-என்றும் வேதம் சொல்லுதே

3 வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்
கொடுப்பதே பாக்கியம்-பேர் எடுப்பதே யோக்கியம்

4 இரண்டு காசு போட்ட ஏழை விதவையைப் பாரு
விதவையைப்பாரு-இயேசு வியந்தைக் கேளு

5 விசனமாயும் கட்டாயமாயும் தருமம் செய்யாதே
பலனும் செய்யாதே-ஒரு பலனும் செய்யாதே

6 கொர்னேலி யுவுக்குப் போய் கூப்பிட்டுச் சொல்வார்
கூப்பிட்டுச் சொல்வார்-கூப்பிட்டுச் சொல்வார்

7 அனனியா சப்பீராள் போல ஆகவேண்டாம் நீ
ஆகவேண்டாம் நீ-அப்படி போகவேண்டாம் நீ

8 மக்கதோனியரைப்போல மனமும் வேண்டுமே
மனமும் வேண்டுமே-கையில் பணமும் வேண்டுமே

9 கலசக் காணிக்கையைக்கொண்டு களிப்புடன் வாரும்
களிப்புடன் வாரும்-கர்த்தனிடத்திலே சேரும்.

200

பிரிவு உபசாரம்.

ஆனந்தபைரவி] [ஆதிதாளம்

பல்லவி.

இன்னமும் நாம் யேசு பாதத்தில்—சந்திக்கும் வரை
என்றும் கர்த்தருன்னைக் காப்பாரே.

அனுபல்லவி.

தன்னுடைய காவலுன்மேல்—தப்பாமல் வைத்துத்தற்
காத்துத்
தன்னிருகரத்தால் உன்னைத்—தாங்கியே காத்துக்கொண்டு

சரணங்கள்.

1. தன்னிருசிறகுகளின்கீழ்—உன்னைமறைத்து
தாங்கித் தயவோடு காப்பாரே!
இன்னமும் திருமன்னாவை—என்றும் உனக்களித்து
இன்பமோடே உன்னைத்தாங்கி—எல்லாத் தீங்குந்
தற்காத்து,

2. ஜீவியத்தின் பாரம் உன்னையே—வதைத்திடாமல்
சீருடனே கர்த்தன் காப்பாரே!
பாவச் சோதனைகள் உன்மேல்—படர்ந்து பிடித்திடாமல்
பாலித்தணைத்தே உன்னையே—பட்சமோடே
பாதுகாத்து—

3. ஆண்டவனின் அன்பின் கொடிதான்—உன் மேல் பறந்து
ஆட, மகிழ்ந்தானந்தங் கொள்வாய்!
நீடிய ஆயுளளித்து—நிதமும் சுகத்தைத்தந்து
நீண்ட காலமாக உன்னை—நேசித்துப் பரிபாலித்து,—

சிங்—நெய்யூர்.

விசுவாசப் பிரமாணம்.

உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வவல்லவராய்
இலகு மருளாம் தந்தையாம் எம்பிரான்தனை நம்புகிறேன்.
அவரொரு பேருமைந்தனுமாய் ஆதிமுதலெங்கர்த்தனு
மாய்த்
தவறி லேசுக்கிறிஸ்துவையும் சந்ததமே யான் நம்புகிறேன்.
பரிசுத்தாவி அருளதினல் படிமேல் கன்னிமரியிடமாய்
உருவாய் நர ரவதாரமாய் உதித்தாரெனவும் நம்புகிறேன்.

பொந்து பிலாத்ததிபதி நாளில் புகலறுபாடுகளையேற்று
உந்துஞ்சிலுவை யறையுண்டு உயிர்விட்டாரென நம்பு
கிறேன்.

இறந்தே அடங்கிப் பாதாளம் இறங்கி மூன்ரும் தினமதிலே
இறந்தோ ரிடத்தினின்றே உயிரோடெழுந்தாரெனவும்
நம்புகிறேன்.

சந்தத மோட்சம் எழுந்தருளிச் சருவ வல்லபரானன
எந்தை தன் வலபாரிசமே யிருக்கின்ருரென நம்புகிறேன்.

உயிருள்ளோரை மரித்தோரை உத்தம நியாயந்தீர்த்திடவே
ஜெயமாய்த் திரும்ப வருவாரெனச்சிந்தையார நான் நம்பு
கிறேன்

பரிசுத்தாவியை நம்புகிறேன், பரிசுத்த மாபொது சபையும்
பரிசுத்தர்களின் ஐக்கியமும் பரிவாயுண்டென நம்புகிறேன்.

பாவமன்னிப்புளதெனவும், மரித்தோர் உயிர்த்தெழுவா
ரெனவும்,
ஓவா நித்திய ஜீவனுமே உளதெனவும் நான் நம்புகிறேன்.

கர்த்தருடைய ஜெபம்.

பரமண்டலங்களில் இருக்கும் எங்கள்
பிதா உன் நாமம் அர்ச்சிக்கப்
பட உந்தனின் ராச்சியம் வருகப்
பரத்துன் சித்தம் செய்வதுபோல்

தரைமண்டலத்தும் செய்யும் நித்தம்
தரும் எம் அப்பம் இன்றெமக்கு
தாரும் எங்கள் கடன்காரர்
தமக்கு நாங்கள் பொறுப்பதுபோல்

நிரைகொண்டெமக்கும் பொறுத்துவிடும்
நெடுஞ் சோதனைக்குள் படப்புரியாய்
நீக்கித் தீங்கை ரட்சை செய்யும்
நிலைராச்சியம் வல்லமை மகிமை

உறை கொண்டுமக்கே என்றென்றைக்கும்
உண்டாயிருக்குது ஆமேன் என
ஓத ஜெபத்தின் முறைமை எமக்
குரைத்தாய் வேதத்தொரு முதலே
சுவாமி - ஆமேன், சுவாமி - ஆமேன், சுவாமி,
ஆமேன்.

அர்ச்சனை கீதம்.

இராகம், கரஹரப்பிரியா.] [ஆதி தாளம்'

பல்லவி.

அண்ணலே நீ அன்புறும் அன்னையும் நீ—நீர்
என் மேல் கடாட்சம் கூறுவீர் கலியகல.

அனுபல்லவி.

சிந்தனையுடனே யுன்னை வந்தனை செய்தேனே தேவா
பந்தனையகன்ற எந்தாய் பாவை மரியின் மைந்தா. (அண்)

சரணம்.

பல தலங்கள் அலைந்தும் ஓர்பலன் காணேன்
பரிதாப மிகுதியென் சஞ்சலம் அதிகம்
நிலைவர முளகுரு உனதடி வீழ்ந்தனன்
அலகை வியலகற்றி அருள் புரிவாய் மெய்யாய் (அண்)

வேதநாயகம் ஐயர்.

Copies can be had from:—

1. **Rev. G. Stephen,** B. D.,
Karunagarapuri,
KINETHUKADAVU,
(Via) Podanur.

2. **C. G. Diehl,**
Manager,
E. L. M. Publishing House,
TRANQUEBAR.

3. **Rev. Sam Duraikan,**
Manager,
Book Depot,
Tranquebar House,
TRICHY.

4. **Rev. B. Envall,**
Treasurer,
C. S. M. Treasury,
DINDIGUL.